கங்கை கொண்ட சோழன்

இது
'பண்டைத் தமிழ் எழுத்துக்கள்' என்னும்
நூலின் ஆசிரியர்

தி. நா. சுப்பிரமணியன்

அவர்கள் எழுதியது.

சென்னைப் பல்கலைக் கழகத்
தமிழாராய்ச்சித்துறைத் தலைவர்

திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.,

அவர்கள் சிறப்புரை கொண்டது.

விவேக போதினி காரியாலயம்,
மயிலாப்பூர், சென்னை

உரிமை பதிவு செய்யப்பட்டது

விலை ரூ. 1-8-0

முன்னுரை

நமது காட்டிலே சிறந்து விளங்கிய பெரியோர்களுடைய சரிதங்களைத் தெரிந்துகொள்ளுதல் மாணவர்களுடைய கடமைகளுள் முக்கிய மானதாகும். இச்சரித உணர்ச்சியிலேதான் தேசாபிமானம் முதலிய அருங்குணங்கள் நிலைத்து நிற்கவேண்டும். சரிதவுணர்ச்சி பரவுதற்கு நன்றாக ஆராய்ந்தெழுதப்பட்ட சரித நூல்கள் வெளிவரல் இன்றியமையாததாம். இவ்வகை நூல்கள் இப்பொழுது சில காலமாகத்தான் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அரசியல் முறையினும், கொற்றம் பெருக்கிய முறையினும், பக்தி வழிபாட்டு முறையினும், சோழவரசர்கள் பலர் பெருமையுற்று விளங்கினர். அவர்களுள் ஒருவரது சரிதத்தை இச் சிறு நூல் உணர்த்துகின்றது. இதனை எழுதியோர் நீண்டகாலமாகச் சரிதவாராய்ச்சியில் உழைத்து வருபவர்; கல்வெட்டு முதலியன வாசிப்பதிலும் தக்க பயிற்சியுடையவர்; சரித்திரம் பற்றிய பல கட்டுரைகட்கு ஆசிரியர். இப்பொழுது இவர் தமிழிலும் சிறந்த நூல்கள் ஒரு சில எழுதி வருகின்றனர்.

மாணவர்கள் எளிதில் கற்று இன்புறும் வண்ணம் இந்நூல் எளிய நடையில் நன்முக எழுதப்பட்டுள்ளது. இதனைத் தமிழ் மக்கள் தக்கவாறு போற்றுவரென்று நம்புகிறேன்.

S. வையாபுரிப் பிள்ளை,
தமிழாராய்ச்சித்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

ஆசிரியர் முகவுரை

கங்கை கொண்ட சோழனுடைய பெயரை அறியாதவர் தமிழ் நாட்டிலே இல்லை யென்று கூறலாம். நம் நாட்டிலே திகழும் கோயில்களிலோ அவற்றின் பக்கங்களிலோ காணப்படும் மண்டபங்கள் பலவற்றுக்குக் 'கங்கை கொண்டான் மண்டபம்' என்ற பெயர் வழங்கப்படுவதை நாம் அறிவோம். இது தமிழ் மக்கள் இம்மன்னனைப் போற்றி வருவதையே குறிக்கின்றது.

சரித்திர நூல்களில் இம் மன்னன் முதலாம் இராஜேந்திர சோழன் என்று குறிக்கப்படுவான். இராஜேந்திரன் என்ற பெயருடைய சோழ மன்னர்கள் பலர் இருந்தமையாலும், பிற மன்னர்களுக்கு வழங்காத 'கங்கை கொண்ட சோழன்' என்னும் பெயரால் இவன் சிறப்பாக அறியப்படுவதாலும், இந்த நூலுக்கு அந்தப் பெயரே இடப்பட்டது.

தஞ்சையில் வீற்றிருந்து சோழ ஸாம்ராஜ்யத்தை அரசு புரிந்த சக்கரவர்த்திகளுள் இவனே தலைசிறந்து விளங்குபவன். இவன் காலத்திலேதான் அந்த ஸாம்ராஜ்யம் உச்ச ஸ்தானத்தை அடைந்திருந்தது. இவன் புகழ் பரத கண்டத்தின் எல்லையைக் கடந்து, 'பிரஹத் பாரதம்' எனப்படும் மலேயா தீபகற்பம், சுமத்ரா, ஜாவா முதலிய தேசங்களிலும் சீன தேசங்களிலும் பரவியது.

சோழ வம்சத்தின் நடுநாயகமான இவன் சரித்திரத்தை நான் எழுதி வந்த காலத்தில்

சென்னைப் பல்கலைக் கழகச் சரித்திரப் பேராசிரியர் ம-ரா-ரா-ஸ்ரீ க. அ. நீலகண்ட சாஸ்திரிகள் அவர்கள் பெரிதும் உதவி புரிந்தார்கள். அவர்கள் ஊட்டிய ஜீவனுடனேதான் இது வெளிவருகின்றது.

இச் சிறு நூல் அச்சில் இருக்கும்போது அதனைப் படித்துப்பார்த்து யோசனைகள் பலவற்றைக் கூறியதன்றி, ஒரு முன்னுரையும் எழுதிக் கொடுத்து உதவிய மேற்படி பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர் திருவாளர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களுக்கு நான் மிகவும் கடமைப் பட்டுள்ளேன்.

மிகவும் சீக்கிரமாகவும், அழகாகவும், உயர்ந்த முறையில் இதனை அச்சிட்டு வெளிப்படுத்திய மயிலாப்பூர், விவேக போதினி காரியாலயத்தார், தமிழுக்குப் பணி செய்வதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள் என்பது யாவரும் அறிந்த செய்தியே.

இந்த நூலில், பெரும்பாலும், சாஸனங்களில் காணப்படும் சொற்களே பயின்றுள்ளன. தினந்தோறும் புதிய சாஸனங்கள் கிடைத்து வருவதால், நாம் கூறியுள்ள முடிவுகளில், ஏதாவது காலக்கிரமத்தில் மாறக்கூடும்; அன்றி, சாஸனங்களை வாசித்து உபயோகிப்பதில் ஆசிரியர்களுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்படுதலும் கூடும். அங்ஙனம் உள்ளவற்றை எனக்கு அறிவித்தால் மறு பதிப்பில் திருத்திக்கொள்ள இயலும்.

தி. நா. சுப்பிரமணியன்.

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	சோழ நாடும் சோழர் பழமையும்	1
2.	இராஜேந்திரன் முன்னோர்கள்	11
3.	இராஜேந்திரன் இளமைப் பருவமும் இளவரசாட்சியும்	27
4.	இராஜேந்திரன் அரசாட்சி	45
5.	இராஜேந்திரன் போர்ச் செயல்கள்	69
6.	இராஜேந்திரனும் இராஜாதிராஜனும்	94
7.	இராஜேந்திரன் காலத்தில் இருந்த நாட்டின் நிலைமை	106

அனுபந்தம் 1

இராஜேந்திரன் மெய்க்கீர்த்தி 138

அனுபந்தம் 2

கருவூர்த் தேவர் பாடிய திருவிசைப்பா 141

இராஜேந்திர சோழன் கடாரங் கொண்டது (படம்) 146

சோழ வம்சாவளி 147

சோழ சளுக்கியர் சம்பந்தம் 148

சித்திரப் படங்கள்

(1) தஞ்சைப் பெரியகோயில்—' ஸ்ரீராசராசேந்த்ர சோழ மகாராசா ' — முகப்புப் படம்.

(2) கங்கைகொண்ட சோழீச்சுரம்

(3) சண்டேசானுக்கிரஹ மூர்த்தி

(4) இராஜேந்திர சோழன் கடாரங் கொண்டது

தஞ்சைப் பெரிய கோயில்

'ஸ்ரீ ராசராசேந்திர சோழமகாராசா'

Copyright, A. S. I

கங்கை கொண்ட சோழன்

1. சோழநாடும் சோழர் பழமையும்

"திருமன்னி வளர் திருநில மடந்தையும்
போர்ச்சயப் பாவையும் சீர்த்தகச் செல்வியும்"

தம் பெருந் தேவியராகி இன்புறச் சோழ மன்னர்கள் மிகப் பழங்காலத்திலிருந்தே ஆட்சி புரிந்து வந்தார்கள்.

"குடிப்பெய ராவண கூறுங் காலைச்
சேரன் சோழன் பாண்டியன் என்றிப்
போல்வன பிறவும் பொருத்தங் கொளலே"

என்னும் பன்னிருபாட்டியற் சூத்திரம், சோழன் என்பது ஒரு குடிக்கட் பிறந்தாரைக் குறிக்கும்

பெயர் என்பதை விளக்குகின்றது.[1] அவர்கள் ஆண்டுவந்த நாடான சோழ மண்டலம், பண்டைக் காலத்தில் நம் தமிழ் நாட்டின் மூன்று பெரும் பிரிவு களுள் ஒன்றாக விளங்கியது.

"கடல்கிழகுத் தெற்குக் கரைபுரள் வெள்ளாறு
குடதிசையில் கோட்டைக் கரையும் — வடதிசையில்
வண்டாடு வெள்ளாறு திருப்புத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்"

என்னும் பழைய செய்யுள் ஒன்று சோணாட்டெல்லை யைக் குறிக்கின்றது. அது தற்காலத்தில் உள்ள தஞ் சாவூர், திருச்சிராப்பள்ளி என வழங்கும் ஜில்லாக் களையும் தென்னார்க்காடு ஜில்லா, புதுக்கோட்டை ஆகியவற்றின் ஒரு பகுதியையும் கொண்டிருந்தது.

பெரிய மலைகளே இல்லாமல் சமவெளியாக உள்ள இந்நாட்டில், காவிரி நதி பல கிளைகளாகப் பிரிந்து பாய்ந்து மலைகளினின்றும் கொணர்ந்த வண்டல் வயல்களில் தேக்கி நாட்டை வளம்படுத்தி வருகின்றது. இப்பொன்னியாறு சோழநாட்டுக் குச் செவிலியாக விளங்கி, அந்நாட்டை எந்நாளும் சோறுடையதாகச் செய்துவருகிறது.

சோழ மரபினர் சரித்திர காலத்திற்கு மூன் பிருந்தே சோழ நாட்டை அரசாண்டு வந்தார்கள்.

1. 'வழங்குவதுள் வீழ்ந்த' என்னும் குறளுக்குப் பரிமே லழகர் எழுதிய உரையில் 'பழங்குடி - தொன்று தொட்டு வந்த குடி; தொன்று தொட்டு வருதல், சேரசோழ பாண்டி யர் என்றாற்போலப் படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வரு தல்' என்று எழுதியிருப்பதும் இதனையே தெரிவிக்கின்றது

இராமாயண மகாபாரத காலங்களிலும் இவர்கள் வலிமை பெற்று விளங்கினர் என்று பழைய நூல்கள் கூறுகின்றன. வடமொழி இலக்கண ஆசிரியரான காத்தியாயனர் சோழர்களுடைய பெயரை ஓரிடத்தில் குறித்திருக்கிறார்.

இவர்கள் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வோர் இடத்தைத் தங்கள் தலைநகராகக் கொண்டிருந்தார்கள். சரித்திர வாயிலாக அறியக்கூடும் ஆரம்ப காலத்தில் காவிரி கடலுடன் கலக்கும் இடத்தில் கடற்கரையில் புகார் என்னும் பெயருடன் விளங்கிய காவிரிப்பூம் பட்டினமும், உள் நாட்டில் உறையூரும் தலைநகரங்களாக விளங்கிவந்தன.

இவர்கள் புலியைத் தங்களுக்கு இலச்சினையாகவும் கொடியாகவும் கொண்டிருந்தார்கள். இவர்களுக்குப் புலி எதனால் இலச்சினையாக அமைந்தது என்பதற்குரிய காரணம் ஒன்றும் இப்பொழுது தெரியவில்லை. எனினும், இவர்களின் வழிவந்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் தெலுங்கு நாட்டுச் சோழர்கள் சிங்கத்தையே தங்கள் இலச்சினையாகக் கொண்டிருந்தார்கள். அன்றி, இவர்களுடைய படையாளர் ஆத்திப் பூவைத் தங்களுக்கு அடையாளமாகச் சூடிக்கொள்ளுவர். தொல்காப்பியத்தில் சோழர்களுடைய அடையாளப் பூவாகிய ஆத்தி சொல்லப்பட்டுள்ளது.

கி. மு. மூன்றும் நூற்றாண்டில், இந்தியாவின் பெரும்பகுதியைத் தருமத்தால் வென்று ஆண்டு

வந்த மகத நாட்டு மன்னனை அசோகன், தன் நாடுகளிலன்றிப் பிறநாடுகளிலும் தருமத்தைப் பரவச் செய்வதற்காகப் பிரசாரகர்கள் பலரைத் தேசங்கள்தோறும் அனுப்பினன். அவர்களுள் சிலர், சோழ நாட்டுக்கும் வந்திருந்தனர் என்பது அவன் கல்வெட்டுக்களால் அறியக் கிடக்கின்றது. அக்காலத்திலேயே சோழர்கள் மௌரிய ஆதிக்கத்துக்கு உட்படாமல் சேர பாண்டியர்களுடன், தனி யரசர்களாகவே விளங்கினர்கள்.[1]

ஏறக்குறைய கி. பி. முதல் நூற்றாண்டில், கிரேக்க வணிகர்களுக்கு உபயோகமாக விருக்கும் படி எழுதப்பட்ட நூல்களிலும், தமிழ் நாடு நன்கு விவரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள், சோழர்களும், இவர்களுடைய பட்டினங்களும் பெருமை பெற்று விளங்குவனவாகக் கூறப்பட்டுள்ளன.

சாஸனங்களும் நூல்களும் இவர்களை மனு குலத்தார்கள் என்றும், சூரிய வமிசத்தார்கள் என்றும், காசிய கோத்திரத்தினர் என்றும் கூறுகின்றன. வடவேங்கடத்தைப் போல இவர்களும் பழைய பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிவிப்பதற்காகப் பிற்காலத்தில் பல கதைகள் எழுந்தன.

அவற்றுள் சோழன் என்பது ஓர் இயற் பெயராகக் காணப்படுகின்றது. சோழவர்மன் என்ற பெயரையுடைய அவன் துஷ்யந்தன் மகனாகிய பரதனுடைய புத்திரன் என்று திருவாலங்காட்டுச் செப்

1. Hultzsch - Asoka Inscriptions.

பேடுகள் கூறுகின்றன. அவன் எப்படித் தென் னாட்டுக்கு வந்தான் என்பதைக் கன்னியாகுமரியில் உள்ள கல்வெட்டு அழகாகக் கூறுகின்றது.[1]

வேட்டையாட வேண்டிக் கானகத்தை அடைந்த அவ்வரசன் முனிவர்கள் வாசம் செய்து வந்த இடத்தில் தங்கிவிட்டு ஒரு நாள் பரிவாரம் அதிகம் இல்லாமல், மான் வேட்டை ஆடித் திரிந் தான். இராஜனிசரன் என்னும் பெயரையுடைய அரக்கன் ஒருவன் புள்ளிமான் வேடம் பூண்டு அவன் கண்ணிற்படும்படி உலவினன். மான் வேடம் பூண்ட மாரீசனை இராமன் எப்படித் துரத்தி வெகு தூரம் சென்றானோ அங்ஙனமே மன்னனும் மானைத் துரத்திச் சென்று இறுதியில் அதனைக் கொன் றான். பாற்கடலைக் கடைந்து எடுத்த அமிர்தத் தைத் தண்ணீர் உருவமாக உலகினருக்கு அளிக் கும் காவிரியின் கரைவழியே சிறிது தூரஞ்சென்று அந்நதியில் நீராடிக் கரை ஏறிய அவன், அந்தப் பக்கங்களில் அந்தணர் ஒருவரையும் காணாதவனாய் ஆரியாவர்த்தத்தினின்றும் உயர்ந்த பிராமணர் பலரை அழைத்துவந்து அந்நாட்டிற் குடியேற்றி னான். பிறகு அவன் காட்டை யழித்து நாடாக்கிப் பல்வளமும் செழிக்குமாறு செய்து அவர்களை அங் கேயே நிலையாக வசிக்கும்படி செய்தான். அவ்

[1] கன்னியாகுமரிக் கல்வெட்டு, T. A. S., III
E. I., XVIII, pp. 51 ff
S. I. I., III. Intro. pp. 4-5

வரசனுக்குப் பின் அவன் மரபினருக்குச் சோழர் என்ற பெயர் உண்டாயிற்ரும்.

இந்த மரபில் வந்தவனை காந்தமன் என்பான் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து சோழ மண்டலத்தை ஆண்டுவந்தான். அவனே காவிரியாற்றைப் பூமிக்குக் கொணர்ந்தவன் என்ற வரலாறு பழைய தமிழ் நூல்களில் குறிக்கப்பட்டிருக்கின்றது. அவன் காலத்தில்தான் பரசுராமர் வாழ்ந்து வந்தாராம். அரச குலத்தை அழிப்பதையே நோன்பாகக் கொண்டிருந்த அவர், தமிழ் நாட்டில் உள்ள மன்னர் குலங்களையும் வேரறுக்க நினைத்து வந்து கொண்டிருந்தாராம். அதனை யறிந்த காந்தமன் அகத்திய முனிவரை யடைந்து தான் உய்யும் வழியை அருளவேண்டுமென்று பணிந்து கேட்டுக் கொண்டான். பரசுராமர் க்ஷத்திரியனைத் தவிர பிறரோடு போர் செய்யார் என்பதை யறிந்த முனிவரும், காந்தமனுடைய காதற்கிழத்தியின் புதல்வனாகிய ககந்தனுக்கு முடி சூட்டிவிட்டு அவனை மறைந்து வசிக்குமாறு உபதேசித்தார். அவன், அவ்வண்ணமே செய்தான். போர்க்கோலத்துடன் வந்த பரசுராமர் அரசனாக வீற்றிருப்பவன் அரச குலத்தைச் சார்ந்தவன் அல்லன் என்பதை யறிந்து அவனுடன் போர் செய்யாது விடுத்துச் சென்ரராம்.[1]

1. மணிமேகலை, 22-ஆம் காதை, அடி 25 - 37.

இம்மரபில் வந்த சோழ அரசர்கள் பலரைப் பற்றிய செய்திகள் பழந்தமிழ் நூல்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

அகத்திய மாமுனிவர் ஆணையால் வானத்தில் அசைந்துகொண்டிருந்த மூன்று மதில்களை அழித்து மக்களின் இன்னலைப் போக்கிய 'தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பிய'னைப் பற்றியும்,[1] அரசர் வீதியில் தேரில் செல்லுங்கால், துள்ளி ஓடிய பசுங்கன்று ஒன்றின்மேல் தேரை ஏற்றிக்கொன்றவன் தன் மகன் என்பதையும் கவனியாமல் நீதி வழங்குவதையே பெரிதென மதித்துத் தன் மகனைக் கீழே கிடத்தித் தேரை நடாத்திய மனுநீதி கண்ட சோழனைப்பற்றியும் உள்ள வரலாறுகளைச் சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் காணலாம்.[2]

சங்க நூல்களில் சோழ அரசர்கள் பலருடைய பெயர்கள் காணப்படுகின்றன. ஆயினும், அவற்றை மாத்திரம் துணைக்கொண்டு அக்காலத்தில் வாழ்ந்த சோழர்களுடைய சரிதத்தைத் தொடர்ச்சியாகக் கூறுவதற்கு முடியாது. அவற்றை ஆராய்ந்த ஆசிரியர்கள் பலரும் பலவிதமான முடிவுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தஞ்சையில் சோழ ராஜ்யம் நிறுவப்பெறுவதற்கு முன்பு வாழ்ந்துவந்த மன்னர்களுள், கரிகாலன், கோச்

[1] புறம் 39

[2] மணி. காதை - 23, வரி, 210.

செங்கணன் ஆகிய இருவரும் பிரசித்தி பெற்றவர் கள். இவ்விருவருள் முதலில் வாழ்ந்தவர் யார் என்பதையும் நிச்சயமாகக் கூறமுடியாது.

இவ்விருவரைப்பற்றியும் பல கதைகள் வழங்கு கின்றன. சோழர்களுக்குள்ளே கரிகாலன் தலை சிறந்து நடுநாயகம்போல விளங்குகிறனென்பது ஒப்ப முடிந்ததாகும். பிற்காலத்தில் தெலுங்கு நாட்டில் ஆண்டுவந்த பல சிற்றரசர்களும் தாங்கள் கரிகாலனுடைய வமிசத்தில் பிறந்தவர்கள் என்று கூறிக்கொண்டார்கள்.

உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னிக்கு அழுந்தூர் வேள் மகளிடம் பிறந்த பிள்ளையான கரிகாலன், திருமாவளவன் எனவும் வழங்கப் பெறு வான். அவன் 'காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கி'[1] காவிரிக்குக் கரைகட்டி யவன் என்று புகழப்படுகிறான்.

அவன் தன் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தி லேயே சேர பாண்டியராகிய 'இரு பெரு வேந்த ரும் ஒரு களத்து அவிய' வெண்ணியில் வெற்றி கொண்டு வாகை சூடினன். பிறகு வடநாட்டின் மீது தண்டு எடுத்துச் சென்று, அந்நாட்டில் தன்னை எதிர்ப்பார் எவரும் இல்லாததால், இமய மலையை அடைந்து அதன்மேல் தங்கள் அடையாளமான புலி முத்திரையைப் பொறித்து வச்சிரம், மகதம்,

1 பட்டினப் பாலை, அடி, 283 - 4

அவந்தி ஆகிய நாட்டு அரசர்கள் கொடுத்த காணிக்கைகளைப் பெற்றுச் சோழநாடு திரும்பினன்.

அவன் காவிரிக்குக் கரை கட்டுவதற்காக இலங்கையினின்றும் குடிகளைச் சிறை பிடித்துக் கொணர்ந்தான் என்பது மகா வமிசம் என்னும் இலங்கைச் சரித்திரத்தினின்றும் தெரியவருகின்றது.

" ..... தலையேறு
மண்கொண்டு பொன்னிக் கரைகட்ட வாராதாற்
கண்கொண்ட சென்னிக்கரிகாலன் " [1]

என்பது போன்ற பாடல்களால், அவன்கீழ்ச் சிற்றரசன் ஒருவன் காவிரிக்கரை கட்ட வராததால், அவ் வேற்றரசனைப் படத்தில் எழுதிப் பார்த்த பொழுது அவனுக்கு மூன்று கண்கள் இருந்தமையை அறிந்து அவனுடைய மூன்றாம் கண்ணைப் போக்கினனும்.

" தொழுது மன்னவே கரை செய் பொன்னியிற்
றொடர வந்திடா முகரி யைப்படத்
தெழுது கென்றுகண் டிதுமி கைக்கணென்
றிங்க ழிக்கவே யங்கழிந் ததும் " [2]

என்று கலிங்கத்துப் பரணியிற் காணப்படுவதனின்றும் கரிகாலனால் கண் அழிக்கப்பட்டவன் முகரி எனப்படும் வடநாட்டு 'மௌகரி' வமிசத்தவன் என்று ஒரு சாரார் கூறுவர். தெலுங்கு தேசத்தில்

[1] குலோ. உலா, கண்ணி, 18.

[2] கலிங்கத்துப் பரணி, 184

*கிடைக்கும் கல்வெட்டுக்கள், அவ்விதம் கரிகாலனால் வெற்றி கொள்ளப்பட்டவன் திரிலோசன பல்லவன் என்றும் முக்கண்டிக் காடுவெட்டி என்றும் கூறப்படும் பல்லவ குலத்தைச் சேர்ந்த அரசன் என்று கூறுகின்றன.

கரிகாலன் இளமைப் பருவத்திலேயே சிங்காதனம் ஏறிவிட்டான். இதுவும் அவன் வழங்கிய நியாயத்தின் தன்மையும்,

"உரைமுடிவு காணு னிளமைபோ னென்ற
நரைமுது மக்க ளுவப்ப—நரைமுடித்துச்
சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமற் பாகப் படும்"

என்னும் பழைய செய்யுளினின்றும் தெரியவரும்.

கோச்செங்கணான் சிவனடியார் அறுபத்து மூவருள் ஒருவனாக வைத்து எண்ணப்படுபவன். அவனைப்பற்றிய குறிப்புகள் அப்பர், சம்பந்தர் முதலியோருடைய பதிகங்களிலும், திருமங்கை மன்னனுடைய பெரிய திருமொழியிலும் காணப்படுகின்றன. அவன் பூர்வ ஜன்மத்தில் ஒரு சிலந்தியாக இருந்து சிவபெருமானை வழிபட்டதால், அவர் அருள் பெற்றுச் சோழர் குலத்தில் அவதரித்தான் என்ற வரலாறொன்று வழங்குகிறது. அஃது அப்பர் முதலியோராலும் குறிக்கப்படுவதால், வெகு காலத்திற்கு முன்பே அக்கதை ஏற்பட்டிருத்தல் வேண்டும்.[2]

---

1 பழமொழி

2 அப்பர் : குறுக்கை, 4; சுந்தரர் : திருவாவடுதுறை, 2.

அவன் சேரமான் கணைக்கால் இரும்பொறை என்பவனைக் கழுமலத்தில் வென்று சிறை பிடித்து விலங்கிட்டுக் குடவாயிற் கோட்டத்தில் வைத்திருந்தான். பொய்கையார் என்பவர் சோழன் வெற்றியைச் சிறப்பித்துக் களவழி நாற்பது பாடி அவனை மகிழ்வித்துச் சேரனைச் சிறை மீட்டுச் சென்றார். இந்தப் பொய்கையார் வைஷ்ணவ அடியார்களுள் ஒருவரான பொய்கையாழ்வார் என்று தெரிகிறது.[1]

அவன் பல ஊர்களில் ஆலயங்கள் எடுப்பித்தான்.

"இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோ ளரிசர்க்
கெழில்மாட மெழுபதுசெப் புலக மாண்ட
திருக்குலத்து வளச்சோழன்" [2]

என்று திருமங்கை மன்னனும் அவனைப் புகழ்ந்திருக்கின்றார்.

2. இராஜேந்திரன் முன்னோர்கள்

இம்மரபில் வந்தவர்களாகப் பழந்தமிழ் நூல்களிற் கூறப்பட்டிருக்கும் மன்னர்கள் காலத்துக்கும், தஞ்சையில் விஜயாலயனுடைய வமிசம் கிறுவப்பெற்ற காலத்திற்கும் இடையில் ஆண்ட சோழ மன்னர்களைப்பற்றிய செய்தி ஒன்றும் முறையாகத் தெரியவில்லை. கி. பி. ஐந்து ஆறும் நூற்றாண்டுகளில் களப்பிரர் எனப்படுவார் சேர சோழ பாண்டியர்

[1] ஆழ்வார்கள் கால நிலை, பக். 23

[2] பெரிய திருமொழி, VI, 6, 8

களை வென்று தமிழ் நாட்டைக் கைக்கொண்டு ஆண்டுவந்தார்கள். அவர்களுள் அச்சுதவிக்கிராந் தன் என்பான் ஒருவனைப்பற்றிய குறிப்புக்கள் சில பாலிபாஷையில் எழுதப்பெற்றுள்ள பௌத்த நூல்களில் காணப்படுகின்றன.[1]

காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு தொண்டைமண்டலத்தின் வடபகுதியையும், வேங்கி நாட்டையும் ஆண்டுவந்த பல்லவர்கள் சுமார் கி. பி. ஆறும் நூற்றாண்டின் கடைசியில் தெற்கு நோக்கி வந்து களப்பிரர்களை வென்று சோழநாட்டையும் கைக்கொண்டு ஆளத்தொடங்கினர்கள்.

அக்காலங்களில் இருந்த சோழர்களைப்பற்றிய செய்திகள் கிடைக்கவில்லையாயினும், அவர்கள் தமிழ் நாட்டில் இல்லையென்று கூற முடியாது. அவர்களில் ஒரு கிளையினர் வடக்கே சென்று, இப்பொழுது கடப்பை, கர்நூல் என்று வழங்கப் பெறும் ஜில்லாக்களில் ஆண்டுவந்தார்கள்.[2] அவர் கள் பல்லவர்களின் சிற்றரசர்களாகவே இருந்தார் கள் என்று தெரிகிறது.

பல்லவர்களுடன் அடிக்கடி போர் நிகழ்த்தி வந்த வாதாபிச்சளுக்கியர்கள் பல சமயங்களில்

---

1. புத்த தத்தர் எழுதிய விநயவிநிச்சயம், அபிதம் மாவதாரம் முதலிய நூல்களில் காணப்படும் குறிப்புக்களைப் பற்றி J. O. R., II - ஆவது தொகுதி பார்க்க.

2. 'ரேநாண்டு'ச் சோழர்கள் என்பது அவர்களுக்குப் பெயர்; E. I., XI. P. 343.

சோழ மண்டலத்திலிருந்த சோழர்களை வென்று புறங்கண்டதாகப் புகழப்படுகிறார்கள். பாண்டியர்களும் பல சமயங்களில் சோழர்களுடன் மணவினை செய்துவந்தார்கள். இவற்றால், சோழர்கள் தங்கள் நாட்டிலேயே சுயேச்சையை இழந்து பல்லவர்களின் கீழ்ச் சிற்றரசர்களாக வாழ்ந்துவந்தார்கள் என்று எண்ணவேண்டியிருக்கிறது. அக்காலங்களில் உறையூரும், கும்பகோணத்திற்குப் பக்கத்தில் உள்ள பழையாறையும் அவர்களுக்கு முக்கிய நகரங்களாக விளங்கின.

பல்லவர்களுடன் அடிக்கடி போர் நிகழ்த்தி வந்ததால், சளுக்கியர்களுடைய பலம் சிறிது சிறிதாகக் குறைந்துவிட்டது. கி. பி. எட்டாம் நூற்றாண்டின் மத்தியில், இராஷ்டிரகூடர்கள், சளுக்கியர் களைப் போரில் வலியழித்துச் சளுக்கிய நாட்டைப் பிடித்துக்கொண்டார்கள். இராஷ்டிரகூடர்களும் பல்லவர்களுக்கு விரோதமாகவே இருந்தார்கள். அதனால், அவர்கள் பல சமயங்களில் தொண்டை நாட்டின்மீது படையெடுத்து வந்து வெற்றிகொண்டார்கள். இவ்விதம் பல்லவர்கள் வடபுலத்தில் இராஷ்டிரகூடர்களுடன் சண்டை செய்துவரும் காலத்தில், தெற்கே பாண்டியர்களும் சிறிது சிறிதாகப் பல்லவ ராஜ்யத்தின் தென்பகுதியைக் கைக்கொண்டு ஆளத் தொடங்கினர்கள்.

இங்ஙனம் பல்லவ பாண்டியர்கள் அடிக்கடி போர் செய்து வருங்காலத்தில், அவ்விரு நாடுகளுக்

கும் எல்லைப்புறமான சோழ மண்டலத்தில் ஆண்டு வந்தவர்களுக்கு தங்கள் சுயேச்சையை நிலைநிறுத்துவதற்கு வேண்டிய சௌகரியங்கள் அமைந்திருந்தன. அக்காலத்தில், அந்தப் பிரதேசத்தை ஆண்டு வந்தவர்களுள், கொடும்பாளூர் வேளிர்களும், முத்தரையர்களும், சோழர்களும் முக்கியமானவர்களாவர். முத்தரையர்கள் தஞ்சைக்குப் பக்கத்தில் உள்ள சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலம் எனப்படும் செந்தலையையோ நியமத்தையோ தங்கள் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தார்கள். கொடும்பாளூர் வேளிர்களும், சோழர்களும் தங்களுக்குள் மணவினை செய்துகொண்டு நெருங்கிய உறவு பெற்றிருந்தார்கள்.

பல்லவ அரசாங்கம் வலியற்றிருந்ததால், இச் சிற்றரசர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு வந்தார்கள். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் வாழ்ந்துவந்த விஜயாலயன் என்னும் சோழன் முத்தரையர்களை வென்று அவர்களிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றிக்கொண்டான். [1]

1. திருவாலங்காட்டுச் செப்பேடுகள், S. I. I., Vol. III, Part III. அவன் தஞ்சையை யாரிடமிருந்து கைப்பற்றினன் என்று சாஸனங்களில் கூறப்படவில்லை எனினும், கல்வெட்டுக்களில், முத்தரையர்கள் 'தஞ்சைக்கோன்,' 'தஞ்சை நற்புகழாளன்' என்று குறிக்கப்படுவதாலும் (E. I. XIII. pp. 142, 144), தஞ்சையைச்சுற்றியஊர்கள் அவர்கள் ஆளுகையின் கீழ் இருந்தனவென்று தெரிவதாலும், முத்தரையரை வென்றே தஞ்சையைக் கைப்பற்றினனென்று கூறவேண்டும்.

வடஆர்க்காடு ஜில்லாவில் உள்ள கீழ்ப்புத்தூரில் இவனுடைய நான்காம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று இருந்தது என்பது பிற்காலத்தில் ஆண்டவிக்கிரமசோழனுடைய சாஸனத்தினின்றும் தெரியவருவதால், இவனுடைய ஆதிக்கம் தொண்டைநாட்டின் ஒரு பகுதியிலும் பரவியிருந்தது[1] என்று அறியப்படுகிறது. எனினும் இவன் பல்லவர்களின் கீழ் ஒரு சிற்றரசனாகவே ஆண்டுவந்தான் போலும்.

இவனுக்குப்பின் சோழ சிங்காதனம் ஏறியவன் இவன் மகன் ஆதித்தன் எனப்படுவானவன். அவன் காலத்தில் திருப்புறம்பியத்தில் பல்லவ அரசனை அபராஜிதனுக்கும், பாண்டிய அரசனை வரகுணனுக்கும் பெரும் போர் ஒன்று நிகழ்ந்தது. கங்க அரசனை பிருதிவீபதி, பல்லவனுக்கு உதவியாகப் போர் செய்தான். அவன் "பாண்டிய அரசனை வரகுணனைக் கொன்று, தன் நண்பனைப் பெயரளவில் மட்டுமன்றி உண்மையாகவே அபராஜித (ஜயிக்க முடியாதவ)னைச் செய்து துறக்கம் புக்கான்."[2] பாண்டியர்கள் அப்போரில் அடைந்த தோல்விக்குப் பிறகு தலை நிளம்பவில்லை. அபராஜிதன் வெற்றியடைந்தான் எனினும், அவனுடைய பலம் பிறகு ஓங்கவில்லை.

இச் சமயத்தில் ஆதித்தன் சோர்ந்திருக்கவில்லை. அவன் தன்னுடைய சுயேச்சையை நிலை

[1] No. 164 of 1915

[2] S. I. I, II, p. 387-8, 337 of 1912

கிறுத்திக்கொண்டான். அம்மட்டிலோ? சிறிது காலத்தில் அபராஜிதனையும் போரில் புறங்கண்டு தொண்டைநாட்டையும் கைக்கொண்டான்.[1]

அவன் கங்கபாடியையும் வென்று மேலைக் கங்க அரசர்களுடைய நகரமான தழைக்காட்டையும் பிடித்துக்கொண்டான் என்று கொங்கு தேச ராஜாக்கள் சரிதம் கூறுகின்றது. அவனுக்குப் பின் வந்த பராந்தகன் ஆட்சியில், கங்கபாடி சோழ ராஜ்யத்துள் அடங்கியிருந்தது என்பதையும், அவன் அதை வென்றுகொண்டதாகக் கூறப்படாமையையும் கவனித்தால் அஃது உண்மையே எனக் கூறலாம். அன்றி, கங்க அரசனை இரண்டாம் பிருதிவீபதியின் தானம் ஒன்று ஆதித்தனுடைய ஆட்சியில் கொடுக்கப்பட்டிருப்பதால், கங்கரும் சோழர்களுடைய ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்பது தெரியவரும்.[2]

ஆதித்தன், தொண்டைநாட்டிலே, காளஹஸ்திக்கு சமீபமாகவுள்ள தொண்டைமானூர் என்னும் ஊரில் உயிர் துறந்தான்.

இப்போர்களில் அவனுக்கு உதவியாக இருந்தவன் சேரமான் தாணுரவி என்பான். விக்கியண்ணன் என்பானும் போர் முனையில் வீரத்துடன் போர்புரிந்தான். அதற்காக ஆதித்தனும் சேரமானும் விக்கியண்ணனுக்குச் சிம்மாசனம், ஈச்சோப்பி,

[1] திருவாலங்காட்டுச் செப்பேடுகள்

[2] E. I., XIX, No 12 : Ins. No. 5 of 1897

பல்லக்கு, முரசு, களிற்றுப் படை முதலியவற்றைப் பரிசளித்துச் 'செம்பியன் தமிழவேள்' என்னும் பட்டமும் அளித்தார்கள்.[1]

அவனுக்குத் தொண்டைநாடு பரவின சோழன் கோதண்டராமன் என்ற பெயர்கள் உண்டு.

ஆதித்தனுக்குப் பிறகு அவன் மகன் முதற் பராந்தகன் பரகேசரி என்னும் பட்டத்துடன் கி. பி. 907-ஆம் ஆண்டில் சோழ சிங்காதனம் ஏறினான். அவன் முதன்முதலாகப் பாண்டியனுடன் போர்புரிந்து வெற்றி பெற்று மதுரையைக் கைக் கொண்டான் அதனால் அவன் 'மதுரை கொண்டவன்' என்னும் விருதையும் அடைந்தான்.[2] மதுரையை ஆண்டுவந்த இராஜஸிம்ஹன் என்னும் பாண்டியன் தன் மணிமுடியுடனும் வேறு பல விலையற்ற பொருள்களுடனும் இலங்கைக்கு ஓடிவிட்டான். அக்காலத்தில் இலங்கையை ஆண்டுவந்த ஐந்தாம் காசிபன் பாண்டியனுக்கு உதவியாக ஒரு பெரும்படையை அனுப்பிச் சோழர்களை எதிர்த்துப் போர்புரியச் செய்தான். ஆயினும் வெள்ளூர் என்னும் இடத்தில் நடந்த சண்டையில் ஈழப்படை முற்றும் குலைக்கப்பட்டது.[3] அப்பாண்டிய மன்னனுக்கு உதவியாக இருந்த இலங்கை யரசனையும் புறங்கண்டு பராந்தகன் ஈழ நாட்டையும் கைப்

---

[1] 286 of 1911; S. I. I. III, Part III, p. 221

[2] மூன்றும் ஆண்டுக் கல்வெட்டு, No. 11 of 1931

[3] S. I. I., III, No. 99

பற்றினன். அன்றியும், பாண்டியன் இலங்கைக்குக் கொண்டு சென்ற மணிமுடியையும் கைப்பற்ற முயன்றான். ஆனல், காசிபன் அதையும் வேறு பல விலையுயர்ந்த பொருள்களையும் எடுத்துக்கொண்டு தெற்கு நோக்கி ரோஹண நாட்டிற்குச் சென்று ஒளிந்து கொண்டான். துரதிர்ஷ்டம் தன்னை விடாமல் துரத்தி வந்ததை அறிந்த பாண்டியனும், தன் முடி முதலியவற்றை இலங்கையிலேயே விட்டுத் தன் தாய் வழியைச் சேர்ந்த சேர மன்னனிடம் அடைக்கலம் புகுந்தான். இவ் வெற்றிகளின் முடிவில் பராந்தகன் மதுரையும் ஈழமும் கொண்டவன் என்னும் பட்டத்தை அடைந்தான்.

அவன் தொண்டைமண்டலத்தை ஆண்டுவந்த வாணர், வைதும்பர் முதலிய குறுநில மன்னர்களை வென்று அந்நாட்டையும் சோழர் ஆட்சியின் கீழ்க் கொணர்ந்தான். தனக்கு உதவியாக இருந்த கங்க அரசனை இரண்டாம் பிருதிவீபதிக்குப் பாலாற்றுக்கு வடக்கே புங்கனூருக்கும் காளஹஸ்திக்கும் இடைப்பட்ட வாணகப்பாடியை அளித்து அவனுக்குச் 'செம்பியன் மாவலி வாணராயன்' என்னும் பட்டத்தையும் சூட்டினன்.[1] பராந்தகன், நெல்லூர் ஜில்லாவின் ஒரு பகுதியான சீட்புலி நாட்டையும் வென்று அடிப்படுத்தினன்.[2]

---

[1] S. I. I., II, No. 76.

[2] S. I. I., III, p. 108 (Nos. 160, 236 of 1912)

இங்ஙனமாக அவனுடைய ஆட்சியிலேதான் சோழ ராஜ்யம் பிரபலம் அடையத் தலைப்பட்டது. அதற்கேற்ப அவனும் நாற்பது வருஷங்களுக்கு மேல் நாட்டைப் பரப்பிச் சீர்ப்படுத்தி ஆண்டுவந்தான். அன்றியும், தங்கள் குலதெய்வமான தில்லை நாயகர் கோயிலில் பொன் தகடு வேய்ந்த 'தர்ம சபை' என்ற பெரியமேதார் மண்டபத்தையும் அவன் அமைத்தான்.

அவன் ஆட்சியின் இறுதியில் தொண்டை நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. கன்னரதேவன் என்னும் இராஷ்டிரகூட மன்னனை மூன்றாம் கிருஷ்ணராஜன் தொண்டைமண்டலத்தைப் பிடித்துக்கொண்டு விட்டான். கி. பி. 949-ஆம் ஆண்டில் தக்கோலம் என்னுமிடத்தில் நடந்த சண்டையில் பராந்தகனுடைய மூத்தமகனை இராஜாதித்தன் போர்க்களத்தில் யானையின்மேல் வீற்றிருக்கையில், அம்பால் துளைக்கப்பட்டு இறந்தான்.[1] அதனால் அவன் 'யானைமேல் துஞ்சினதேவன்' என்று குறிக்கப்படுகின்றான். அங்ஙனம் அவனைப் போர்க்களத்தில் கொன்றவன் கன்னரதேவனுடைய சகோதரி கணவனும், மேலைக்கங்க அரசனுமான இரண்டாம் பூதுகன் எனப்படுவான். இராஜாதித்தன் இறந்தது பராந்தகன் உயிருடன் இருந்த காலத்திலா, அல்லது அவன் காலத்திற்குப் பிறகா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. எனினும், அவன் தன் தந்தையின்

[1] E. I., VI, p. 51

வாழ்நாளிலேயே இறந்துவிட்டானென்று கூறலாம். இராஜாதித்தன் இறந்த பிறகு அதிக காலம் பராந்தகன் உயிர் வாழவில்லை. பராந்தகனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் முறையே இராஜாதித்தன், கண்டராதித்தன், அரிந்தமன் எனப்படும் அரிஞ்சயன் என்பவர்கள்.

மூத்தவனை இராஜாதித்தன் இறந்துவிட்டபடியால் அவன் தம்பியான கண்டராதித்தன் சோழ சிங்காதனம் ஏறினன். இவன் ஆட்சிபுரிந்த காலம் மிகவும் சிறிதே. இவன் காலத்தில் சண்டை ஒன்றும் நடக்கவில்லை. இழந்த தொண்டை மண்டலத்தை மறுபடியும் கைப்பற்ற இவன் முயன்றதாகத் தெரியவில்லை. தெற்கே பாண்டியர்களும் கொஞ்சம் கொஞ்சமாகத் தலைதூக்கி வந்தார்கள். இவன் புறப்பகை கலையாவிடினும் அகப்பகை களைந்து ஈசன் திருவடித்தொண்டைக் கைக்கொண்டவன். தெய்வபக்தி மேலிட்ட இராஜரிஷியாகவே இவன் காலம் கழித்தான். இவன் தமிழ் மொழியிற் சிறந்த புலமை பெற்றவன். சைவத் திருமுறைகள் பன்னிரண்டுள் ஒன்பதாம் திருமுறையில் திருவிசைப்பாவினுள் தில்லைச் சிற்றம்பலத்து எம்பெருமான் மீது இம்மன்னன் பாடியுள்ள திருப்பதிகம் ஒன்று காணப்படுகின்றது. இவனைப் போலவே இவன் மனைவி செம்பியன்மாதேவியும் சிவபக்தி மிக்கவள். இவ்விருவராலும் திருப்பணி செய்யப்பட்ட கோயில்களும், விடப்பட்ட நிபந்தங்களும் பல உள.

இக் கண்டராதித்தன் இறந்தபொழுது இவன் மகன் மதுராந்தகன் சிறுகுழந்தையாக இருந்தான். அதனல் இவனுடைய தம்பியான அரிஞ்சயன் இவனுக்குப் பின் ஆட்சிபுரியத் தொடங்கினன். முன்னோர்கள் அடிப்படுத்திய தொண்டைமண்டலத்தை மறுபடியும் பிடித்துக்கொள்ள அரிஞ்சயன் வடக்கு நோக்கித் தண்டு கொண்டு சென்றான். தொண்டைமண்டலத்தைக் கைப்பற்றியிருந்த இராஷ்டிரகூட மன்னனன கன்னரதேவனும் எதிர்த்துப் போர் செய்தான். ஆயினும், அரிஞ்சயன் தொண்டைமண்டலத்தே ஆற்றார் என்னும் இடத்தில் இறந்துவிட்டான்.[1] இதனல் அவனுக்கு, 'ஆற்றூர்த் துஞ்சின தேவன்' என்ற பெயருண்டாயிற்று. இங்ஙனம் அரிஞ்சயன் அதிக காலம் நாட்டை ஆளவில்லை. அவனுடைய ஆட்சிக்காலம் ஒரு வருஷமென்றே கூறலாம். அவனுக்கு வைதும்ப அரசன் மகள் கல்யாணி என்ற தேவியும், வீமன் குந்தவையார், கோதைப் பிராட்டியார் என்ற வேறு தேவியரும் உண்டு.

அரிஞ்சயன் இறந்தவுடன், அவனுக்குக் கல்யாணியிடம் பிறந்த மகனகிய சுந்தரசோழன் என்பான் இராஜகேசரி என்னும் விருதையும் பராந்தகன் என்னும்பட்டத்தையும் பெற்றுச் சோழ சிங்காதனம் ஏறினன். இவன் தன் ஆட்சியின் முதலி

[1] 587 of 1920. இம்மன்னனுக்கு இராஜராஜன் மேல்பாடி என்னுமிடத்தில் ஒரு பள்ளிப் படை எழுப்பினன் (S. I. I., III, 17.)

லேயே தனக்கு இராஜ காரியங்களில் உதவியாக இருக்கும்படியாகத் தன் மகன் கரிகாலன் எனப் படும் ஆதித்தனை வைத்துக்கொண்டான். அது முதல் ஆதித்தன் பெரும்பாலும் தன் காலம் முழுமையும் தந்தையுடன் சேர்ந்தே அரசு செலுத்தினன்.

இங்ஙனம் தந்தையும் மகனும் சேர்ந்து அரசி யலை ஏற்றுக்கொண்ட காலத்தில், பாண்டி மண்ட லத்தை ஆண்டுவந்த வீரபாண்டியன் என்பவன் சோழர்களைச் சிறிதும் மதிக்காமல் ஆதிக்கம் செலுத்தி வந்தான். அதனால் சோழர்கள் பாண்டி மண்டலத்தின் மேல் படையெடுத்துச் சென்று சேலூர் என்னும் இடத்தில் பெரும் போர் நிகழ்த்தி வீரபாண்டியனை வெற்றி கொண்டார்கள்.[1] இத னால் சுந்தரசோழன் 'மதுரை கொண்டவன்' என் றும், 'பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள்' என்றும் வழங்கப்பெறும் விருதுகளைப் பெற்றான். ஆதித்தனும் 'வீரபாண்டியனைத் தலைகொண்டவன்' என்றும், 'வீரபாண்டியனை எறிந்து தலைகொண்ட வன்' என்றும் சிறப்பிக்கப்படுகின்றான்.

பாண்டியர்களுடன் நிகழ்ந்த போரில் சோழர் களுக்கு உதவியாகக் கொடும்பாளூர் இருக்கு வேளான பூதி விக்கிரமகேசரி என்பவனும் பாண்டி யனுக்கு உதவியாக இலங்கை யரசனை நான்காம் மஹிந்தனும் போர் புரிந்தார்கள். கொடும்பாளூரை ஆண்டுவந்த வேளிர்கள் சோழர்களுடன் மணவினை

[1] லீடன் பட்டயம், செ. 25, 28: E. I. XXII

புரிந்து ஒத்த சிறப்போடு வாழ்ந்தார்கள். பல சமயங்களில் அவர்கள் சோழர்களிடம் படைத் தலைவர்களாகவும் அமர்ந்து தூண புரிந்திருக்கிறார் கள். இவ்வமிசத்தைச் சேர்ந்த பராந்தகன் சிறிய வேளான் என்பவன், சோழர்களை மதியாது பாண்டி யர்களுக்கு உதவியாக வந்த சிங்களர்களை அடக்க வேண்டி, சுந்தரசோழன் இலங்கை மீது தண்டு எடுத்துச் சென்ற சமயத்தில் போர் புரிந்து உயிர் துறந்தான்.[1] ஆயினும் அப் படையெடுப்பினால், சோழர்கள் இலங்கையை வெல்ல முடியவில்லை. அக்காலத்தில் அந்நாட்டை ஆண்டுவந்த நான்காம் மஹிந்தன் சோழர்களைப் புறங்காட்டச் செய்தான் என்று கூறப்படுகிறான்.[2] எனினும், அப் படை யெடுப்பின் முடிவில், ஆதித்தன் 'கடல் அடையாது இலங்கை கொண்ட சோழன்' என்னும் விருதைப் பெற்றான்.

வடக்கே தொண்டைமண்டலம் கன்னரதேவ னது ஆட்சியிலேதான் இருந்தது. ஆதலின் சோழ மன்னன் அங்கேயும் தண்டு எடுத்துச்சென்று அவனை வென்று அந்நாட்டை மீண்டும் தன் வசம் ஆக்கிக்கொண்டான். வேற்றரசர்கள் ஆதிக்கத்தி லிருந்த நாட்டைச் சரியாக அமைத்துப் பழைய நிலைக்குக்கொணர்வதற்கு ஆதித்தனே தகுதியான வன் என்பதை யறிந்த சுந்தர சோழன் அவனைப்

---

1 302 of 1908; கன்னியாகுமரிக் கல்வெட்டு, செ. 63

2 சூளவமிசம், 54-ஆம் அத்தியாயம் E. Z., I, pp. 29, f.

பார்த்திவேந்த்ர வர்மன் என்ற பெயருடன் தொண்டைநாட்டுக்கு அதிபதியாக அமர்த்தினன்.

இவ்விதம் சுந்தர சோழனும் ஆதித்தனும் பேரும் புகழும் பெற்று வாழ்ந்து வந்தார்கள். சுந்தரன் தன் ஆட்சியின் இறுதியில் ஆதித்தனுக்குப் பரகேசரி என்னும் விருதுடன் முடி சூட்டினன். மூத்த பரம்பரையைச் சார்ந்த உத்தம சோழனும் தான் முடிசூட்டப்பெறும் காலத்தை எதிர்பார்த்து மனப்பால் குடித்துக்கொண்டிருந்தான். தான் அறவே புறக்கணிக்கப்பட்டு நாடு தாயாதிகள் வழியில் போய்விட்டது என்பதை நிச்சயமாக அறிந்தவுடன், முடியைத் தான் அடைவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்தான். அதற்காகச் சிலரைத் தனக்கு உதவியாகச் சேர்த்துக்கொண்டு உள் நாட்டில் கலகம் விளைவித்தான். அதனுடன் கொள்ளிடத்தின் வடகரையில் இப்போது உடையார் குடி என்று வழங்கப்பெறும் வீரநாராயணச் சதுர்வேதிமங்கலம் என்னும் கிராமத்திலிருந்து சிலரைக் கொண்டு ஆதித்தனைக் கொன்றுவிடவும் சூழ்ச்சி செய்தான். அச்சூழ்ச்சியின் விளைவாக ஆதித்தன் தன் தாயாதியால் கொலையுண்டு இறந்தான்.[1]

இது நடந்தது சுந்தர சோழன் ஆட்சியிலா அல்லது அவனுக்குப் பிற்காலத்திலா என்பதை நிச்சயமாகக் கூறமுடியவில்லை. சுந்தரசோழன் ஆட்சியிலேயே நடந்திருந்தால், இந்நிகழ்ச்சிக்குப் பிறகு

[1] 577 of 1920

அவன் அதிக நாள் உயிர் தரித்திருக்கவில்லை யென்றே கொள்ள வேண்டும். சுந்தர சோழன் 'பொன் மாளிகைத் துஞ்சினதேவன்' என்று வழங்கப் பெறுவதால், அவன் காஞ்சிபுரத்தில் இருந்த சோழ அரண்மனையில் இறந்துபோனன் என்பது தெரியவரும்.[1] அவன் பட்ட மகிஷியான வானவன் மாதேவி உடன்கட்டை ஏறினாள்.[2]

ஆதித்தன் கொலையுண்டிறந்ததும், அவன் தம்பியும் பின்னால் இராஜராஜன் என்று பெரும்புகழ் பெற்றவனுமான அருண்மொழித்தேவன் நாட்டின் நிலைமையில் உள்ள சிக்கலை அறிந்து ஒருவிதமாகச் சமாதானத்துக்கு ஏற்பாடு செய்தான். உத்தம சோழன் சிங்காதனத்துக்கு உரியவனாக ஏற்றுக்கொள்ளப் படவேண்டும் என்றும், ஆயினும் அவன் காலத்துக்குப் பிறகு இராஜ்யம் அவன் வழித் தோன்றியவர்களுக்குச் செல்லாமல் திரும்பவும் இராஜராஜனுக்கு வந்துவிட வேண்டும் என்றும், அதற்கேற்ப உத்தம சோழனுக்கு முடிசூட்டப் பெறும்பொழுது இராஜராஜன் இளவரசனாக முடிசூட்டப் பெறவேண்டும் என்றும் முடிவு செய்யப் பட்டது.[3] இங்ஙனம் பரகேசரி மதுராந்தகனை உத்தம சோழன் கி. பி. 969-ஆம் ஆண்டில் (கலி. 4071-ஆம் வருஷம்) சோழ அரசனாகவும் இராஜ

---

[1] S. I. I., III. p. 288

[2] 236 of 1902; திருவாலங்காட்டுச் செப்பேடுகள்

[3] திருவாலங்காட்டுச் செப்பேடுகள்

ராஜன் இளவரசனுகவும் முடிசூட்டப் பெற்றார்கள். அதனல் உத்தமசோழன் மகனை கண்டராதித்தன் இராஜ்யபாரத்தை ஏலாமல் இராஜராஜன் நாட்டை ஆண்டுவந்த காலத்தில் அவன்கீழ்க் கோயில்களைப் பரிபாலிக்கும் அதிகாரியாக விளங்கிவந்தான்.[1]

உத்தம சோழன் பதினறு ஆண்டுகள் அரசு செலுத்தி வந்தான். அவனுடைய சாஸனங்கள் சோழ நாட்டிலும் தொண்டை மண்டலத்திலும் காணப்படுகின்றன. அவன் காலத்திற் பொறிக்கப்பட்ட பல கல்வெட்டுக்களும் ஒரு செப்புப் பட்டயமும் கிடைத்துள்ளன வாயினும், அவற்றல் விசேஷமான செய்தி ஒன்றும் கிடைத்திலது. அவன், தான் பெற்ற நாட்டை விரிவடையச் செய்வதில் ஊக்கம் கொள்ளாமல், அரசனுக இருப்பதே போதும் என்று எண்ணினன் போலும்.

மதுராந்தக உத்தமசோழனுக்குப் பிறகு, சுந்தரசோழ பராந்தகனுக்கு வானவன் மாதேவியினிடத்துப் பிறந்த அருண்மொழித்தேவன் அரசனுக முடிசூட்டப் பெற்றன். அவன் முடிசூட்டப் பெற்ற காலம், கி. பி. 985-ஆம் ஆண்டில், ஜூன் மாதம் 25-ஆம் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளாக இருத்தல் வேண்டுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அம்மன்னனுடைய மகனே இராஜேந்திரனவான்.

---

[1] S. I. I., III, No. 49; M. E. R., 1904, Para. 20

[2] E. I., IX, p. 217

3. இராஜேந்திரன் இளமைப் பருவமும் இளவரசாட்சியும்

இராஜேந்திரனுடைய பிறப்பையும் இளமையையும் பற்றிய செய்திகளில் ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் இவன் 'உடைய பிராட்டியார் தம்பிரானடிகள் வானவன்மாதேவியரான திரிபுவனமாதேவியாரு'க்கு [1] மார்கழி மாதத்தில் திருவாதிரை நாளிலே [2] பிறந்தவன் என்பது மட்டில் கல்வெட்டுக்களால் தெரியவருகின்றது.

சோழ மன்னர்களுடைய சாஸனங்கள் ஆயிரக் கணக்காகக் கிடைத்துள்ளன. எனினும், அவற்றினின்றும் அம் மன்னர்களுடைய வாழ்க்கையைப் பற்றிய குறிப்பு ஒன்றேனும் கிடைக்கவில்லை. விஜய நகரத்து அரசர்கள், மொகலாய மன்னர்கள் ஆகியோருடைய அவைக்களங்களில் வந்திருந்த பிற நாட்டவர்கள் அந்த மன்னர்களுடைய குணங்களையும், இராஜ்ய பரிபாலனம், அரச குடும்பம் முதலியவற்றைப் பற்றியும் விவரமான குறிப்புக்களை எழுதிச் சென்றார்கள். அங்ஙனம் சோழ வேந்தர்களைப் பற்றி யாரும் எழுதவில்லை. ஆதலின் நாம் சாஸனங்களையும் இலக்கியங்களையும் கொண்டே அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றி அறியவேண்டியிருக்கிறது.

இராஜேந்திரன் எந்த ஆண்டில் பிறந்தான் என்பதையும் நாம் அறியோம். ஆயினும் இவன் பட்

[1] S. I. I., V, No. 982

[2] 271 of 1927

டத்துக்கு வருவதற்குச் சற்றேறக்குறைய எட்டு வருஷங்களுக்கு முன்பு மேலைச் சளுக்கியர்களுடன் போர்செய்து வெற்றி பெற்றிருக்கிறான்; சிறிது காலம் வேங்கிநாடு, கங்கமண்டலமாகிய இடங்களின் மகா தண்டநாயகனாகவும் விளங்கியுள்ளான். இவன் தன்னுடைய ஆட்சியின் ஏழாம் ஆண்டுத் தொடக்கத்தில் தன் மகன் இராஜாதிராஜனை யுவராஜனாக முடிசூட்டி இராஜ்யபாரத்தின் பெரும் பகுதியை அவனிடம் ஒப்பித்திருக்கிறான். இராஜாதிராஜன் மூத்த பிள்ளை அல்லனென்று தெரிய வருகிறது. ஆகையால், இராஜேந்திரன் பட்டம் கட்டப்பெற்ற காலத்தில் வயது சென்றவனாகவே இருந்திருத்தல் வேண்டும். அன்றி, இராஜராஜனுடைய நான்காம் (கி. பி. 989) ஆண்டுக் கல்வெட்டொன்றில் 'ஸ்ரீ ராஜேந்த்ர சோழதேவன்' குறிக்கப்பட்டிருக்கிறான்.[1] அதனால் பட்டத்துக்கு வந்தபொழுது இவன் ஏறக்குறைய ஐம்பது வயதடைந்தவன் என்று கூறலாம். அங்ஙனமாயின் இராஜேந்திரன், தன் பாட்டனை சுந்தர சோழ பராந்தகன் ஆண்டுவந்த காலத்திலேயே பிறந்தான் போலும்.

இவனுடைய இயற்பெயர் என்ன என்பதும் தெரியாது. இவன் தந்தையான இராஜராஜனுடைய இயற்பெயர் அருண்மொழி என்பதைத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் முதலியன தெரி

[1] S. I. I., V, No. 982

விக்கின்றன. அவ்விதம் இவனுடைய பெயர் கூறப் படவில்லை. எனினும் இராஜராஜனுடைய ஆட்சி யின் பதினெட்டாம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று[1] திருப்புறம்பியம் என்னும் ஊர் இராஜேந்திர சிங்க வளநாட்டைச் சார்ந்திருந்தது என்று தெரிவிப்பதை யாராய்ந்தால் இவனுடைய இயற்பெயர் இராஜேந் திர சிங்கன் என்று கூற இடமுண்டு.

இக்காலங்களில் தஞ்சையே ஸாம்ராஜ்யத்தின் தலைநகராக விளங்கினாலும், அரச குடும்பத்தவர்கள் பெரும்பாலும் கும்பகோணத்துக்குப் பக்கத்தில் உள்ள பழையாறை என்னுமிடத்தில் இருந்த அரண்மனையில்தான் வசித்து வந்தார்கள். இரா ஜேந்திரன் தன்னுடைய இளமைப் பருவத்தை அவ்விடத்திலேயே கழித்துவந்தான்.

ஒருவனுடைய பிற்கால வாழ்க்கை சிறப்பாக அமைவதற்கு அவன் இளமைப் பருவத்தில் அடை ந்த பயிற்சியே அடிப்படையாகும். இராஜராஜ னும், இதை நன்கு உணர்ந்து இராஜேந்திரனுக்கு இளமையிலேயே அவனுடைய அந்தஸ்துக்குத் தக்கபடி பயிற்சி யளித்திருக்கவேண்டும்; அன்றி யும், அரசகுடும்பத்தில் வசித்துவந்த இருபெண்மணி கள் இராஜேந்திரனுடைய வளர்ச்சியைப் பெரிதும் கவனித்து வந்தார்கள். அவர்களுள் ஒருத்தி இராஜ ராஜனுக்கு முன் பிறந்த குந்தவையார். இவள் சாஸனங்களில் 'ஆழ்வார் பராந்தகன் குந்தவைப்

[1] 333 of 1927; M. E. R., 1927, p. 78

பிராட்டியார்' என்று வழங்கப் பெறுவாள். இவள் வல்லவரையர் வந்திய தேவரை மணந்திருந்தாள். ஆயினும், தன் வாழ்க்கையின் பெரும் பகுதியை இவள் தன் தம்பியுடனேயே கழித்தாள். இராஜ ராஜனும் இவளிடம் மிக்க பக்தியுடன் நடந்து வந்தான். நாட்டில் அரசனுக்கு அடுத்தபடியான மரியாதை இவளுக்கே இருந்துவந்தது என்றும் கூறலாம். இவள் மிகுந்த தெய்வபக்தி வாய்ந்தவள். இராஜேந்திரன் எப்பொழுதும் இவளுடனே வசித்துவந்தான் என்றே தோற்றுகிறது.

மற்றவள் கண்டராதித்த சோழன் தேவியாகிய செம்பியன்மாதேவி. அவள் தன் கணவனை கண்டராதித்தன் இறந்த பிறகு, நீண்ட காலம் அதாவது சற்றேறக்குறைய நாற்பத்தைந்து வருஷங்கள், உயிருடன் இருந்திருக்கிறாள். தன் கணவனைப் போல அவளும் மிகுந்த சிவபக்தி வாய்ந்தவள். அவள் திருக்குரங்காடுதுறை, திருமணஞ்சேரி முதலிய இடங்களில் இருந்த கோயில்களைக் கற்றளிகளாக எடுப்பித்தாள். திருவாரூர், திருநறையூர் முதலிய ஊர்களிலுள்ள கோயில்களுக்குப் பல நிவந்தங்கள் விட்டிருக்கிறாள். கோனேரிராஜபுரத்தில் இருந்த கோயிலைப் புதுப்பித்து நிவந்தங்கள் அளித்ததோடு அந்தக் கோயிலுக்குக் கண்டராதித்தம் என்ற பேருமிட்டாள். அங்கே தானும் தன் கணவனும் தம் மகனும் கடவுளை வழிபடுவதாகக் கல்லிற் படிவங்கள் செதுக்கி வைத்தாள். இவ்

விதம் சிவபெருமானுக்குத் திருப்பணி செய்வ தையே முக்கிய நோக்கமாகக் கொண்டு அவள் காலம் கழித்துவந்தாள்.

சிவபக்தி மிக்க இவ்விரு பெண்மணிகளாலும் வளர்க்கப்பட்ட அரசிளங்குமரன் சிறந்த நெறியில் பயிற்றுவிக்கப் பட்டிருப்பான் என்பதைக் கூற வேண்டியதில்லை. அன்றியும், இளமைப்பருவத்தில், சிவனடியார்களுள் ஒருவராக வைத்து எண்ணப் படும் கண்டராதித்தருடைய பேரையும் புகழையும் பலர் இவனுக்கு அறிவுறுத்தி அவர் அடிபற்றிப் பக்தியுடன் நடக்கவேண்டும் என்றும் கூறியிருப்பர்.

இராஜராஜன் முடிசூட்டப்பெற்ற காலத்தில் இராஜேந்திரன் உரிய வயதை அடைந்திருந்தான். ஆதலால், இவனுக்கும் இளவரசாக மகுடாபிஷே கம் நடந்தது போலும். எவ்வாறாயினும், அரசிளங் குமரன், தந்தையின் ஆட்சி ஆரம்பித்த காலத்தி லிருந்தே அரசியலில் கலந்து கொண்டிருந்தான். இவனுக்குப் பஞ்சவன் மாராயன் என்ற பட்டமும், மகாதண்டநாயகப் பதவியும் அளிக்கப்பட்டன.

இராஜராஜன் முப்பத்தோராண்டுகள் அரசு செலுத்தினன். அந்தக் காலம் முழுவதும், அரச காரியத்தில் பெரும் பகுதியை இராஜேந்திரனே மேற்கொண்டு நடத்தியிருக்கிறான். இராஜராஜன் அடைந்தனவாகக் கூறப்படும் வெற்றிகள் பல வற்றுக்கும் அவன் மகனை இராஜேந்திரனே காரணமாவான்; இவனே படையை நடத்திச்

சென்று போர் புரிந்து வெற்றி கொண்டவன். இராஜராஜனுடைய ஆட்சியை நாம் இராஜேந்திரனுடைய இளவரசாட்சியாகக் கொள்ளலாம். ஆதலின், இராஜராஜனுடைய வெற்றிச் செயல்களை முறையாகக் கவனிப்போம்.

இராஜராஜன் முடிசூட்டப்பெற்ற பிறகு அதுசம்பந்தமான விழாக்களும் கொண்டாட்டங்களும் முடிவடையும் வரையில் காத்திருந்தான். அவை முடிந்தவுடன், அரசியலில் புகுந்து நாட்டைச் சீர் செய்வதிலும், திக்கு விஜயம் செய்வதிலும் முற்பட்டான்.

தென் திசை வெற்றி

அவன் முதன் முதலாகத் தெற்கு நோக்கிச் சென்று பாண்டியனையும் சேரனையும் வென்றான். அக்காலத்தில் பாண்டி மண்டலத்தை ஆண்டுவந்த அமரபுஜங்கன், பேரரசை மதியாமல் சுயேச்சையாக நடந்து வந்தான் போலும்.[1] அவனுக்குச் சேரனும், ஈழத்தரசனும் உதவியாக இருந்தார்கள். இராஜராஜன் பாண்டியனை வென்று நாட்டைக் கைக்கொண்டதுடன், சேரன்மீதும் தண்டு எடுத்துச் சென்றான். அப்பொழுது சேரநாட்டை ஆண்டு வந்தவன் யார் என்பதை நிச்சயமாகக் கூறமுடியவில்லை. பாஸ்கர ரவிவர்மன் திருவடி என்பவனுடைய சாஸனங்கள் அக்காலத்தைச் சார்ந்தன வென்று கூறக்கூடியனவாக இருப்பதால் இராஜராஜனால் வெல்லப்பட்டவன் அவனே என்று சொல்

[1] திருவாலங்காட்டுச் செப்பேடுகள்

லாம்.[1] மலைநாடு அதுவரையில் பிறருக்கு அடிப்பட்டாமல் தனியாக இருந்து வந்தது. மன்னன் மேலைக் கடற்கரை ஓரமாகவுள்ள விழிஞத்தைத் தாக்கி அதனைக் கைக்கொண்டதுடன், 'காந்தளூர்ச் சாலை' என்னுமிடத்தில், சேரனுடைய மரக்கலங்களை (கப்பல்களை) அழித்தான்.[2]

இவை மன்னனுடைய ஆட்சியின் மூன்றும் ஆண்டுக்குள்ளாகவே நடந்திருத்தல் வேண்டும் என்பது மூன்றும் ஆண்டுக்கல்வெட்டில் 'மும்முடிச் சோழன்' என்ற விருது காணப்படுவதாலும்[3] நான்காம் ஆண்டின் தொடக்கத்துக் கல்வெட்டில் காந்தளூர்ச்சாலைக் கலமறுத்த செய்தி கூறப்பட்டிருப்பதாலும்[4] தெரியவரும். ஆயினும், சேர நாட்டில் இவனுடைய எட்டாம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்துச் சாஸனங்கள் கிடைக்கவில்லை. இடைப்பட்ட காலம் வென்று கைக்கொண்ட நாட்டைச் சீர்திருத்துவதில் கழிந்தது போலும்.

---

[1] T. A. S., II, pp. 81-2

[2] 'காந்தளூர்ச் சாலைக்கலமறுத்த' என்னும் தொடருக்குப் பலர் பலவிதமாகப் பொருள் கூறுவர். 'காந்தளூரில் இருந்த அறச்சாலையில், சாப்பிட வேண்டியவர்கள் எவ்வளவு என்பதை வரையறுத்த' செய்தியைக் கூறுகின்றது என்று ஒரு சாரார் கூறுவர் (தேசிக விநாயகம் பிள்ளை எழுதிய 'Kandalursalai' பார்க்க). இவ்வூர் திருவனந்தபுரத்தின் ஒரு பாகமாகிய வலியசாலை என்பதாகும் (T.A.S.,II,p 4.)

[3] 453 of 1908

[4] 395 of 1922

மலைநாட்டின்மீது இவன் ஒரு தடவைக்குமேல் படையெடுத்துச் சென்றிருக்கவேண்டும். இராஜராஜன் 'மலைநாட்டைக் கைக்கொண்டு பதினெண் அரசர் சிரங் களைந்தான்' என்று விக்கிரம சோழனுலாவும், 'பதினெண் அரசரைக் கொன்று உதகையைக் கொளுத்தினன்' என்று குலோத்துங்க சோழனுலாவும் கூறுகின்றன.

குடமலை நாட்டுப் போர்

இராஜராஜன் காலத்தில் மலைநாட்டில் நிகழ்த்திய போர்ச்செயல்களை இராஜேந்திரனே நடத்தி வந்தான் போலும்.[1] 'மும்முடிச் சோழன் பெற்ற களிறு துளுவத்தையும் கொங்கணத்தையும் கைப்பற்றி மலேயாவை (மலையர்களை) அடிப்படுத்தி,' தெலுங்கன், ரட்டிகன் ஆகியவர்களுடன், சேரனையும் புறங்கண்டது.[2]

இராஜேந்திரன் கங்கமண்டலத்து மஹாதண்டநாயகனாக இருக்கையில், மனிஜன் என்பான் பணசோகே என்னுமிடத்தில் வெற்றிகொண்டதை மெச்சி அவனுக்கு கூஷத்திரிய சிகாமணி கொங்காள்வான் என்ற விருதையும் மாளவ்வி (குடகு) என்ற ஊரையும் அளித்திருக்கிறான். மனிஜன் எதற்காகப் போர் நிகழ்த்தினன் என்பது தெரியவில்லை; அஃது அக்காலத்தில் அவ்விடத்திலிருந்த 'சங்காள்வார்' என்னும் குறு நில மன்னர்களுடன் நிகழ்த்தப்பட்

[1] E. C., III Sr. 125

[2] 5 of 1895; E.C. III, Sr. 140; E.C., Cg 46.pp.12-13

டதுபோலும். இதற்குப் பிறகு அவன் வமிசத்தவர்கள் சுமார் நூறுண்டுகள் சோழர்களுக்கு அடங்கியவர்களாகக் கொங்காள்வார் என்ற பட்டத்துடன் குடகுநாட்டிலே ஆண்டு வந்திருக்கிறார்கள்.

ஈழப்போர்

இராஜராஜனுடைய சாஸனங்களிற் காணப்படும் மெய்க்கீர்த்திகளில் அவன், 'முரட்டொழிற் சிங்களர் ஈழ மண்டலம்' கொண்ட செய்தி காணப்படுகின்றது. அவன் ஆட்சியின் எட்டாம் ஆண்டிலிருந்தே மெய்க்கீர்த்திகள் காணப்படுவதால் அவன் ஈழ மண்டலத்தை வெற்றி கொண்டது கி. பி. 993-ஆம் ஆண்டுக்கு முன்பாகவே இருத்தல்வேண்டும்.[1] இலங்கைச் சரிதத்தினின்றும், அக்காலத்தில் அந்தத் தீவை ஆண்டுவந்த ஐந்தாம் மஹிந்தன் என்பவன் அத்தீவின் தென்கிழக்குப் பாகத்தில் உள்ள ரோஹண நாட்டிற்கு ஓடி ஒளிந்துகொண்டான் என்று தெரிய வருகின்றது.[2] சோழ மன்னனும் அத்தீவின் வட பகுதியைக் கைக்கொண்டு அதற்கு 'மும்முடிச் சோழ மண்டலம்' எனப் பெயரிட்டுத் தன் நாட்டுள் ஒரு பகுதியாகச் சேர்த்துக்கொண்டான். அந் நாட்டினின்றும் அவன் கொணர்ந்த பெருந் தொகுதியான பொன்னும் மணியும் தஞ்சைப் பெரியகோயிலுக்கு அளிக்கப்பட்டன வென்பது அம்மன்னது சாஸனங்களால் நன்கு தெரிய வருகின்றது.

---

[1] 261 of 1910

[2] சூளவமிசம், 55-ஆம் அத்தியாயம்

[3] S. I. I., II, p. 426

அதுகாறும் இலங்கைக்குத் தலைநகராக இருந்த அநுராதபுரத்தைச் சோழர்கள் அழித்து விட்டார்கள். இராஜராஜனுக்கு முற்பட்டவர்கள் அத்தீவின் வடபகுதியை மட்டும் கைக்கொள்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். ஆனால் இராஜராஜனே அத்தீவு முழுவதையும் தன் ஆளுகையின் கீழ்க் கொணரவேண்டி மத்திய பாகத்தில் உள்ள பொலன்னருவா என்னும் இடத்திற்கு ஜனநாத மங்கலம் என்ற பெரியரிட்டுத் தலைநகரை மாற்றிவிட்டான்.[1] அதுவே பிற்காலத்தில் சிங்கள அரசர்களின் தலைநகராக விளங்கியது.

நுளம்பப்பாடி

இராஜராஜன் கொங்குநாட்டைக் கைக்கொண்டதாகக் கூறப்படவில்லை. ஆயினும், அவன் ஆட்சியின் ஆரம்பத்திலேயே அஃது அவனுக்கு அடிப்பட்டிருந்தது. அதன் பக்கத்தில் அமைந்திருந்த நுளம்பப்பாடியைத் தாக்கி அதனைக் கைக்கொண்டான். நுளம்பப்பாடி என்பது சேலம், வடவார்க்காடு, பல்லாரி, கோலார், தும்கூர் ஆகிய ஜில்லாப் பகுதிகளைக் கொண்ட பிரதேசம்.[2] பல்லவ வமிசத்தவர்களான நுளம்பர்கள் அதனைக் கங்க அரசர்களின் கீழ்ச் சிற்றரசர்களாக ஆண்டுவந்தார்கள். கங்கபாடியும், அதன் தலைநகரான தழைக்காடும், மைசூர் ஜில்லாவின் பாகங்களைக் கொண்ட

[1] Archaeological Survey of Ceylon, 1906, p. 27

[2] E. I., X, p. 57

தடிகைபாடியும் [1] இப் படையெடுப்பின் முடிவில் சோழர்கள் வசம் ஆயின.

இராஜராஜன் இந்நாடுகளை அதிகச் சிரமமின்றிக் கொள்வதற்குச் சுமார் கி. பி. 973-ஆம் ஆண்டில் இராஷ்டிரகூடர்கள் வலியிழந்து ஒழிந்ததே காரணமாக இருந்தது. கி. பி. 992-ஆம் ஆண்டுச் சாஸனம் ஒன்றில், [2] அவர்கள் ஸ்தானத்தில் புத்துயிர்பெற்று விளங்கிய மேலைச் சளுக்கிய வமிசத்து அரசன் இரண்டாம் தைலபன் சோழ அரசனை வென்றதாகக் காணப்படினும், அவன் படைவலி கங்கபாடி, தடிகைவாடி, நுளம்பப்பாடி முதலிய நாடுகளில் பயன்பெறவில்லை என்பது நன்கு தெரியவரும்.

மைசூர் ஸம்ஸ்தானத்தில் 913-ஆம் சக ஆண்டில் (கி. பி. 991) சோழ நாராயணன் என்பான் ஒருவனுடைய சாஸனம் கிடைத்திருக்கிறது.[3] அதில் குறிக்கப்பட்டிருக்கும் சோழன் இராஜராஜனே என்று கொள்ளலாம். அங்ஙனமாயின் இப் படையெடுப்பு அவன் ஆட்சியின் ஆரும் ஆண்டுக்குள் நடைபெற்றிருக்க வேண்டும்.

சளுக்கியப் போர்

சுமார் கி. பி. 992-ஆம் ஆண்டுக்குப் பிறகு இரட்டபாடியை ஆண்டுவந்த மேலைச்சளுக்கிய அரசனை இரண்டாம் தைலபன் இறந்துவிட்டதால்,

---

[1] I. A., XXX, p. 109
[2] 36 of 1904; I. A , V, p. 17
[3] My. A. R., 1917. p. 42

அதனால் அவன் இராஷ்டிரகூடமன்னனை மூன்றாம் கிருஷ்ணனுடைய உதவியைப் பெற்று, நாட்டினில் கலகம் செய்து ஒரு பகுதியைக் கைப்பற்றினான்.[1] இஃது அம்மராஜனுடைய ஆட்சியின் அந்தத்தில் நடைபெற்றிருத்தல் வேண்டும். அம்மராஜனுக்குப் பிறகு கீழைச் சளுக்கிய அரசுக்கு உரிமை பெற்ற அவனுடைய மாற்றாந்தாய் வயிற்றுச் சகோதரன் தானார்ணவன் கி. பி. 970-ஆம் ஆண்டிலிருந்து 973-ஆம் ஆண்டுவரையில் நாட்டின் மற்றொரு பகுதியில் அரசனாக விளங்கினான். ஆயினும், அதற்குப் பிறகு நாடுமுழுமையும் இவ்வய பரம்பரைவசம் போய்விட்டது. பாடபனும், அவன் தம்பி இரண்டாம் தாழனும் இருபத்தேழு வருஷங்கள் வேங்கி மண்டலம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டார்கள்.[2]

மூத்த பரம்பரையைச் சார்ந்தவர்கள் அக்காலத்தில் நாட்டினின்றும் வெளியேறி மறைந்து வாழ்ந்தார்கள். அதனால் அவர்களுடைய சாஸனங்களில் அவ்விருபத்தேழு வருஷகாலம் வேங்கி அராஜகமாகவும் அநாயிகமாகவும் இருந்தது என்று குறிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரம்பரையைச் சார்ந்த சக்திவர்மன் என்பவனைக் கீழைச் சளுக்கிய சிங்காதனத்தில் அமர்த்தும்பொருட்டே இராஜராஜன் வேங்கி நாட்டின்மேல் தண்டு எடுத்துச் சென்றான்.

---

[1] E. I, XIX, p. 142

[2] „ 151-2

இராஜராஜன் முதலில் தன் மூதாதையான பராந்தகன் அடிப்படுத்திய சீட்புலிநாட்டை மறுபடியும் வென்று சோழராட்சியின்கீழ்க் கொணர எண்ணினான். அதற்காகப் பெரும்படையை அனுப்பி அந்நாட்டையும் பாகி நாட்டையும்[1] வெற்றிகொண்டான். இஃது அவனுடைய ஆட்சியின் ஆரும் ஆண்டிலேயே நிகழ்ந்திருத்தல் வேண்டும்.[2] அம்மன்னனுடைய எட்டாம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றும் நெல்லூர் ஜில்லாவில் கிடைத்துள்ளது.[3] அக்காலத்தில் அந்தப் பிரதேசத்தைத் தெலுங்குச் சோழ அரசனை பீமன் ஆண்டு வந்தான்.[4] இந்தப் படையெடுப்பில் சக்திவர்மனும் சோழர்பக்கத்தில் மிகுந்த வீரத்துடன் போர்புரிந்து புகழ் பெற்றான். [5]

சக்திவர்மன் இராஜ்யம் இல்லாதவனுகச் சோழ நாட்டிலேதான் வாழ்ந்து வந்தான் என்று தெரிகிறது. [6] அவன், இராஜராஜன் பிறநாடுகளோடு செய்த போர்களில் துணைபுரிந்துவந்தான் போலும். சக்திவர்மனுக்கு உதவியாகச் சோழர்கள் வருவதை உணர்ந்த இளைய பரம்பரையினர், மேலைச்

---

[1] பாகராஷ்ட்ரம் என்னும் தெலுங்குநாட்டுப் பகுதி

[2] 79 of 1921

[3] I. M. P. Nellore. 239

[4] திருவாலங்காட்டுச் செப்பேடுகள் ; E. I., XXII

[5] பபுபற்றுச் செப்பேடுகள் ; ஸ்ரீ நீலகண்ட சாஸ்திரிகள் எழுதிய 'சோழர்கள்', முதல் வால்யூம், பக். 127

[6] Historical Sketches of Ancient Dekkan, p. 247

சளுக்கிய அரசனை ஸத்யாச்ரயன் உதவியை வேண்டினர்கள். புத்துயிர் பெற்று விளங்கிய மேலைச் சளுக்கியர்களும், தங்கள் குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு உதவி செய்வதை மட்டும் எண்ணுமல், தங்கள் விரோதிகளான சோழர்களை முறியடிப்பதற்குத் தகுந்த சமயம் வாய்த்தது என்றும் எண்ணி, இளைய பரம்பரைக்கு உதவியாக இருந்தார்கள்.[1] எனினும், இறுதியில் அவர்கள் வீழ்த்தப்பட்டனர்; சக்திவர்மன் அரசனாக முடிசூட்டப் பெற்றான். அவன் தம்பி விமலாதித்தனுக்கு வேங்கி நாட்டு இளவரசப் பதவியுடன், தன் பெண் குந்தவையையும் இராஜராஜன் மணம் செய்துகொடுத்தான். தனக்கு இவ்விதம் உதவிய சோழவரசனுக்குச் சோழ நாராயணன் என்ற பெயர் இருப்பதை எண்ணிச் சக்திவர்மனும் சளுக்கிய நாராயணன் என்னும் பெயரை வைத்துக்கொண்டான்.

இராஜராஜன் வேங்கி நாட்டைக் கைக்கொண்டாலும் அதைச் சோழ ஏகாதிபத்தியத்துடன் சேர்த்துக்கொள்ளவில்லை; தன் மேற்பார்வையில் உள்ள ஒரு தனி யரசாங்கமாகவே மதித்துவந்தான்.

கலிங்க வெற்றி

இராஜராஜன் கலிங்கத்தையும் வெற்றிகொண்டானென்று அவன் மெய்க்கீர்த்தி கூறும். அதைப் பற்றிய செய்திகள் ஒன்றும் தெரியவில்லை. ஒருகால் அஃது இராஜராஜன் வேங்கிமீது படையெடுத்துச்

[1] S. I. I., VI, 102

சென்று நாட்டை வென்று சக்திவர்மனை வேங்கி மன்னனாக அபிஷேகம் செய்த காலத்தில் நிகழ்ந்ததாக இருக்கலாம்.

அது வேறுனதாக இருத்தல் கூடும் என்றும் எண்ண இடமிருக்கிறது. கலிங்கதேசத்து அரசர்கள் கீழைச் சளுக்கியர்களின் மூத்த பரம்பரைக்கு விரோதமாக இருந்தார்கள். அதனால், சக்திவர்மனுக்கு முடிசூட்டிவிட்டு இராஜராஜன் நாடு திரும்பியதும், கலிங்காதிபதி வேங்கியைத் தாக்கியிருக்கக்கூடும். அதற்காகச் சோழர்கள் மறுபடியும் வடக்கு நோக்கிக் கலிங்கத்தின்மீது படையெடுத்துச் சென்றிருக்கலாம்.

இராஜேந்திரன், விமலாதித்தன் என்னும் குலூத அரசன் ஒருவனை வென்று மஹேந்திரகிரியில் ஜயஸ்தம்பம் ஒன்றை நிறுத்தியதாக அவ்விடத்தில் வடமொழியிலும் தமிழிலும் பொறிக்கப்பட்டுள்ள இரண்டு சாஸனங்கள் கூறுகின்றன.[1] ஆனால் இச் செய்தி, இவனுடைய மெய்க்கீர்த்தியில் காணப்படவில்லை. ஆதலின் இஃது இவன் தந்தை காலத்தில் பெறப்பட்ட வெற்றியைக் குறிப்பதாகவே கொள்ள வேண்டும். இராஜராஜன் அடைந்த கலிங்கவெற்றியின் ஓர் அம்சமேபோலும் இது.[2]

---

[1] 396, 397 of 1896; A. S. I., 1911-12 pp. 171-2

[2] ராவ்பகதூர் கிருஷ்ண சாஸ்திரிகள் இதைக் கங்கா-விஜயம் செய்த காலத்தில் இராஜேந்திரன்கொண்ட வெற்றியாகக் கருதுவர்; S. I. I. IV. p. 388 n. 6

இவ்விடத்தில் குறிக்கப்பட்ட விமலாதித்தன் யார் என்பதையும் அறியக்கூடவில்லை. அவன், கீழைச்சளுக்கிய அரசனை விமலாதித்தன்கீழ்ச் சிற்றரசனாக இருந்து அவனுக்கு அடங்காமல் இருந்ததால், இராஜேந்திரனால் வெற்றிகொள்ளப் பட்டவன் போலும்.

மலையத் தீவுகள்

இராஜராஜனுடைய வெற்றிகளில் கடைசி யாகக் கூறப்படுவது அவன், 'முந்நீர்ப்பழந்தீவு பன்னீராயிரமும்' கொண்ட செய்தியாகும். அவை இப்பொழுது 'மால்திவ்' என்று வழங்கப்படும் தீவுகளாகும்.[1] இப் படையெடுப்பைப் பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை. ஆயினும், அக்காலத் தில் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட கடற்படை ஒன்று இருந்திருத்தல்வேண்டும் என்பது தெரியவருகின் றது. அம்மன்னன், இதற்கு முன்பு இலங்கைமீது படையெடுத்துச் சென்றபொழுதும் அவனுக்குக் கடற்படை பெரிதும் உதவியிருக்க வேண்டும்.

இராஜராஜன் முப்பத்தோராண்டுகள் அரச னாக இருந்தான்; எனினும், முதுமை மேலிட்டுவிட்ட தால், பிற்பகுதியில் அரசியல் முழுவதையும் இராஜேந்திரனிடம் ஒப்பித்து விட்டான் என்று எண்ணவேண்டி யிருக்கிறது. இராஜராஜன் தன்

[1] மால்திவ் தீவுகளின் அரசன் தன்னை இப்பொழுதும் 'பன்னீராயிரம் தீவுகளின் அரசன்' என்று கூறிக் கொள்ளு கிறானும்; ஸ்ரீ நீலகண்ட சாஸ்திரிகள், 'சோழர்கள்' முதல் வால்யூம், பக்கம் 220-குறிப்பு.

ஆட்சியின் பிற்பகுதியிலே சிவபெருமானை வழிபடுவதில் காலம் கழித்து வந்தானென்று தோற்றுகிறது. அவன் நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு திருமுறை வகுக்கச் செய்தான். தஞ்சையிலே உள்ள பெரிய கோயிலைக் கட்டினான்.

அம்மன்னன் ஆட்சியில் நாடு புது மலர்ச்சி பெற்றது. நிர்வாகத்தின் ஒவ்வொரு துறையிலும் பெரிய மாறுதல்கள் உண்டாயின. மக்கள் மிகவும் இன்புற்று வாழ்ந்திருந்தார்கள்.

இங்ஙனம், நாட்டுக்குப் பல நன்மைகள் செய்தவனும் சிவபக்தி மேலிட்டவனுமான இராஜராஜன் இராஜரிஷிபோல வாழ்ந்துவந்தான். தன் வாழ்வின் இறுதி நெருங்குவதை யறிந்த அவன், தன் வாழ்நாளிலேயே இராஜேந்திரனுக்கு முடிசூட்டிவிட்டு அடைதற்கரியபேரான மோக்ஷத்தை அடையும் வழியைக் கடைப்பிடிக்க விரும்பினன். அவ்வண்ணமே இராஜேந்திரன் கி. பி. 1012-ஆம் ஆண்டில் அரசனாக முடிசூட்டப்பெற்றான்.

---

4. இராஜேந்திரன் அரசாட்சி

இராஜேந்திரன் மகுடாபிஷேகம் கி. பி. 1012-ஆம் ஆண்டில் மார்ச்சு மாதம் 27-ஆம் தேதிக்குப் பிறகு ஜூலை மாதம் 7-ஆம் தேதிக்குள் ஏதோ வொருநாளில் நடைபெற்றிருத்தல் வேண்டும் என்று நிச்சயிக்கப்பட்டுள்ளது.[1] அதற்குப் பிறகு இராஜ

[1] E. I., VIII., p. 260

ராஜன் மூன்று ஆண்டுகளாவது வாழ்ந்திருத்தல் வேண்டும் என்று தெரியவருகின்றது.[1]

இவன் பட்டம் கட்டப்பெற்ற காலத்தில் சோழ ஸாம்ராஜ்யம் பரந்திருந்தது. வடவேங்கடம் தென் குமரியின் இடைப்பட்ட தமிழ்நாட்டையும் கடந்து இவன் ஆணை செலுத்தி வந்தான். சோழர்கள் ஆண்டுவந்த நாட்டுக்கும், வடக்கே சளுக்கியர்கள் ஆண்டுவந்த குந்தளத்துக்கும் இடையில் துங்கபத்திரை நதி எல்லையாக இருந்தது. அந்நதி கிருஷ்ணை நதியுடன் கலக்குமிடத்திலிருந்து வடக்கே ஒட்டர தேசம் வரையில் உள்ள வேங்கியும் கலிங்கமும் சோழர்கள் ஆட்சியில்தான் இருந்தன. இங்ஙனமாக இப்பொழுது சென்னை ராஜதானி என்று வழங்கப்படும் பிரதேசமும், மைசூர் ஸம்ஸ்தானத்தின் பெரும் பகுதியும், இலங்கையும் சோழ நாடாக விளங்கின. புதியனவாகக் கைக்கொண்ட நாடுகளை

---

[1] தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள சாஸனங்களிற் சில இராஜராஜனுடைய இருபத்தொன்பதாம் ஆண்டில் பொறிக்கப்பட்டனவாகக் காணப்படுகின்றன (S. I. I., II, p. 90). அன்றி, இராஜராஜன் தன் மகன் இராஜேந்திரன் ஆட்சியின் மூன்றாம் ஆண்டில் ஒரு தேவதானம் கொடுத்தான் என்று திருமுக்கூடல் கல்வெட்டு ஒன்று கூறுகின்றது (196 of 1917). எனினும், இராஜகேசரி இராஜராஜதேவனுடைய முப்பத்தோராம் ஆண்டுக் கல்வெட்டுகள் ஒன்றிரண்டு கிடைத்துள (252 of 1915). அவற்றால் இராஜராஜன் தன் மகனுக்கு முடிசூட்டிய பிறகு ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஜீவித்திருந்தான் என்று கூறலாம்.

அடக்கி ஆண்டுவர அங்கங்கே நம்பிக்கையுள்ள அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருந்தனர். எனினும், அவ்விடங்களில் முன்பு ஆண்டுவந்த அரச வமிசத்தவர்கள் நீக்கப்பட்டார்கள் என்று துணிய இடமில்லை. போர்முனையில் அஞ்சாமல் சண்டை செய்யக்கூடிய 'தெரிந்த' படையினர் பலர் இருந்தார்கள். இவ்விதமாக, தான் கைக்கொண்ட நாடுகளைப்பற்றி அரசன் கவலைப்பட நேராமல் அவர்கள் பார்த்துக் கொண்டதால், மன்னன் தன் கவனத்தை வேறு விதமாகத் திருப்பி, அடிப்படுத்தாத பிற நாடுகளையும் வென்று கைக்கொள்ள எண்ணினன். இவனுக்கு அது சாத்தியமாகவும் இருந்தது.

இவன் தனது ஆட்சியின் முற்பகுதியிலேயே அதாவது ஏழாம் (கி. பி. 1018) ஆண்டில், தன் மகன் இராஜாதிராஜனுக்கு முடிசூட்டிவைத்தான்.[1] அது முதல் ஏறக்குறைய இருபத்தைந்து வருஷ காலம் தந்தையும் மகனும் இராஜ்யபாரத்தைஒன்று சேர்ந்தே வகித்து வந்தார்கள். இஃது, இராஜாதிராஜனுடைய மெய்க்கீர்த்திகளுள் ஒன்று,

> "வடதிசைக் கங்கையும் தென்றிசை இலங்கையும்
> குடதிசை மகோதையும் குணதிசைக் கடாரமும்
> தண்டினில் கொண்ட தாதைதன் மண்டல
> வெண்குடை நிழலெனத் தன்குடை நிழற்றித்
> திசைதொறும் செங்கோ லோச்சி"

என்று கூறுவதனின்றும் நன்கு விளங்குகின்றது.[2]

[1] E. I. IX, p. 218

[2] 75 of 1895 (S. I. I., V, 633), வரி, 2-4

இராஜேந்திரன் தன் தந்தையின் ஜீவதசை யிலேயே முடிசூட்டப்பெற்றுளையினும், அஃது இராஜ ராஜனுடைய ஆட்சியின் இறுதியிலே நிகழ்ந்த தாகும். இங்ஙனமின்றி, இராஜேந்திரன் தன் ஆட்சியின் முதலிலேயே தன் மகனுக்கு முடி சூட்டி இராஜ்யபாரத்தின் பெரும் பகுதியை அவன் வசம் ஒப்புவித்தது அதுவரையில் இல்லாத ஒரு புதுவழக்கமே யாகும்.

இவன் தன் மகன் இராஜாதிராஜனை யுவ ராஜனாக அபிஷேகம் செய்த காலத்திலேயே மற் றொரு மகனை சுந்தரசோழனைப் பாண்டிநாட்டுக்கு அதிபதியாக அமர்த்தினன்.[1] சாஸனங்களில் அவன்

---

[1] மன்னர்கோவிலில் சேர அரசனை இராஜஸிம்ஹன் கட்டிய கோயிலான இராஜேந்திர சோழ விண்ணகருக்கு இராஜேந்திரன் தன் ஆட்சியின் இருபத்து நான்காம் ஆண் டில் தேவதானமாக நிலம் அளித்தான் என்றும், அது ஜடா வர்மன் சுந்தரசோழ பாண்டியனுடைய ஆட்சியின் பதினேந் தாம் ஆண்டினின்றும் அனுபவிக்கப்பட வேண்டுமென்றும் ஒரு கல்வெட்டு (112 of 1905) தெரிவிக்கின்றது. அந்த இரண்டு ஆண்டுகளும் ஒன்றாக இருக்குமானால், ஜடாவர்மன் சுந்தரசோழ பாண்டியன் இராஜேந்திரனுடைய ஒன்பதாம் ஆண்டில் மண்டலாதிபதியாக ஆகியிருத்தல் வேண்டும். ஆயினும் திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் கூறப்பட்டிருப் பதை நோக்கினால், அவனும் மன்னனுடைய ஏழாம் ஆண் டில் நாட்டை ஏற்றுக்கொண்டான் என்று எண்ணவேண்டி யிருக்கின்றது.

ஜடாவர்மன் சுந்தரசோழ பாண்டியன் என்று கூறப்படுவதால், அவன் சோழனை இருந்தாலும், பாண்டி நாட்டை ஆள்வதால் பாண்டியன் என்ற பட்டத்தையும், பாண்டிய மன்னர்கள் மாறவர்மன், ஜடாவர்மன் என்று மாறித் தரித்துவந்த பெயர்களில் ஜடாவர்மன் என்ற விருதையும் தாங்கி வந்தான் என்பதை அறியலாம். இங்ஙனம் அரசகுமாரர்கள் மண்டலாதிபதிகளாக நியமிக்கப்படும் பொழுது அவர்களுக்கும் ஒருவிதமான மகுடாபிஷேகம் நடத்தப்பெற்றிருத்தல் வேண்டும்.

சிறிது காலத்துக்குப் பிறகு சேரநாடும் சுந்தர சோழபாண்டியன் ஆளுகையின்கீழ் விடப்பட்டது. சேரநாட்டிலுள்ளவர்களுக்கு விடுக்கும் உத்தரவில் அவன் சோழகேரளன் என்று குறிக்கப்படுவான். இங்ஙனமாக அவன் பாண்டிய கேரள நாடுகளைச் சற்றேறக்குறைய இராஜேந்திரன் காலம் முழுவதும், இருபத்து மூன்று ஆண்டுகளுக்குமேல், பரிபாலனம் செய்துவந்தான்.

இம் மண்டலாதிபதிகள் அந்த அந்த நாடுகளில் ஸர்வ ராஜ்யாதிகாரத்தையும் செலுத்திவந்தார்கள். அவர்கள் சாஸனங்களுட் பெரும்பாலன அவர்கள் ஆட்சியின் ஆண்டுகளையே கூறுவனவாம். எனினும், அவர்கட்குத் தனி மெய்க்கீர்த்திகள் இல்லை. அவர்கள் சாஸனங்களில் காணப்படும் மெய்க்கீர்த்தி பேரரசனுடையதாகவே இருக்கும்.

சக்கரவர்த்தி தனக்குப் பின் சிங்காதனம் ஏற இருப்பவனுக்குத் தான் ஆண்டுவரும்போதே மகுடாபிஷேகம்செய்வித்து இராஜ்யபாரத்தின் பெரும் பகுதியை அவனிடம் ஒப்பிப்பதும், இராஜமிசத்தைச் சேர்ந்த மற்றவர்களை மண்டலங்களின் அதிபதிகளாக நியமிப்பதும் இராஜேந்திரன் ஏற்படுத்திய புதிய வழக்கங்களாகும். இம்முறையினால் நாட்டுக்குப் பல நன்மைகள் உண்டாயின.

பின்னால் பேரரசனாக வேண்டியவன் அரசகாரியத்தில் வேண்டிய பயிற்சியைப் பெற்றான். மற்ற அரசகுமாரர்கள் மண்டலாதிபதிகளாகப் போனதால் அவர்கள் வீண்காலம் கழிப்பது நின்றுவிட்டதுடன், அவர்கள் பட்டத்தை அடையச் சூழ்ச்சி செய்ய இயலாதவர்களாகவும் ஆனார்கள்; நாட்டின் பரிபாலனத்திலும், ஒரு புதிய ஊக்கத்தை யடைந்து மக்களை இன்புறச் செய்தார்கள்.

இம்முறையை இவனுக்குப் பின்வந்த சோழர்கள் பலரும் மேற்கொண்டார்கள். அவர்கள் காலங்களிலும் இது நல்ல பலனை அளித்தது. எனினும், இம்முறையைப் பின்பற்றிய விஜயநகர மன்னர்களும் மொகலாய மன்னர்களும் மிகவும் துன்பத்தை அடைந்தார்கள். அவர்களுடைய ஸாம்ராஜ்யங்கள் அழிந்ததற்கு இதுவே காரணம் என்று கூறலாம். தூரதேசங்களின் மண்டலாதிபதிகள் தங்கள் பலத்தை அதிகரித்துக்கொண்டு சமயம் நேர்ந்தபொழுது கலகங்கள் விளைவித்து வந்தனர். மத்திய அரசாங்

கம் வலியற்று அவர்களை அடக்க முடியாமல் இருந்தால்தான், அவ்விதமாக மண்டலாதிபதிகள் ஆதிக்கம் பெறுவார்கள். சோழர்கள் ஆட்சியில் அவ்விதமான சூழ்ச்சிகள் நிகழாமை, அரசர்கள் மண்டலாதிபதிகளுக்கு ஸர்வாதிகாரத்தைக் கொடுப்பினும், அவர்கள் தம் கடமையை ஒழுங்காகச் செய்து வந்தார்கள் என்பதைக் காட்டுகின்றது.

இராஜேந்திரன் பல வெற்றிகளை அடைந்திருந்தாலும், அவற்றுள் இரண்டுதான் மிகவும் முக்கியமானவை. அவை,

"களிறு கங்கைநீ ருண்ண மண்ணெயிற்
காய்சி னத்தொடே கலவு செம்பியன்
குளிறு தெண்டிரைக் குரைக டாரமும்
கொண்டு மண்டலங் குடையுள் வைத்ததும்"

ஆகும். இவன் கடல் கடந்து கடாரம் கொண்டதால் 'கடாரம் கொண்டான்' என்ற பெயரை அடைந்தான்; ஆயினும், இவன் கங்கா விஜயத்தின் முடிவில் தரித்த 'கங்கை கொண்டான்' என்னும் பெயரையே பெரிதும் போற்றி மகிழ்ந்தான்.

கங்கைகொண்ட சோழபுரம் கண்டது

'பகீரதன் தவம் பெரிதா? என் கைவலி பெரிதா?' என்று நகைப்பதுபோல இராஜேந்திரன் தன் நாட்டைக் கங்கை நீரால் புனிதமாக்க விரும்பினன் என்று கூறுகின்றது திருவாலங்காட்டுச் செப்பேடுகளின் வடமொழிப் பகுதி. அரசன் தன் சேனைத்தலைவனை அனுப்பி, அவனைக் கங்கைக்கரை

வரையில் உள்ள பகையரசர்கள் எல்லோரையும் வென்று, அவர்கள் தலைமேல் கங்கை நீர்க் குடங் களைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான்; மஹா தண்ட நாயகனும் அவ்விதமே செய்து முடித் துத் திரும்பிவரும்போது அவனை அரசன் கோதா வரிக் கரையில் சந்தித்ததாகவும் கூறுகின்றது.

இவன் கங்கை நீருடன் வருங்காலத்தில் முக் கியமான நகரங்களில் எல்லாம் தங்கி ஈசுவரனைத் தொழுது வந்தான் என்று தெரியவருகிறது.[1] அன்றி எண்ணபிரம் என்னும் ஊரின் மஹாஸபை யார், "உடையார் ஸ்ரீராஜேந்த்ர சோழ தேவர் உத் தராபதத்தில் பூபதியரை ஜயித்தருளி யுத்தோத்ஸவ விபவத்தால் கங்கா பரிக்ரஹம் பண்ணி யருளின கங்கைகொண்ட சோழனென்னும் திருநாமத்தால் இத் திருமூற்றத்தில் வைத்தருளின உத்தமாக்ரம் கங்கைகொண்ட சோழனில் உண்ணும்.....வைஷ் ணவர்"களுக்குச் சில நிவந்தங்கள் விட்டிருப்பதால், இந்தத் திக்கு விஜய யாத்திரையானது நாட்டினில்

---

[1] இப்பொழுது கங்கை கொண்ட சோழபுரத்துக்குப் பத்துமைல் தூரத்தில் திருலோக்கி என்று வழங்கும் திரை லோக்ய மஹாதேவிச் சதுர்வேதி மங்கலம் என்னுமிடத்தில் 'இராஜேந்த்ர சோழ தேவன் கங்கை கொண்டு எழுந்தருளு கின்ற இடத்து' எம்பெருமானைத் 'திருவடி தொழுது' சென்றான் என்று ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது. M. E. R. 1932, p. 50. (No. 111 of 1932.)

எல்லோராலும் பாராட்டப்பட்டது என்று கருதத் தகும்.[1]

இவ் வெற்றியின் அறிகுறியாக இவன், கங்கை கொண்ட சோழபுரம் என்னும் ஒரு நகரத்தை அமைத்து, அதில் கங்கைகொண்ட சோழீச்சுரம் என்னும் கோயிலையும் எடுப்பித்து, பக்கத்தில் 'சோழகங்கம்' என்னும் பெரிய ஏரியை 'ஜல மய மான ஜயஸ்தம்ப'மாக எடுப்பித்தான்.

இவனுடைய கங்கா விஜயத்துக்கு வேறு ஒரு காரணத்தையும் கூறுவர் சிலர். இம் மன்னன் காட்டை அழித்து நகரமும் கோயிலும் கண்டு மக்களை அந்தப் பிரதேசத்தில் குடியேற்றினன். அவர் கள் புனிதமான நாட்டிலேதான் இருக்க விரும்பு வார்கள் ஆதலின், அவர்கள் மனத்தை இன்புறச் செய்வதற்காகக் கங்கை நீரைக் கொணர்ந்து அவ்விடத்தைப் புனிதமாக்கினன் என்பர்.

கங்கைகொண்ட சோழபுரம், திருச்சிராப்பள்ளி ஜில்லாவில், உடையார்பாளையம் தாலூகாவில் இப்பொழுது ஒரு சிற்றூராக இருக்கின்றது. ஒரு காலத்தில் இவ்வூர் ஒரு பெரிய நகராக விளங்கியது என்பதை யாவரும் எளிதில் அறிந்துகொள்ளலாம். இவ்வூருக்குப் பக்கத்தில் உள்ள பல கிராமங்களுக் கும், பெரிய நகரத்தின் பல பாகங்களுக்கு இடப் பட்டிருக்கும் பெயர்களே இன்றைக்கும் வழங்கி வருகின்றன. இந்நகரம், பிற்காலத்தில் சீரழிந்து

[1] கலிமகள், தொகுதி. 11, ப. 326

விட்டது. இப்பொழுதோவெனின், இவ்வூர் காடும் செடியும் வளர்ந்து பாழாகக் கிடக்கின்றது.

கங்கை கொண்ட சோழீச்சுரம்

இம்மன்னன் கங்கைகொண்ட சோழபுரத்தில் கட்டிய சிவபெருமான் கோவில் ஆறு கோபுரங்களோடு மிகவும் பெரியதாக அமைந்திருந்தது. அதன் அமைப்பு முற்றிலும், தஞ்சை இராஜராஜேசுவரமாகிய பெரிய கோயிலை ஒத்திருக்கிறது. உருவத்தில் அதனினும் சற்றுச் சிறியதாயினும், சிற்ப வேலையில் அதை விட மிகவும் சிறந்தது; இப்பொழுது இடிந்து கிலமாகக் கிடக்கின்றது. அதன் வெளிப்புறத்து மதில்கள் காணப்படவில்லை.[1] கிழக்குப் பக்கத்துக் கோபுரத்தைத் தவிர, மற்றவை இப்பொழுது இல்லை. அந்தக் கிழக்குக் கோபுரமும் இடிந்தேயுள்ளது. கர்ப்பக் கிருஹமும், அதைச் சுற்றியுள்ள பிராகாரமும் இப்பொழுது ஓரளவு காணத்தக்க நிலையில் இருக்கின்றன. விமானம் வெகு அழகாகத் தஞ்சைப் பெரிய கோயில் விமானத்தைப் போலவே உள்ளது. நாறு அடிச் சதுரமாக அமைந்துள்ள இவ்விமானம் ஒன்பது அடுக்குகளைக் கொண்டுள்ளது. முதல் இரண்டு அடுக்குகள் ஒன்றன்மேல்

[1] 1836-ஆம் வருஷத்தில், அணைக்கரையில் கொள்ளிடத்திற்குக் கல்லணையும் பாலமும் கட்டுவதற்காகத் துரைத்தனத்தார் அக்கோயில் மதில்களைப் பிரித்து அவற்றிலிருந்து பாறைகளை எடுத்துக்கொண்டுபோனதாகச் சொல்கிறார்கள்.

ஒன்றாக நிமிர்ந்து நிற்கின்றன. மற்றவை மேலே செல்லச்செல்லச் சிறுத்துச் சரிவாகச் செல்கின்றன. அதன் நான்கு புறங்களிலும், வாசல்களும் மாடங்களும் உள்ளன; அழகான வேலைப்பாடமைந்த பதுமைகள் அலங்கரித்து நிற்கின்றன. உச்சியில் தஞ்சையில் உள்ளதைப் போலவே ஒரே கல்லாலான சிகரம் ஒன்று இருக்கிறது. அதன் கலசம் மட்டில் இப்பொழுது காணப்படவில்லை; சிறிது காலத்துக்கு முன்பு, இடிவிழுந்ததால் ஒடிந்து போயிற்று என்று கூறுகிறார்கள். இந்த விமானம் மட்டில் நூற்று எழுபது அடி உயரம் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

அக்கோயிலின் கர்ப்பக்கிருஹத்தில் உள்ள சிவலிங்கம் பெரியது. அஃது ஒரே கல்லால் சமைக்கப்பட்டுள்ளது. அஃது இப்பொழுது உச்சியில் இரண்டாகப் பிளக்கப்பட்டுக் காணப்படுகின்றது. அதனை இடியினாலே பிளவுபட்டதாகக் கூறுகிறார்கள்.

அக்கோயிலைப் புனிதமாக நினைத்துப் புண்ணிய ஸ்தல யாத்திரையாக அவ்வூருக்குச் செல்வோர் இப்பொழுது யாரும் இலர். புராதன நாகரிகத்தில் ஆர்வம் கொண்ட சிலரே ஒரொரு காலங்களில் சென்று அக்கோயிலைக் கண்டு உள்ளம் பூரித்துத் திரும்புவர். இப்பொழுது இவ்வளவு இழிந்த நிலையில் இருப்பினும் கங்கைகொண்ட சோழபுரம், சோழநாட்டின் பிரதான நகரமாக விளங்கியகாலத்

தில் பேரும் புகழும் பெற்றுச் சிறந்து விளங்கியிருந்தது என்பதை நாம் கூறவேண்டியதில்லை. இராஜராஜேசுவரத்தைத் திருவிசைப்பாப் பாடிச் சிறப்பித்த கருவூர்த்தேவர் இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் மேலும் ஒரு பதிகம் பாடியிருக்கிறார். அப்பதிகம் சைவத்திருமுறையுள் ஒன்பதாவதாகிய திருவிசைப்பாவில் அடங்கியுள்ளது.

சோழ கங்கம்

இம் மன்னன் வெட்டுவித்த 'சோழ கங்கம்' என்னும் ஏரி இப்பொழுது பொன்னேரி என்று வழங்கப்பட்டு வருகிறது. இஃது ஊருக்கு வடக்கே எக்கர் அடித்து மேடாக உள்ளது. இது தெற்கு வடக்காகப் பதினறு மைல் நீளமுள்ளதாகவும், மிகவும் உயரமும் பலமும் பொருந்திய கரையை உடையதாகவும் இருந்தது. இதற்குத் தண்ணீர் வருவதற்குத் தென்புறத்தில் கொள்ளிடத்திலிருந்து அறுபது மைல் நீளமுள்ள ஒரு கால்வாயும்,வடபுறத்தில் வெள்ளாற்றிலிருந்து மற்றொரு கால்வாயும் இருந்தன. அக்கால்வாய்களின் கரைகள் இன்றைக்கும் காணப்படுகின்றன. தென்னர்க்காடு ஜில்லாவில் இப்பொழுது மிகப் பெரிய ஏரியாகக் கருதப்படும் வீராணம் இப்பொன்னேரியின் வடிகாலாகவே இருந்ததாம்.

இவ்வேரி கல்ல நிலைமையில் இருந்த காலத்தில், திருச்சிராப்பள்ளி, தென்னர்க்காடு ஜில்லாக்களின் சில பகுதிகளில் இதன் நீர் பாய்ந்து பயிர்களைச் செழிக்கச் செய்து வந்தது. ஆயினும் இப்பொழுது

இதைச் சுற்றி நான்கு பக்கங்களிலுமுள்ள நெடிய பிரதேசம் இன்றைக்கு வளம் இன்றிப் பொட்டலாகவே இருக்கின்றது. இவ்வித நிலைமை ஏற்பட்டதற்கு இவ்வேரி சீரழிந்து போனதே காரணம் என்பர். அவ்விதமாயின், இந்த ஏரி உண்டாக்கப்படுவதற்கு முன்னும், அந்தப் பிரதேசம் இவ்வித நிலைமையில்தான் இருந்திருக்கவேண்டும் போலும். இவ்வளவு பெரிய ஏரியை அமைத்து அந்தப் பிரதேசத்தை ஒரு சோலைபோல மிளிரச் செய்த இராஜேந்திரனுக்கு எவ்வளவு திறமையும் தீர்க்கதரிசனமும் இருந்தன என்பதை நாம் எளிதில் அறிந்து கொள்ளலாம்.

நீர்ப்பாசனத்திற்காக இந்தியர்களால் அமைக்கப்பட்ட ஏரிகளுள், வடநாட்டில் மாளவதேசத்தை ஆண்டுவந்த பரமார அரசனன போஜராஜனால் உண்டாக்கப்பட்ட போஜபுரத்து ஏரியே மிகவும் உயர்ந்தது என்று கருதிவந்தார்கள். ஆயினும் இப் பொன்னேரியின் அமைப்பைக் கவனிப்பவர்களுக்குப் போஜபுரத்து ஏரியைவிட இதுவே மிகவும் சிறந்தது என்பது நன்கு விளங்கும். போஜபுரத்து ஏரியை அமைப்பதற்கு வேண்டிய இயற்கைச் சாதனங்கள் இருந்தன. தண்ணீரைத் தேக்குவதற்கு இரு குன்றுகளுக்கு இடையில் உள்ள பள்ளத்தாக்கை அடைப்பதே போதுமானதாக இருந்தது. இங்கே, சுற்றுப்புறங்களில் வெகுதூரம் வரைக்கும் மலைகளே இல்லாத சமதளமான ஓர் இடத்தில் பதினறு மைல்தூரம் பலமான கரைகளைக்

கட்டி அணைத்தும் அறுபது மைலளவு தூரத்துக்குக் கால்வாய்கள் வெட்டிப் பள்ளத்திலிருந்து தண்ணீரை மேட்டிற்குக் கொணர்ந்தும் ஏரியைச் சமைப்பதற்கு அரசன் எவ்வளவு சிரமப்பட்டிருக்க வேண்டும்? இவ்வேரி அமைக்கப்பட்ட பிறகே போஜபுரத்து ஏரி உண்டாயிற்று என்பதை நாம் கவனித்தால் இதன் பெருமை தெரியவரும்.

அரசன் அந்நகரத்தை நிருமாணித்துக் கோயிலைக் கட்டினானே யன்றி, அதனைத் தலைநகராகச் செய்தான் என்று துணிவதற்கு இடமில்லை. சோழகேரளன் என்னும் அரண்மனை யொன்று அவ்விடம் இருந்தது.[1] திருமஞ்சனத்தார் வேளம் என்ற அரண்மனை ஏவலாளர் தொகுதி அவ்விடம் இருந்தது என்பதும் சாஸனங்களால் அறியக் கிடக்கின்றது.[2] பெரிய அங்காடியும் அங்கே இருந்தது. இவற்றை நாம் ஆராய்ந்தால் அரசன் சில சில காலங்களில் அவ்விடம் தங்கிவந்தான் என்றே கூறலாம்.[3]

---

[1] S. I. I., II. 20; No. 102 of 1926; 182 of 1915

[2] No. 510 of 1926; 121 of 14

[3] கோயிலுக்குச் சற்றேறக்குறைய அரை மைல் தூரத்தில் மாளிகை மேடு என்று வழங்கப்படும் திடர் ஒன்று இருக்கிறது. சோழ மன்னர்களுடைய அரண்மனை அவ்விடத்தில்தான் இருந்தது என்று இன்றைக்கும் ஜனங்கள் கூறுகிறார்கள். அரண்மனையின் எந்த எந்தப் பாகங்கள் எவ்வெவ் விடங்களில் இருந்தனவென்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். அந்த மேட்டின் அடியில் கட்டிடத்தின் பாகங்களும், அவற்றின் சின்னங்களும இன்றைக்கும் காணப்படுகின்றன.

மன்னன் விருதுகள்

இம்மன்னன் பல பெயர்களையும் விருதுகளையும் தாங்கியிருந்தமை சாஸனங்களினின்றும் தெரிய வருகின்றது. அவற்றுள் மதுராந்தகன், உத்தம சோழன், விக்கிரம சோழன், வீரராஜேந்திரன்[1] என்பன போன்றவை, இவனுக்கு முன்னிருந்தவர்களாலும், பின்னுல் சோழ ராஜ்யத்தை ஆண்டவர்களாலும் தரிக்கப்பட்டிருந்தனவாகும். பிறருக்குரியனவாகாமல் இவனுக்கே உரிமையான வைகளும் சிலவுள. அவை, முடிகொண்டசோழன்,[2] கங்கைகொண்ட சோழன், கடாரம் கொண்டான், பண்டித சோழன்[3] என்பனவாம். இவ்விருதுகளில், முக்கியமானவைகளாகக் கருதப்பட்டவை இரண்டேயாகும். இவன் ஆட்சியின் முற்பகுதியில் இவன் முடிகொண்ட சோழன் என்றும், கங்கா விஜயம் செய்த பிறகு கங்கைகொண்ட சோழன் என்றும் பெரும்பாலும் குறிக்கப்படுகிறான்.

அரச குடும்பம்

அரச குடும்பத்தினர் பெரும்பாலும் பழையாற்றிலிருந்த அரண்மனையிலேயே தங்கி வந்தார்

[1] 61 of 1914

[2] காவிரியின் ஒரு கிளை முடிகொண்டான் என இன்றைக்கும் வழங்கப்பட்டு வருகின்றது. தாம்பிரவருணி நதியும் ஒரு காலத்தில் முடிகொண்ட சோழப் பேராறு என்று வழங்கப்பட்டுவந்தது.

[3] S. I. I., III. 127 ; M. E R. 1901-i-12

கள். இம்மன்னனுக்கு அந்த இடத்தின்பால் ஒரு தனிப் பற்றுதலும் உண்டு என்று தெரிகின்றது; இதற்கு, தனக்குச் செவிலித்தாயரே போன்று விளங்கிய செம்பியன் மாதேவியும், குந்தவைப் பிராட்டியாரும் அவ்வரண்மனையில் வாழ்ந்துவந்தார் கள் என்பதும் ஒரு காரணம்போலும். அந்நகரத் துக்கு மன்னன் தன் ஆட்சியின் முதலிலேயே 'முடிகொண்ட சோழபுரம்' எளப் பெயரிட்டான். அக்காலத்தில் அந்த நகரம், கும்பகோணத்தின் ஒரு பாகத்தையும், பக்கத்தில் உள்ள பல ஊர்களையும் தன்னுள் அடக்கி ஒரு பெரிய நகரமாக விளங் கியது. இராஜமாதேவியான பஞ்சவன் மாதே விக்கு அவ்விடத்தில் ஒரு பள்ளிப்படையும் உண்டு.[1]

சாஸனங்களினின்றும் இம் மன்னனுக்குப் பல மனைவியர் இருந்தனர் என்பது தெரியவருகின் றது. திரிபுவன மகாதேவியார் என்னும் வானவன் மாதேவியார்,[2] முக்கோக்கிழானடிகள்,[3] பஞ்ச வன் மாதேவியார்,[4] வீரமாதேவி[5] ஆகியவர்க ளுடைய பெயர்கள் கல்வெட்டுக்களிற் காணப்படு கின்றன.

இராஜேந்திரனுக்கு மக்கள் பலர் இருந்தனர். அவர்களுள் இவனுக்குப் பின்முறையாகச் சிங்

[1] No. 271 of 1927
[2] 624 of 1920
[3] 73 of 1921
[4] 464 of 1918
[5] 260 of 1915

காதனம் ஏறிய இராஜாதிராஜன், இராஜேந்திர தேவன், வீரராஜேந்திரன் ஆகிய மூவரை நாம் அறிவோம். கன்னியாகுமரிக் கல்வெட்டில் இம் மூவரும் யாகத்தின் மூன்று அக்கினிகளுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறார்கள். இவனுடைய மகனை ஜடாவர்மன் சுந்தரசோழ பாண்டியன் இம்மூவருள் ஒருவனு அன்றி வேறுனவனு என்பதை அறியக் கூடவில்லை. இராஜேந்திரதேவன் தன் ஆட்சியில், தன் தம்பிகள் நால்வர், சிறிய தாதை ஒருவர், இன்னும் தன் மக்கள் மூதலியோரை அரசியலிற் பல துறைகளில் அமர்த்தினன் என்று தெரியவருகிறது. அவர்களைப்பற்றியும் வேறு விவரங்கள் அறியக்கூடவில்லை.

இவனுக்கு இரண்டு பெண்களிருந்தார்கள் என்று தெரிகின்றது. அவர்களுள் ஒருத்தியான பிராணர் எனப்படும் அருண்மொழி நங்கை, இராஜாதிராஜன் ஆட்சியின் மூற்பகுதியில் திருமழபாடிக் கோயிலுக்குச் சில நிவந்தங்கள் அளித்திருக்கிறாள்.[1] மற்றொருத்தி அம்மங்கதேவியார்.

இராஜராஜன் தன் மூத்தபெண்ணுக்குத் தன் தமக்கையின் பெயரான குந்தவை என் பதையே வைத்து அவளைக் கீழைச் சளுக்கிய அரசனன விமலாதித்தனுக்கு மணம் செய்வித் தான் என்பதை நாம் முன்னரே கூறியுள்ளோம். அவளுக்குப் பிறந்த பிள்ளையான இராஜராஜநரேந்

[1] 71 of 1920

திரனுக்கு இராஜேந்திரன் தன் மகள் அம்மங்க தேவியை மணம் செய்வித்தான். அவளுக்குப் பிறந்த மகனே பிற்காலத்தில் தெளஹித்திரமுறை கொண்டாடிச் சோழ சிங்காதனம் ஏறின குலோத்துங்க சோழனவன்.

இராஜேந்திரன் தன்னுடைய ஆட்சியின் எட்டாம் ஆண்டில், செம்பியன் மாதேவிக்கு ஒருபடிவம் செய்து அதை நாகபட்டினம் தாலுகா செம்பியன் மாதேவி என்னும் ஊர்க்கோயிலில் நிறுவி அதை வழிபடுவதற்கு வேண்டிய நிவந்தம் அளித்தான்.[1] இறந்தவர்களுக்குப் படிவம் செய்து நிறுத்துவது முற்காலத்து வழக்கமாயினும், அதைக்கோயில்களில் நிறுத்தித் தினமும் வழிபடுவதற்கு ஏற்பாடுசெய்வது வழக்கம் இல்லை. இவ்விடத்தில் அவ்விதம் செய்திருப்பதைக் கவனித்தால், அந்தத் தேவி, உயிருடன் இருக்கையிலேயோ அல்லது இறந்த சிறிது காலத்திற்குள்ளாகவோ ஓர் அடியாராகக் கருதப்பட்டு வந்தாள் என்பது தெரியவரும். இம்மன்னன் அவளிடம்கொண்டிருந்த மதிப்பும் இதனால் வெளியாகும்.

இம்மன்னனுடைய கல்வெட்டு ஒன்று, 'இராஜராஜ விஜயம்' என்னும் நூலை விசேட காலங்களில் படிப்பதற்காக 'ஸவர்ணன்' ஆன நாராயணன் பட்டாதித்தன் என்பவனுக்கு நிலம் அளிக்கப்பட்ட செய்தியைக் கூறுகின்றது.[2] இஃது இராஜராஜன்

[1] 481 of 1925; M. E. R. 1926. p. 105.

[2] M. E. R. 1931, No. 120 of 1931

ஜீவிய சரித்திரத்தின் சில முக்கிய பாகங்களையும், அவனுடைய வீரம், நியாயம், தியாகம் முதலிய அருங்குணங்களையும் சிறப்பித்துப் பாடப்பெற்ற நூலென்று தோற்றுகிறது. இந்நூலை இயற்றியவர் யார் என்பது தெரியவில்லை. இது வடமொழியில் இயற்றப்பட்டதா அல்லது தமிழிலா என்பதையும் நாம் அறிய இயலவில்லை.[1] இத்தகைய அரிய நூல் வழக்கு வீழ்ந்தமை மிகவும் வருத்தத்தைக் கொடுக்கக்கூடியதே.

இராஜ குரு

இராஜேந்திரன் தன் தந்தையைப் போலவே சைவ நெறியைப் பின்பற்றி வந்தான். இம்மன்னன் தஞ்சைக் கோயிலில் பூசை செய்து வந்த உடையார் சர்வசிவ பண்டிதருக்கும், அவருடைய சீடர்களுக்கும், அவர்களுடைய சீடர்களுக்கும், அவர்கள் ஆர்யதேசமோ, மத்தியதேசமோ, கௌட தேசமோ எவ்விடத்திலிருந்தாலும் கொடுக்கப் படக் கடவதென்று ஆசார்ய போகமாக வருஷந்

[1] "இயற்றியவர் வேறுயின் அரசன் அவர்க்குச் செய்த சிறப்பைப்பற்றி ஒன்றுங் கூறுமல், அவனை அவைமுன் படிப்பதற்கு மட்டுஞ் செய்யப்பட்டதைச் சாஸனம் எடுத்துக்கூற நியாயமில்லை. அதனால் நூலாக்கியோரே அதனைச் சபைமுன் ஓதிப் பலரு மறியப் பிரகாசப்படுத்தலை விரும்பி இவ்வாறு நிலம் அளிக்கப்பட்டதாகக் கருதலே ஏற்புடையதாம். இந்நூல் தமிழில் அமைந்த தொன்றாகக் கருதலும் பொருந்தும்" என்று பண்டித மு. இராகவையங்கார் கூறுவர் (சாஸனத் தமிழ்க்கவி சரிதம், ப. 48.)

தோறும் நெல் அளிப்பதற்கு உத்தரவிட்டிருந்தான்;[1] இதனால், சர்வசிவ பண்டிதர் அரசனுக்குக் குருவாக விளங்கினர் என்று தெரியவருகின்றது. அவரை யன்றி, அக்காலத்தில் சைவத்தின் ஒரு பகுதியான காளாமுக மதத்தைப் பின்பற்றிய பண்டிதர்கள் பலர் தமிழ் நாட்டில் வசித்துவந்தார்கள். சிவதர்மங்களைப் பாதுகாப்பதற்குப் பெரும் பாலும் அவர்களே நியமிக்கப்பட்டு வந்தார்கள். அவர்களுள் லகுலீச பண்டிதர் என்னும் ஆசாரியரும் காணப்படுகிறார்.[2]

மன்னன் பிறமதங்களை வெறுக்காமல் எல்லா மதங்களையும், ஒரு கடலில் கலக்கும் பல ஆறுகளைப் போலவே கருதி அவற்றை மதித்துவந்தான்.

சூடாமணி வர்ம விஹாரம்

இராஜராஜன் காலத்தில் நாகபட்டினத்தில் பௌத்த விஹாரமொன்று கட்டப்பட்டது. அது ஸ்ரீவிஜயராஜ்யத்து அரசனை சைலேந்திர வமிசத்து மாரவிஜயோத்துங்க வர்மன் என்பவனால் தன் நாட்டு ஜனங்களுடைய உபயோகத்துக்காகக் கட்டப்பட்டது. அவன், அந்த விஹாரத்தை ஏற்படுத்துவதற்கு இடம் கொடுத்து அந்தக் கோயிலையும் ஆதரிக்க வேண்டுமென்று இராஜராஜனை வேண்டிக்கொண்டான். இராஜராஜனும் அதற்கு

---

[1] S. I. I., II, 20

[2] 271 of 1927

சண்டேசானுக்கிரஹ மூர்த்தி

(கங்கைகொண்ட சோழீச்சுரத்திலுள்ள ஓர் அழகிய சிற்பம்)

Copyright, A. S. I.



Copyright, A. S. I.

கங்கை கொண்ட சோழீச்சரம்

இணங்கவே, விஹாரம் கி. பி. 1006-ஆம் ஆண்டில் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. ஆனல் அஃது, இராஜராஜனுடைய வாழ்நாட்களுக்குள் பூர்த்தி செய்யப் படவில்லை; இராஜேந்திரன் காலத்தில்தான் முடிக்கப்பட்டது. மாரவிஜயோத்துங்கன் அக்கோயிலுக்குத் தன் தந்தையின் பெயரைச் சார்த்தி, 'சூடாமணிவர்ம விஹாரம்' எனப் பெயரிட்டான். இராஜராஜன் அதற்கு ஆனைமங்கலம் என்னும் கிராமத்தைப் பள்ளிச்சந்தமாக அளித்தான். அத்தான சாஸனம் இராஜேந்திரன் காலத்தில்தான் பொறிக்கப்பட்டது. அதுவே லீடன் பட்டயம் என்று வழங்கப் பெறுவதாகும்.

அதிகாரிகள் இருவர்

இராஜேந்திரன் காலத்தில் அதிகாரிகளாக இருந்த பலருடைய பேர்கள் சாஸனங்களில் காணப் படுகின்றன. ஆயினும் அவர்களைப்பற்றிய செய்திகளில் ஒன்றும் நாம் அறியக்கூடவில்லை. அவர்களுள் இருவர் முக்கியமானவர்கள்.

விக்கிரமசோழ சோழியவரையனுயின அரையன் இராஜராஜனென்பவன் ஒருவன். இவன் சோழ மன்னர்கள் சளுக்கியர்மீதும் வேங்கிமண்டலத்தும் நடத்திய போர்களில் பெரும்புகழ் பெற்றவன் என்று கூறப்படுகின்றன். ஒரு கல்வெட்டில், இவன் படையுடன் வருவதைக் கேட்ட வேங்கி அரசன் புறங்காட்டியோடினன்[1] என்று கூறப்பட்

[1] 751 of 1917

டுள்ளது. இவ்வதிகாரி, நால்மடி பீமன், சோள நசக்ரன், சாமந்தாபரணம், வீரபூஷணம், எதிர்த்தவர் காலன் முதலிய விருதுகளைப் பெற்றிருந்தான் என்றால், அரசன் இவனை எங்ஙனம் மதித்துப் போற்றிவந்தான் என்பது தெரியவரும். இவன் பெயரினின்றும், இவன் இராஜராஜன் காலத்திலிருந்தே படைத்தலைமை வகித்து வந்தான் என்று கூறலாம். இராஜேந்திரனுடைய பத்தாம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் இவனைப்பற்றிக் கூறுகின்றன.[1]

இராஜராஜன் காலத்தில் சேனபதியாக இருந்து, அம்மன்னன் ஆணையின்படி தஞ்சைக் கோயிலின் திருச்சுற்று மாளிகையின் பெரும் பாகத்தை எடுப்பித்தவனை கிருஷ்ணன் ராமனை மும்முடிச் சோழப் பிரஹ்ம மாராயனென்பவன் இராஜேந்திரன் ஆட்சி முழுமையும் வாழ்ந்தான்.[2] அவன் மகன் மாராயன் அருண்மொழியான உத்தமசோழப் பிரஹ்ம மாராயனும் ஒரு சேனபதியாக இருந்தான். அவனே, இராஜேந்திரன் கி. பி. 1033-ஆம் ஆண்டில் குவளாலபுரத்தில் (கோலார்) ஒரு பிடாரிகோயில் எடுப்பித்தபொழுது உடனிருந்து உதவியவன்.[3] அவன் பெயர்ப் பகுதியாகிய மாராயனென்பது பெருமக்களென்று கூறக்கூடிய மாராயத்தைச் சேர்ந்தவன் என்பதையும், அருண்

[1] 23 of 1917

[2] 217 of 1911

[3] 480 of 1911; E. C., X. KI. 109-a

மொழி யென்பது அவன் தந்தை அக்காலத்து அரசுபுரிந்த இராஜராஜன் பெயரையே அவனுக்கு இட்டதையும் காட்டுகின்றன. உத்தம சோழப் பிரஹ்மமாராய னென்பது அரசாங்கத்தில் அவன் வகித்துவந்த ஏற்றத்தைக் குறிக்கின்றது.

சீனர்களுடன் உறவு

சீன தேசத்துச் சரித்திரங்களினின்றும், சோழர்கள் அத்தேசத்தவர்களோடு கொண்டிருந்த உறவு தெரிய வருகின்றது. கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் கடைசியில் சீன தேசத்தில் உள்நாட்டுக் கலகங்கள் அதிகமாகிவிட்டன வாதலின், பிற நாட்டவர்கள் வாணிகம் செய்வதற்காக அவ்விடம் போவதை நிறுத்திவிட்டார்கள். 10-ஆம் நூற்றாண்டின் கடைசியில், அக்கலகங்கள் அடங்கிவிட்டன. அப்பொழுது இருந்த அரசன், பிறநாட்டவர்கள் சீனாவுக்கு வந்து வாணிகம் செய்வதை விரும்பினன். அதனால், "கடல் கடந்து பிறநாடு சென்று வாணிகம் செய்பவர்களும், தென்கடலில் வியாபாரம் செய்யும் அயல் நாட்டாரும் சீனாவுக்கு வரும்படி தூண்டுவதற்காகச் சக்கரவர்த்தி, ஒரு தூது கோஷ்டியை அமர்த்தி, அரசாங்க முத்திரையிட்ட ஆணைப் பத்திரங்களுடன் பொன்னும் துணியும் அதிகமாகக் கொடுத்து அவர்களை வெளியிடங்களுக்கு அனுப்பினன். அங்ஙனம் வருபவர்களுக்கு, இறக்குமதி செய்வதற்கான தனி உரிமைகள் கொடுப்பதாகவும் வாக்களித்தான்."

இதையறிந்த இராஜராஜனும், இராஜேந்திரனும் சீன தேசத்துக்குத் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பினர்கள். இராஜராஜ (Lo - tsa - lo -tsa) னுடைய பிரதிநிதிகள் கி. பி. 1015-ஆம் ஆண்டில் சீனாவை அடைந்தார்கள். சீன நூல்களில் இது பின்வருமாறு கூறப்பட்டுள்ளது :

" முன்னாளில், அவர்கள் நம் இராஜசபைக்குக் காணிக்கை அனுப்பியதில்லை. ஆயினும்,(ta-chung, siang - fu) டா சுங், ஸியாங் ஃபு ஆகியவர்கள் காலத்தில் எட்டாம் (கி. பி. 1015) ஆண்டில், அந்தச் சோழ (chu - lien) அரசன் முத்துக்களையும், அவற்றைப் போன்ற வேறு பல பொருள்களையும் காணிக்கையாகக் கொடுத்துத் தூதுவர்களை அனுப்பினன். அவர்களுடைய பேச்சை மொழி பெயர்த்தவர்கள், அவர்கள் (சீன தேசத்து) நாகரிகத்தைக் கண்டு வெகு தூரத்திலிருந்து வந்த ஒரு தேசத்தாருடைய மதிப்பைத் தெரிவிக்க விரும்புவதாகக்கூறினர்கள். " அரசன் அவர்களை அரண்மனைக்குப் பக்கத்தில் உள்ள விடுதியில் தங்குமாறு உத்தரவு அளித்தான். அவர்கள் போனது சீன தேசத்தரசனுடைய பிறந்த நாட் கொண்டாட்ட சமயமாக இருந்தது. அதனால் அவர்கள் இவ்விழாவிற் கலந்துகொண்டார்கள். சீனத்தரசன், அவர்களுக்குப் பல சம்மானங்கள் வழங்கினன். ஆயினும், சீன அரசன் சோழர்களுடைய பேரரசையும் வலிமையையும் நன்கு அறியாமையால், அந்தத் தூதுவர்களைச் சக்கரவர்த்தியின் தூதுவர்களாக மதியாமல்,

ஒரு சாதாரண அரசனுடைய தூதர்களாக மதித் தான் என்று அந்தத் தேசத்துச் சரித்திரங்களி னின்றும் தெரிகின்றது.

இராஜேந்திரனும்(Shi - lo-lo - cha-yin - to-lo-chulo) கி. பி. 1033-ஆம் ஆண்டில் ஒரு தூதுகோஷ் டியை அனுப்பினன். இவர்கள் சீனதேசத்து அரச னல் எப்படி வரவேற்கப்பட்டார்கள் என்பதைப் பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை. எனினும், சோழ அரசன் அதற்குப் பிறகு பல வருஷங்கள் 'காணிக்கை' அனுப்பி வந்தான் என்று அச் சரிதங்கள் கூறுகின்றன.[1]

இராஜேந்திரன் தன் பெயரால் நாணயங்களை யும் அச்சிட்டு வழங்கினன். அவை சாஸனங்களில் 'இராஜேந்திரன் மாடை' எனவும், 'இராஜேந்திர சோழக் காசு' எனவும் குறிக்கப்பட்டுள்ளன.

5. இராஜேந்திரன் போர்ச் செயல்கள்

இராஜேந்திரன் காலத்தில் நடந்த போர்ச் செயல்களை, இவன் இளவரசனாக இருந்து தந்தை காலத்தில் நடத்தியவை, இவன் அரசனாக இருந்து நடத்தியவை, இவன் காலத்தில் இவன் மகன் இரா ஜாதிராஜன் கொண்ட வெற்றிகள் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவன் இளவரசனாக

[1] பின்னால், கி. பி. 1077-ஆம் ஆண்டில் முதற் குலோத் துங்க சோழனும் இவ்விதம் ஒரு தூது கோஷ்டியை அனுப் பினன் என்று தெரிகின்றது.

இருந்த காலத்தில் கொண்ட வெற்றிகளைப்பற்றி முன்னம் கூறினேம். இவன் அரசாண்ட காலத்தில் நடந்த போர்களைப்பற்றிக் கவனிப்போம் :

மெய்க்கீர்த்தி

இம் மன்னனுடைய போர்ச் செயல்களையும் வெற்றிகளையும் அறிவதற்கு அக்காலத்துச் சாஸனங்களில் காணப்படும் மெய்க்கீர்த்திகளே உபயோகமாகவுள்ளன.

இம்மன்னனுக்குத் 'திருமன்னிவளர' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி ஒன்று உண்டு. மெய்க்கீர்த்தி என்பது,

"சீர்நான் காகி யிரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புக ழெல்லாஞ் சொல்லியும்
அந்தத் தவன்பெ ரூறு செல்லியும்
அவனுடன் வாழ்கெனச் சொல்லியு மற்றவன்
இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறப்பட வுரைப்பது சீர்மெய்க் கீர்த்தி"[1]

என்ற இலக்கணப்படி, பேரரசன் புகழ்ச் செய்திகளைக் கூறி, அவன் தன் பெருந்தேவியுடன் நீடு வாழ்க என்று வாழ்த்தி, அவ்வேந்தன் இயற்பெயரோடு அவனது ஆட்சி யாண்டினைக் கூறும் செய்யுளாம். இவ்வகைப் பாடல் பெரும்பான்மை அகவல் ஓசையும், சிறுபான்மை கலியோசையும் கொண்டு சொற்சீரடியால் அமைவதாகும். இவ்வகை மெய்க்கீர்த்திகளில் அவ்வப்பொழுது அரசனுடைய புதிய புகழ்ச் செய்திகளைச் சேர்த்துக்

[1] பன்னிரு பாட்டியல், 311-12

கொண்டே போவார்கள். ஆட்சியின் காலம் செல்லச்செல்ல மெய்க்கீர்த்தியின் அளவும் பெருகிக் கொண்டே வரும். இதனால், அவ்வந் நிகழ்ச்சிகள் எவ்வெப்பொழுது நடந்தனவென்பதை நிச்சய மாகக் கூற இயலும். இவ்வகை மெய்க்கீர்த்திகள் தமிழ்நாட்டிலேதான் காணப்படுகின்றன.

இம்மன்னனுடைய மெய்க்கீர்த்தி இப்புத்தகத் தின் கடைசியில் தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

சில சாஸனங்களில், இந்த மெய்க்கீர்த்தி முழுவ தும் கொடுக்கப் பெறுமல் அரசன், 'பூர்வதேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட கோப்பரகேசரி வர்மன்' என்றுமட்டும் குறிக்கப்பட்டுள்ளான்.

ஆட்சி வெற்றிகள்

இம் மன்னனுடைய ஆட்சியின் மூன்றும் ஆண்டுக்கு முற்பட்ட காலத்துச் சாஸனங்கள் கிடைக்கவில்லை. அந்த மூன்றும் ஆண்டுச் சாஸ னங்களிலேயே அவன்,

> "தெடிதிய லாழியுள் ளிடைதுறை நாடும்
> தொடர்வன வேலிப் படர்வன வாசியும்
> சுள்ளிச் சூழ்மதிற் கொள்ளிப் பாக்கையும்
> நண்ணரு முரண மண்ணைக் கடக்கமும்"

ஆகிய நாடுகளிற் கொண்ட வெற்றிச் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

இடைதுறை நாடு என்பது வடக்கே கிருஷ்ண நதிக்கும், தெற்கே துங்கபத்திரைக்கும் இடைப்பட்ட சமவெளி யாகும்; அதாவது தற்காலத்தில், ரெய்ச்

சூர் என வழங்கப்படும் ஜில்லா என்று கூறலாம்.[1] இது கன்னடமொழிச் சாஸனங்களில் 'எடதோறே இரண்டாயிரம்' என்று குறிக்கப்பட்டுள்ளது.

கொள்ளிப்பாக்கையாவது வெற்றராபாத்துக்கு நாற்பத்தைந்து மைல் வடகிழக்கே உள்ள 'கூல்பாக்' என்னும் இடமாகும்.[2] 'கொள்ளிப் பாக்கை ஏழாயிரம்' பதின்மூன்றும் நூற்றாண்டு வரையில் மிகவும் பிரபலமாக இருந்துவந்தது.

மண்ணைக்கடக்கம் என்பது ஒரு காலத்தில் இராஷ்டிரகூடர்களுக்குத் தலைநகராக இருந்த மான்யகேடம் என்னும் பட்டணமாகும். அந்நகரம் அக்காலத்தில், இராஷ்டிரகூடர்களுக்குப் பின் வந்த மேலைச் சளுக்கியர்களுக்கும் தலைநகரமாக இருந்தது போலும். அடிக்கடி வடக்கிலிருந்து பரமார அரசர்களாலும், தெற்கிலிருந்து சோழர்களாலும் அந்நகரம் தாக்கப்பட்டு வந்ததாலேயே பிற்காலத்தில், சளுக்கியர்கள் தங்கள் தலைநகரைக் கலியாணபுரிக்கு மாற்றிக்கொண்டார்கள் போலும்.

திருச்சிராப்பள்ளி ஜில்லா ஊற்றத்தூரில் கிடைக்கும் இராஜேந்திரனுடைய மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று இவன் மேலைச் சளுக்கிய அரசனை சத்யாச்ரயனுடன் நடத்திய போரில் இவனது யானைப் படையைச் சேர்ந்த இராஜ

[1] E. I., XII. pp. 295-6.

[2] Journal of the Hyderabad Archaeological Society, 1916, pp. 14, ff: I. A., XLIV. pp. 213-5

மல்ல முத்தரையனை சுருதிமான் நக்கன் சந்திரன் என்பவன், 'பெருமாள் திருவாய்மொழிய'ப் பகைவர் யானையைத் தாக்கி அதனால் உயிரிழந்தான் என்றும், அதற்காக மன்னன் சில நிவந்தங்கள் விடுத்தான் என்றும் தெரிவிக்கின்றது.[1] சத்யாச்ரயன் கி. பி. 1008-ஆம் ஆண்டில் இறந்துவிட்டான். ஆதலால் மேலே கூறிய சம்பவங்கள் இராஜேந்திரன் முடிசூட்டப் பெறுவதற்கு முந்தி இராஜராஜன் ஆட்சியில் நிகழ்த்திய போர்ச்செயல்களைக் குறிப்பனவென்றே கொள்ளவேண்டும்.

ஈழப்போர்

இம்மன்னன்,

> "பொருகட லீழத் தரசர்த முடியும்
> ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும்
> முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த
> சுந்தர முடியும் இந்திர னாரமும்
> தெண்டிரை ஈழ மண்டல முழுவதும்"

கொண்ட செய்தி ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டுக்களிற் காணப்படுகின்றன.[2] ஆயினும், அதே ஆண்டுக் கல்வெட்டுக்கள் சிலவற்றுள் இச்செய்தி காணப்படாதபடியால்,[3] இந் நிகழ்ச்சி ஐந்தாம் (கி. பி. 1017-8) ஆண்டிலேயே நடைபெற்றிருத்தல் வேண்டும். இஃது இலங்கைச் சரிதமான மகா

---

[1] 515 of 1912

[2] 4 of 1890; 257 of 1903

[3] 59 of 1897; 439 of 1907

வம்சத்திலும் கூறப்பட்டிருக்கின்றது.[1] அது மெய்க் கீர்த்தியிற் கண்டவற்றை நன்கு வலியுறுத்து கின்றது.

இராஜராஜன் ஆட்சியில் நடந்த ஈழப்போ ரில் தோல்வியுற்று ஓடியொளிந்த ஐந்தாம் மஹிந் தன் என்னும் சிங்கள அரசன், சிறிது காலம் சென் றதும் மறுபடியும் வெளிப்பட்டு இழந்த நாட்டை மீட்க முயன்றான். சோழர்கள் ஆட்சிக்கு உட் படாத தென்பாகத்தில் ஒரு பெரும்படையைத் திரட் டிச் சோழர்களைத் தாக்க ஆரம்பித்தான்போலும். இதனாலேதான் இராஜேந்திரன் இலங்கையின்மேல் மறுபடியும் படையெடுத்துச் செல்ல நேர்ந்தது. இம் முறையும் வெற்றிகொண்ட சோழன், ஈழத்தரச னுடையதும் அவன் தேவியருடையனவுமான முடி களையும், ஆபரணங்களையும், பொன்மணிகளையும், பிற இராஜசின்னங்களையும் கைப்பற்றித் தன் நாட் டுக்குக் கொணர்ந்தான். தவிர, சுமார் ஒரு நூறாண் டுக்கு முன்னர்ப் பாண்டிய அரசன் ஈழமன்னனிடம் ஒப்பித்திருந்த கிரீடத்தையும், மற்ற ஆபரணங் களையும், பாண்டிய குலத்திலே வெகு காலமாகவே இருந்துவந்த இந்திரனுரத்தையும் கைப்பற்றினன். இவற்றைக் கைப்பற்றவே முன்னம் பராந்தக சோழன் இலங்கையின்மீது தண்டு எடுத்துச் சென்றானெனினும் அவனாற் கூடவில்லை. தன் குல

[1] சூளவமிசம், 55-ஆம் அத்தியாயம், 16-ஆம் சுலோகம் முதல்.

மூன்னேன் கொண்ட அந்த ஆசையை இராஜேந்திரன் நிறைவேற்றி வைத்தான்.

இம்மெய்க்கீர்த்தியில் காணப்படாத சில செய்திகளை மகாவமிசத்தினின்றும் அறியலாம். அதில் சோழ சேனைகள் இலங்கையைச் சூறையாடின வென்றும், தோல்வியுற்ற மஹிந்தன் மறுபடியும் கானகத்துக்கு ஓடிவிட்டான் என்றும் கூறப்பட்டுள்ளது. அவனுடன் சமாதானம் செய்து கொள்வதாகக் கூறி அவனைத் திருப்பி அழைத்து வஞ்சகமாகப் பிடித்துச் சோழ நாட்டுக்கு அனுப்பிவிட்டார்களாம். அவன் இவ்விடம் வந்த பிறகு, சோழர்களுக்கு முற்றும் பணிந்துவிட்டான்.[1] அவன் இங்கே பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்திருந்து கி. பி. 1029-ஆம் ஆண்டளவில் உயிர் துறந்தான்.

இப் படையெடுப்பின் பயனாக ஈழமண்டலம் முழுவதும் சோழர்கள் வசம் ஆயிற்று. சோழர்கள் ஆட்சியைத் தெரிவிக்கும் கல்வெட்டுகள் பலவும், தமிழ் நாட்டுக் கோயில்களைப்போலக் கட்டப்பட்டுள்ள சிவ விஷ்ணு 'தேவாலே' (தேவாலயங்)களும் அங்கே காணப்படுகின்றன.

சோழர்களால் பிடித்துச் செல்லப்பட்ட ஈழத்து அரசனான மஹிந்தனுடைய மகன் (கஸ்ஸபன்) காசிபன் சிங்களர்களால் இரகசியமாக வளர்க்கப்பட்டு வந்தான். சோழநாட்டில் அவன் தந்தை இறந்த

[1] 642 of 1909 (7-ஆம் ஆண்டு)

பிறகு, சிங்களர்கள் அவனைத் தங்கள் அரசனாக ஏற்றுக்கொண்டார்கள். அவன் முதலாம் விக்கிரம பாஹு என்ற பெயருடன் கி.பி. 1029-ஆம் ஆண்டிலிருந்து 1041-ஆம் ஆண்டுவரையில் பன்னிரண்டு வருஷங்கள் ஆண்டு வந்தான். அவன் ஆட்சியின் இறுதியில் சிங்களர்கள் சோழர்களுடன் நடத்திய போரைப்பற்றிப் பின்னும் கூறுவோம்.

மலைநாடு வென்றது

இக் கங்கை கொண்ட சோழனுடைய ஆரும் ஆண்டுக் கல்வெட்டுக்களில் இவன்,

"எறிபடைக் கேரளர் முறைமையிற் சூடும்
குலதன மாகிய பலர்புகழ் முடியும்
செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத்
தொல்பெருங் காவற் பல்பழந் தீவும்"

கொண்ட செய்தியும்,[1] ஏழாம் ஆண்டில் இவன்,

"செருவிற் சினவி இருபத் தொருகால்
அரசுகளை கட்ட பரசு ராமன்
மேவருஞ் சாந்திமத் தீவரண் கருதி
இருத்திய செம்பொற் றிருத்தகு முடியும்"

கொண்ட செய்தியும் காணப்படுகின்றன.

திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் இப் படையெடுப்புகள் மிக அழகாக வருணிக்கப்பட்டுள்ளன. அதன்கண் மெய்க் கீர்த்தியில் காணப்படாத விவரங்கள் சில உள்ளன.

---

[1] 211 of 1911

[2] S. I. I., II, 82

"திக்கு விஜயம் செய்வதை நோக்கமாகக் கொண்டு, தான் இல்லாதிருக்கும் காலத்தில் இராஜாங்கம் நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, மன்னன் முதன்முதல் தெற்கு நோக்கிப் புறப்பட்டான். பெரும் படையுடன் பாண்டியனைத் தாக்கவே, அவன் நாட்டைத்துறந்து பொதியமலைக்கு ஓடி ஒளிந்தான். பாண்டியர்களது புகழுக்குக் காரணமான மூத்துக்களைக் கைக் கொண்டு அந்நாட்டைப் பாதுகாக்கத் தன் மகனை சோழபாண்டியனை அவ்விடத்தில் அமர்த்தி, மேற்கு நோக்கிச் சென்றான். அதுவரையில் எதிரிகளுக்குக் கிட்டாமலிருந்த பரசுராமருடைய சேரநாட்டைக் கைக்கொள்ளப் பெரும்படையுடன் மலையைத் தாண்டிச் சென்று அங்கிருந்த அரசர்களுடன் பெரும்போர் செய்து வெற்றிகொண்டு நாடு திரும்பினன்" என்பது திருவாலங்காட்டுச் செப்பேடுகளிற் காணப்படும் செய்தியாகும்.

பாண்டி மண்டலமும் மலைநாடும் இராஜராஜன் காலத்திலேயே வென்று அடிப்படுத்தப் பட்டனவாகும். இராஜேந்திரனுடைய ஆட்சியின் மூன்றும் ஆண்டில் ஸ்ரீவல்லுவர் என்னும் பாண்டிய மன்னன் தேவி ஒருத்தி திருவிசலூர்க் கோயிலுக்கு நிவந்தம் கொடுத்த செய்தி கல்வெட்டுக்களில் காணப்படுவதால் [1] சோழர்கள் பாண்டி மண்டலத்தின்மீது நன்கு ஆதிக்கம் செலுத்தி வந்தது தெரியவரும். ஆயினும், இம்மன்னனது ஆட்சியின்

[1] 46 of 1907

பத்தாம் ஆண்டுக் கல்வெட்டொன்று, இராஜராஜன் காந்தளூர்ச்சாலையில் கலமறுத்தருளியதைப் போல இவனும் நிகழ்த்தினன் என்றெண்ணும் படியாக அமைந்துள்ளது.[1] அதனல் இப்படையெடுப்பின் பயனக மன்னன் புதியநாடு ஒன்றையும் கைப்பற்ற வில்லை யென்று தெரிகிறது. முன்னம் கைக் கொண்ட நாடுகளில் தன் ஆதிக்கம் நிலைநிற்கவே இப்படையெடுப்பை மேற்கொண்டான் போலும்.

சளுக்கியப் போர்

இராஜேந்திரன்,

"பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்
டொளித்தசய சிங்கன் அளப்பரும் புகழொடும்
பீடியல் இரட்ட பாடி ஏழரை
இலக்கமும் கவர்ந்திக் குலப்பெரு மலைகளும்"

கைக்கொண்டான் என்று மெய்க்கீர்த்தி கூறுகின்றது. இச்செய்தி இவனுடைய 9-ஆம் ஆண்டுக் கல்வெட்டுக்களிலேதான முதன் முதலாகக் காணப்படுகின்றது; இவன் கி. பி. 1021-1022-ஆம் ஆண்டுகளில், மேலைச் சளுக்கியர்களுடன் மறுபடியும் போர்செய்யத் தொடங்கினன் போலும். திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் இந்தப் போர் காப்பிய நடையில், பத்துச் சுலோகங்களால் வருணிக்கப் பட்டிருந்தாலும், அவை தமிழ் மெய்க்கீர்த்தியைவிட அதிகமாக ஒன்றும் கூறவில்லை. அரசன் காஞ்சீபுரத்தினின்றும் பெரும்படையுடன் புறப்பட்டு இரட்டபாடியைத் தாக்கிக் கடும்போர் செய்து ஜய

[1] 363 of 1917

ஸிம்ஹணுடைய படையைக் காட்டுக்கு ஓடச்செய்து பன்மணிக் குவியலுடன் காட்டுக்குத் திரும்பினன் என்பதே அவை கூறுவதன்[1] சுருக்கமாகும்.

அக்காலத்தில் ஐந்தாம் விக்கிரமாதித்தனுடைய தம்பியான ஜயஸிம்ஹன் சளுக்கிய நாட்டை ஆண்டு வந்தான். அவன், இழந்த நாடுகளை மீண்டும் கைப்பற்றுவதிலேயே நோக்கம் கொண்டிருந்தான். கி. பி. 1019-ஆம் ஆண்டில் கிடைக்கும் பளகாம்வே (Balagamve) கல்வெட்டு, அவன் சேர சோழர்களை வெற்றிகொண்டதாகக் கூறுவதாலும்,[2] அவனுடைய சாஸனங்கள் பல்லாரி ஜில்லாவிலும் மைசூர் ஸம்ஸ்தானத்தின் வடமேற்குப் பகுதிகளிலும் காணப்படுவதாலும்[3] அவன் சோழர்கள் ஆதிக்கத்தின் கீழிருந்த காட்டுள்புகுந்து சில பகுதிகளைக் கைப்பற்றினன் என்பது தெரியவரும்.

இராஜேந்திரன் ஜயஸிம்ஹனுடன் முயங்கி அல்லது முசங்கி என்று கூறப்படும் இடத்தில் பொருது வெற்றிகொண்டான். முயங்கி என்பது பல்லாரி ஜில்லாவிலுள்ள உச்சங்கிதுர்க்கம்என்பதே போலும்.[4] கி. பி. 1024-ஆம் ஆண்டில் கொடுக்கப்

---

[1] சுலோ. 99-108

[2] Fleet: D. K. D. 436

[3] I. M. P. Bellary. 279, 471; E C. vii Sk, 220, 307

[4] S. I. I. II. pp. 94-5. Note 4. முயங்கி என்பது ஹைதராபாத் சமஸ்தானத்தில் உள்ள "மாஸ்கி" என்னுமிடமாகும் என்று டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார் கருதுகிறார்; Sir Asutosh Mukharjee Commemoration Volume, 3, p. 545.

பட்ட மீரஜ் செப்பேடுகள், ஜயஸிம்ஹன் இடை துறை இரண்டாயிரத்தை ஆண்டு வந்ததாகவும், அதை அவன் 'பஞ்சத் திராவிட' அரசனை சோழ னிடமிருந்து வென்றுகொண்டதாகவும் தெருவிப்ப தால் [1] இராஜேந்திரன் இரட்டபாடியைக் கைக் கொண்டதாகக் கூறிக் கொண்டாலும், ஜயஸிம் ஹன் துங்கபத்திரைக்கு வடக்கேயுள்ள நாட்டை இழந்ததாகத் தெரியவில்லை.

சங்ராம விஜயம்

இவனுடைய பதினேராம் ஆண்டுச் சாஸனங்களில்,

"விக்கிரம வீரர் சக்கரக் கோட்டமும்
முதிர்பட வல்லை மதுர மண்டலமும்
காமிடை வஸிகர் நாமஸிக் கோணமும்
வெஞ்சிலை வீரர் பஞ்சப் பள்ளியும்
பாசடைப் பழன மாசுணி தேசமும்
அயர்வில்வண் கீர்த்தி யாதி நகர்வயிற்
சந்திர்ன் தொல்குலத் திந்திர ரதஸி
விஜயமர்க் களத்துக் கிளையொடும் பிடித்துப்
பலதனத் தொடுநிறை குலதனக் குவையும்
கிட்டருஞ் செறிமிளை ஒட்ட விஷயமும்
பூசுரர் சேர்நற் கோசல நாடும்
தன்ம பாலஸி வெம்மூஸி யழித்து
வண்டுறை சோலைத் தண்ட புத்தியும்
இரண சூரஸி மூரலுகத் நாக்கித்

---

[1] I.A. VIII, 18 :Fleet D.K.D.436.;E.I.XII.pp.295-6

திக்கணை கீர்த்தித் தக்கண லாடமும்
கோவிந்த சந்தன் மாவிழிக் தோடத்
தங்காத சாரல் வங்காள தேசமும்
தொடுகடற் சங்குகொ டடன்மஹி பாலனை
வெஞ்சமர் வளாகத் தஞ்சுவித் தருளி
ஒண்டிறல் யானையும் பெண்டிர்பண் டாரமும்
நித்தில நெடுங்கட வத்தர லாடமும்
வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனற் கங்கையும்"

மாப்பொரு தண்டாற் கொண்ட செய்தி முதன்முதலாகக் காணப்படுகின்றது. எனவே, இதிற் கூறப்பட்ட வெற்றிகள் யாவும், கி. பி. 1023-ஆம் ஆண்டுக்குச் சிறிது முன்பித்தான் நடந்திருக்கவேண்டும்.

இப் படையெடுப்பில் முதன்முதலாகக் கொண்டது சக்கரக் கோட்டம் ஆகையாலும், இராஜேந்திரன் கங்கை கொண்டுவந்த தன் மஹாதண்ட நாயகனைக் கோதாவரிக் கரையில் சந்தித்தான் என்பதாலும், வேங்கி நாடு சோழர்களுக்குக் கீழ்ப்பட்ட ஒரு நட்பு நாடாகவே இருந்துவந்தது என்று கூறலாம்.

சக்கரக் கோட்டம் என்பது விசாகப்பட்டணம் ஜில்லாவுக்கு மேற்கில் மத்திய மாகாணங்களில் உள்ள பஸ்தர் (Bastar) ஸம்ஸ்தானத்தின் தலைநகரான இராஜாபுரத்திற்கு எட்டு மைல் தூரத்தில் உள்ள சித்தரகோடா என்னும் ஊராகும்.[1] பதினொன்பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் அந்தப் பிரதேசத்தை நாகவம்சோத்பவர்கள் என்றும்,

[1] E. I., IX. pp. 178-9

போகவதீபுரவரேச்வரர்கள் என்றும் கூறிக் கொள்ளும் ஒரு வகையினர் ஆண்டு வந்தார்கள். அவர்களைப் பொதுவாக நாகவம்சத்தார் என்று கூறலாம். மாசுணி (மாசுணி = பாம்பு) தேசம் என்று கூறப்பட்டது இதுவே போலும். அங்ஙன மாயின், அந்தப் போரில்கொண்ட மதுரமண்டலம்,[1] நாமணைக்கோணம், பஞ்சப் பள்ளி ஆகிய இடங் களும் அந்த நாட்டைச்சார்ந்தனவாகவே இருத்தல் வேண்டும். அந்தப் பிரதேசம் வேங்கி நாட்டை ஒட்டியிருப்பதும் இதனை வலியுறுத்துகின்றது.

அடுத்து, ஆதி நகரில்[2] இந்திரரதனை வென்று கோசல நாட்டையும், ஒட்டர தேசத்தையும் கைக் கொண்டான். கோசலம் என்பது ஒட்டர தேசத் துக்குப் பக்கத்திலுள்ள தென்கோசலம் அல்லது மஹா கோசலம் என்று கூறப்படும் பூமியாகும். அக்காலத்தில், தாராநகரத்திலிருந்து ஆண்டுவந்த

---

[1] ஒரிஸாவில் உள்ள மதுபன் என்னுஞ்சிறிய ஸம்ஸ்தானத்தை ஒட்டிய பகுதியாக இருக்கக்கூடும்.

[2] டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் இதனைச் 'சாதி நகர்' எனக்கொண்டு மஹாநதிக்கரையில் உள்ளதும் இப்பொழுது 'ஸோன்பூர் பிங்கா' என்று வழங்கப்படுவதுமான யயாதி நகர் ஆதல் வேண்டும் என்று கூறுவர் (Sir. Asutosh Mukharjee Commemoration Volume 3, p. 550) ஆயினும், சாஸனங் களில் 'ஆதி நகர்' என்றே உடம்படு மெய்யான யகரம் சேர்த்து 'யாதி நகர்' என்றே காணப்படுகிறதேயன்றி, 'சாதி நகர்' எனக் காணப்படவில்லை.

போஜராஜனுடன் இந்திரரதன் என்பான் ஒருவன் போர்செய்தான் என்பதைப் போஜனுடைய உதயபுரத்துச் சாஸனத்தால் அறிகிறோம்.[1] பதினோராம் நூற்றாண்டில் ஒட்டர தேசத்தைச் சோமவம்சிகள் என்று கூறப் பெறும் சந்திர குலத்து அரசர்கள் சிலர் ஆண்டு வந்தார்கள். இவன் அவர்களுள் ஒருவன் போலும்.

திருவாலங்காட்டுச் செப்பேடுகளி னின்றும் இராஜேந்திரன் ஒட்டர தேசத்தரசனைக் கொன்று, அவன் தம்பியிடம் பன்மணிக் குவியலைத் திறை கொண்டதாகத் தெரியவருகின்றது.

அதற்குப் பிறகு இச்சோழன், தன்மபாலனுடைய தண்டபுத்தியையும், இரணசூரனுடைய தக்கணலாடத்தையும், கோவிந்த சந்திரனுடைய வங்காள தேசத்தையும் அடைந்தான். திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் இம் முறை மாறிக் காணப்படுகின்றது. மஹாதண்டநாயகன் முதலில் இரணசூரனை வென்றபிறகே தன்மபாலனுடன் போர் புரிந்தான் என்றும் அவனை வென்றவுடன் கங்கைக் கரையை அடைந்தான் என்றும் அவற்றுள் கூறப்பட்டுள்ளது. அங்ஙனமாயின், மஹீபாலனை வென்றது முதலியசெயல்கள் கங்கைகொண்டுமீளும் பொழுது நிகழ்ந்தவை என்று கொள்ளவேண்டும்.

தமிழில் உள்ள மெய்க்கீர்த்தி, அரசன் இவ் வெற்றிகளைக் கொண்டவுடனே எழுதப்பட்டதாலும் வடமொழிப் பிரசஸ்தி பிற்காலத்தில் திரு

[1] E. I., vii. List p. 120, n. 3

வாலங்காட்டுச் சாஸனத்தைச் செப்பேடுகளில் பொறிக்கும் காலத்தில் இயற்றப்பட்டதாலும், நாம் மெய்க்கீர்த்தியையே ஆதாரமாகக் கொள்ள வேண்டும்.

தண்டபுத்தி என்பது பீரார் என்று சிலரும் பீஹார் என்று வேறு சிலரும் அபிப்பிராயப் படுகிறார்கள். அஃது ஒட்டர தேசத்துக்கும் வங்காளத்துக்கும் மத்தியில், சுவர்ணரேகை நதிக்கு இருகரையிலும் உள்ள நாடாக இருத்தல்வேண்டும்.[1] தண்டபுத்தி என்பதைப் 'படை காப்பாக ஒரு தலைவனுக்குக் கொடுக்கப்பட்டு அவனால் அனுபவிக்கப்படும் நிலம்' எனக் கூறலாம்.

வங்காளத்தில் ஒரு பாகத்திற்கு அக்காலத்தில் 'ராடா' (Radha) என்ற பெயர் வழங்கி வந்தது. அதுவே தமிழ்ச்சாஸனங்களில் லாடதேசம் என்று குறிக்கப்படுவதாகும்.

வங்காளம் எனச் சாஸனத்தில் குறிக்கப்பட்டுள்ளது கிழக்கு வங்காளமாகும்.

அக்காலத்தில், இந்நாடுகளை முறையே ஆண்டு வந்த தன்ம பாலன், இரணசூரன், கோவிந்தசந்திரன் ஆகியவர்களைப்பற்றிய செய்தி வேறொன்றும் கிடைக்கவில்லை. எனினும் சூரன் என்று முடிவடையும் பெயரைக்கொண்ட அரசர்கள் சிலரைப்பற்றித் தெரிய வருவதாலும், கிழக்கு வங்காளத்தில் கோவிந்தசந்திரன் என்பவனைப்பற்றிய கதைகள்

[1] R. D. Banerji; Palas of Bengal, p. 71

சில வழங்குவதாலும் அவர்கள் உண்மையில் இருந்தவர்கள் என்று கொள்ளலாம்.

மஹீபாலன் என்பான் பதினேராம் நூற்றாண்டின் தொடக்கத்தில், வங்காளத்தை ஆண்டுவந்த பாலவமிசத்தைச் சார்ந்தவன் அவன் ஆட்சி காசி வரையில் விரிந்திருந்தது. அவன் கௌட தேசாதிபதியாக விளங்கினன். இப்பொழுதுள்ள வங்காள மாகாணத்தின் பாகங்களாக விளங்கிய தண்டபுத்தி முதலிய நாடுகளெல்லாம் அவன் ஆளுகைக்கு உட்பட்டிருந்தன. தன்மபாலன், இரணசூரன், கோவிந்த சந்திரன் ஆகியவர்கள் பாலவமிசத்துப் பேரரசனை மஹீபாலனுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்கள் ஆவார்கள். உத்தரலாடத்தை ஆண்டுவந்த மஹீபாலன் சோழ சேனாதிபதியின் சங்கராதத்திற்கு அஞ்சிப் போர்க்களத்தைவிட்டு ஓடிப்போக அவன் யானைகளையும் பெண்டிர் பண்டாரங்களையும் பிடித்துக் கொண்டு சோழனுடைய தண்டநாதன் கங்கைக் கரையை அடைந்தான்.

சோழ சேனை கங்கை கொண்டு மறுபடியும் தென்னாட்டுக்குத் திரும்பிய விஷயம் பெய்க்கீர்த்தியிற் கூறப்படவில்லை. தோல்வியுற்றவர்கள் கங்கை நீரைத் தங்கள் தலையால் சுமந்து சோழ அரசனுக்குக் கொணர்ந்து சமர்ப்பித்தார்கள் என்று கன்னியாகுமரிக் கல்வெட்டும், வாகைசூடித் திரும்பி வரும் தண்டநாயகனை மன்னன் கோதாவரிக் கரையில் சந்தித்தான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் கூறும்.

இந்தப் படையெடுப்பில் நடந்த வெற்றிகளை நோக்கினால் இது முடிவதற்கு இரண்டு ஆண்டுக ளேனும் சென்றிருக்கும் என்று கூறலாம்.

இம்மன்னன் கங்கையைக் கொணர்வதற் காகவே வடநாட்டு யாத்திரையை மேற்கொண் டான் என்று கூறப்பட்டாலும், அஃது ஒரு தீர்த்த யாத்திரையாக அமையாமல் திக்கு விஜயமாகவே முடிந்தது. பழைய காலத்து அரசர்கள் இவ்விதம் திக்கு விஜயம் செய்வது வழக்கமே. அன்றி, இராஜநீதிப்படி ஒரு நாட்டு அரசன் வேற்றரசன் நாட்டுக்குள் போகமாட்டான். அதனால், கங்கை நீரைத் தமிழ் நாட்டுக்குக் கொணர்வதற்கு அதன் கரை வரையில் உள்ள நாடுகளை இவன் வென்றால் தான் அது நடைபெறுமாதலாலும், இவன் திக்கு விஜயத்தைச் செய்தான் எனவும் கொள்ளலாம்.

எவ்விதமாயினும், அதன் முடிவில் அரசன் நகரமும், ஏரியும் கண்டு பெரும்புகழ் எய்திய செய் தியை முன்னம் கூறியுள்ளோம். இப்படையெடுப் பின் பயனைத் தமிழர் நாகரிகம் வங்காளத்துள் புகுந்தது. இவன் படையுடன் வங்க தேசம் சென்ற வர்களுள் ஒருவன் மேற்கு வங்காளத்தில் தங்கினன் போலும். அவன் வழியில் வந்த சாமந்தஸேனனே பிற்காலத்தில் வங்க நாட்டை ஆண்டுவந்த ஸேன வமிசத்தின் ஆதி புருஷன் எனப்படுவான்.[1] மிதிலை

[1] R. D. Banerji; Palas of Bengal, pp. 73, 99

யை யாண்ட கர்நாடகர்களும் இவ்விதம் சென்றவர்களே போலும்.

கடாரங் கொண்டது

இம்மன்னனுடைய கப்பற்படைகள் கடல் கடந்து கடாரம் கொண்ட செய்தி முதல் முதல் இவனுடைய அரசாட்சியின் பதின்மூன்றும் வருஷத்துச் சாஸனத்திலேதான் காணப்படுகின்றது. அதற்குமுன் இல்லை. ஆகையால் இவன் கடாரம் கொண்டது சுமார் கி. பி. 1024-25-ஆம் ஆண்டிலே யாதல் வேண்டும். திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் இவன் கடல்கடந்து கடாரம் கொண்ட செய்தி குறிப்பிடப்பட்டிருக்கின்றதே யன்றி, அதைப்பற்றிய விவரங்கள் முழுவதும் தமிழ் மெய்க்கீர்த்தியாலேதான் அறியவேண்டியிருக்கின்றது.

இவனுடைய அரசாட்சியின் பதின்மூன்றும் ஆண்டிலே அமைந்துள்ள சாஸனங்களில், இவன்,

"அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்திச்
சங்கிராம விசையோத் துங்க வர்ம்மன்
ஆகிய கடாரத் தரசனை வாகையம்
பொருகடல் கும்பக் கரியொடு மகப்படுத்
தூரிமையில் பிறக்கிய பெருநிதிப் பிறக்கமும்
ஆர்த்தவ னகனகர்ப் போர்த்தொழில் வாசலில்
விச்சா தரத்தோ ரணமு மொய்த்தொளிர்
பூணமணிப் புதவமும் கனமணிக் கதவமும்
நிறைபூரீ விஷயமும் துறைநீர்ப் பன்னீயும்
வன்மலை யூரெயிற் றென்மலை யூரும்

[1] 213 of 1911; E. C., IX., Cp. 84

ஆழ்கட லகழ்சூழ் மாயிரு டிங்கமும்
கலங்கா வல்வினை யிலங்கா சோகமும்
காப்புறு நிறைபுனல் மாப்பப் பாளமும்
காவலம் புரிசை மேவிலிம் பங்கமும்
விளைப்பந் தூறுடை வளைப்பங் தூறும்
கலைத்தக் கோர்புகழ் கலைத்தக் கோலமும்
தீதமர் வல்வினை மாதமர் லிங்கமும்
கலாமுதிர் கடுகிறல் இலாமுரி தேசமும்
தேனக்க வாபொழில் மாகக்க வாரமும்
தொடுகடற் காவற் கடுமுரட் கடாரமும்
மாப்பொரு தண்டாற் கொண்ட"

செய்தி குறிக்கப்படுகின்றது.'[1]

முதலில் கடாரத்தரசனைப் பிடித்து வாகை சூடி அவனது யானையையும், நிதியையும், வித்தி யாதரத் தோரணம் முதலியவற்றையும கவர்ந்து, அதன்பின் பல நாடுகளையும் ஊர்களையும் கைப் பற்றிக் கடைசியாகக் கடாரத்தையும் கைக்கொண் டான் என்று கூறப்பட்டுள்ள இம் மெய்க்கீர்த்திப் பகுதியை நன்று கவனித்தால், இதில் கண்ட பல ஊர்களையும் வெற்றியையும் மன்னன் ஒரே படை யெழுச்சியில் பெற்றான் என்பது தெரியவரும்.

ஸ்ரீவிஷயம் என்பது சுமத்ரா வென்னும் தீவில் உள்ள பாலம்பாங் என்னும் இராஜதானியாகும். இது மலேயா தீவுகளில் கி. பி. எட்டு முதல் பதினேரும் நூற்றாண்டு வரையில் மிகவும் பிர சித்திபெற்று விளங்கியது. இது தென்னிந்தியா

[1] S. I. I., II. p. 109

வுடன் மிகவும் நெருங்கிய தொடர்புகொண்டு விளங்கியது. இந்நாட்டைப்பற்றிய சரித்திரக் குறிப்புக்கள் சீன தேசத்துப் புத்தகங்களில் அதிகமாகக் கிடைக்கின்றன. அங்கே இது ஸ்ரீ விஜயம் என்று வழங்கப்பட்டுள்ளது.[1] இந்நாட்டுள் அடங்கியனவாகச் சீன புத்தகங்களில் காணப்படும் இடங்களும், இம்மெய்க் கீர்த்திகளில் உள்ளனவும் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன.

கடாரம்

கலிங்கத்துப் பரணியில், 'குளிறு தெண்டிரைக் குரை கடாரம்' என்றும், 'பரக்கு மோதக் கடாரம் அழிந்த நாள்' என்றும் குறிக்கப்பட்டிருப்பதனின்றும், அது கடற்கரையில் உள்ளது என்பது பெறப்படும்.[2] அது வடமொழியில் கடாஹம் என்றும்,[3] சங்க இலக்கியங்களில் காழகம் என்றும் வழங்கப்பட்டு வந்தது.[4] மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழ் நாட்டினர் கடாரத்துடன் வாணிகம் செய்து வந்தார்கள். சீன தேசத்தவர்களும் கடாரத்துடன் வாணிகம் செய்து வந்தனர்.[5] சீன தேசச்

---

[1] சீன தேசத்தவர்களால் முதலில் Che-li-fo-che அல்லது Fo-che என்றும், பிற்காலத்தில் San-fo-tsi என்றும் வழங்கப்பட்டு வந்தது.

[2] கலிங்கத்துப் பரணி, 138, 189

[3] லீடன் செப்பேடுகள்

[4] பத்துப்பாட்டு, 3-ஆம் பதிப்பு, பக்கம், 550

[5] சீனர்கள் முதலில் kie-t ch'a என்றும், பிறகு kie-t'o என்றும் வழங்கிவந்தார்கள்

சரித்திரக் குறிப்புக்களால், கடாரம் என்பது மலேயா தீபகற்பத்தின் தென்பகுதியில் மேல்கரையில் இப்பொழுது கெடா என்று வழங்கப்பட்டுவரும் இடம் என்று தெரியவருகின்றது.

இவன் கைக்கொண்டனவாகக் கூறப்படும் பல ஊர்களும் தேசங்களும் மலேயா தீபகற்பத்திலும் சுமத்ரா தீவிலும் இருந்தன. அவை பின்வருமாறு :

பன்னை

இது சுமத்ரா தீவின் கீழ்கரையில் உள்ள பனி (Pani அல்லது Panei) என்னும் ஊராகும்.

மலையூர்

இது மிகவும் பழமையான தொரு நாடு. இந்நாட்டிலேதான் மலையூ என்னும் நதி பாய்ந்தது என்றும் கூறப்படுகின்றது. எனினும், இதை நிச்சயிக்க முடியவில்லை. இது சுமத்ரா தீவின் கீழ்கரையிலிருந்தது என்று சிலரும், மேல்கரையில் இருந்தது என்று வேறு சிலரும், மலேயா தீபகற்பத்தின் தென்பகுதியில் இருந்தது என்று மற்றோரும் கூறுகிறார்கள். ஆயினும், டச்சு ஆராய்ச்சியாளர்கள் இது ஜம்பி (Jambi) என்னும் நாடே என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

மாயிருடிங்கம்

இது சீனதேசத்து நூல்களில் ஜீலோடிங் (Ji-lo-ting: யிருடிங்கம்) என்று கூறப்படுகின்றது. இது மலேயா தீபகற்பத்தின் மத்திய பாகத்தில் இருந்திருக்கவேண்டும்.

இலங்காசோகம்

இது லிங்-யா-ஸென்-கியா (Ling-ya-ssen-kia) என்று குறிக்கப்பட்டு வந்தது. மலேயா தீபகற்பத்தில், கெடாவுக்குத் தெற்கே இருந்ததுபோலும்.

மாப்பப்பாளம்

இது பப்பாளமா (Papphalama) என்று மகாவமிசத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இது 'க்ரா' பூசந்திக்குப் பக்கத்தில் இருக்கவேண்டும்.

மேவிலிம்பங்கம், வேளாப்பந்தூறு

இவை இருந்த இடங்களை நிச்சயிக்கக் கூடவில்லை. ஆயினும் இவை இன்ன இடங்களாக இருக்கலாம் என்பது படத்திலே காட்டப்பட்டுள்ளது.

தலேத்தக்கோலம்

கிரேக்க ஆசிரியரான டாலமியும் இதைத் தகோலா என்று குறித்துள்ளார். இது க்ரா பூசந்திக்கு (Isthmus of Kra)த் தெற்கே, மலேயா தீபகற்பத்தின் மேல்புறமாக இருந்தது. இப்பொழுது தகோபா (Takopa) என்று வழங்கப்படுவது இதன் தலைநகராக இருந்ததுபோலும்.

மாதமர் லிங்கம்

இது சீன நூல்களில் தன்மாலிங் (Tan-ma-ling) என்று கூறப்பட்டுள்ளது. மலேயா தீபகற்பத்தின் கீழ்புறத்தில், க்வாண்டன் நதியின் முகத்துவாரத்தில் உள்ள தெமிலிங் (Temiling) அல்லது தெம்பெலிங் (Tembeling) என்று சொல்லப்படும் இடமாகும்.

இலாமுரி தேசம்

இது சுமத்ரா தீவின் வடபகுதியில் உள்ள தேசமாகும். அராபியர்கள் இதை லாமுரி என்றும், மார்க்கோ போலோ என்பார் லம்ப்ரி (Lambri) என்றும் குறித்துள்ளார்கள். சீனர்கள் இதன் பெயரை லான்வூலி (Lan-wou-li) என்று எழுதியுள்ளார்கள்.

மாநக்கவாரம்

இஃது இப்பொழுது நிக்கோபார் என்று வழங்கப்பெறும் தீவுகளைக் குறிக்கும்.

சீன நூல்களிலும், இவற்றுள் பெரும்பாலன ஸ்ரீவிஜய ராஜ்யத்துக்குக் கீழ்ப்பட்டவை என்று காணப்படுகின்றது.

அக்காலத்திலே, சோழநாட்டுக்கும் ஸ்ரீவிஜயத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. திரவியம் தேடுவதற்காகவும் வேறு பல வேலைகளுக்காகவும் திரைகடலோடினவர் பலர். அரேபியா, பாரசீகம் முதலிய மேல் நாட்டு முகம்மதிய இராஜ்யங்களுடனும், கிழக்கே ஜாவா சீனு முதலிய நாடுகளுடனும் தமிழ் நாட்டவர்கள் வாணிகம் செய்து வந்தார்கள். இந்து மகாசமுத்திரத்தின் வழியாகச் சீனவுக்குச் செல்லும் வர்த்தகக்கப்பல்களுக்கெல்லாம் ஸ்ரீவிஜய இராஜ்யத்துத் துறைமுகப்பட்டினங்களே வழியில் தங்குமிடங்களாக இருந்தன. ஸ்ரீவிஜயத்து ஜனங்கள் தமிழ் நாட்டுக்கு வந்து தங்கியும் தமிழ் நாட்டு

மக்கள் ஸ்ரீவிஜயத்துக்குச் சென்று தங்கியும் வியாபாரம் செய்து வந்தார்கள். இவற்றைத் தெரிவிக்கும் ஆதாரங்கள் பல உள.

இராஜராஜன் ஆட்சியின் இறுதியிலும், இராஜேந்திரன் ஆட்சியின் முற்பகுதியிலும் சோழ நாடும் ஸ்ரீவிஜயமும் நட்புக்கொண்டிருந்தனவென்பதை முன்னம் நாம் கூறியுள்ளோம். இந்நாடுகளுக்குள் பகை ஏற்பட்டு இராஜேந்திரன் ஒரு பெரும் படையை அனுப்பி ஸ்ரீவிஜயத்துடன் யுத்தம் செய்ய நேர்ந்ததற்குக் காரணம் இன்னதென்று இப்பொழுது தெரியவில்லை. வாணிக நிமித்தமாக அங்கே சென்று குடியேறின தமிழர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவோ அல்லது சீன தேசத்துடன் நடந்த வியாபாரத்தைத் தமிழ் நாட்டினர் கைக்கொள்ளுவதற்காகவோ இருக்கக்கூடும்.

ஆட்சியின் பிற்பகுதி

இங்ஙனமாக, இவன் மெய்க்கீர்த்தியில் காணப்படும் வெற்றிகளை இவன் தன்னுடைய ஆட்சியின் முற்பகுதியிலேயே கொண்டான். அதற்குப் பிறகு இவன் இருபது ஆண்டுகள் வரை அரசு செலுத்தி வந்தான். அக்காலங்களில் போர்ச்செயல் ஒன்றும் நடைபெறவேயில்லை என்று கூறுவதற்கில்லை. அவை இவன் மகன் இராஜாதிராஜனுடைய மெய்க்கீர்த்திகளில் காணப்படுகின்றன. ஆதலின், இராஜேந்திரன் தன் ஆட்சியின் பிற்பகுதியில் போர்த் தொழிலினின்றும் விலகிக் கொண்டான் என்றும், அவன் மக்கள் பலரும் பிறநாடுகளின்

மீது தண்டு எடுத்துச் சென்று வெற்றிகொண்டார் கள் என்றும கொள்ளவேண்டும். அவற்றை இனி ஆராய்வோம்.

---

6. இராஜேந்திரனும் இராஜாதிராஜனும்

ஈழப் போர்

இராஜாதிராஜன் மெய்க்கீர்த்திகளில் அவன் முறையே இலங்கை யரசன், பாண்டியன், கேரளன் ஆகிய 'தென்னர் மூவர்' மீது கொண்ட வெற்றி முதலில் கூறப்பட்டுள்ளது. பொதுவாக,

"மாஞ பாணன் பொன்முடி ஆஞப்
பருமணிப் பசுந்தலை பொளிகளத் தரிந்த"[1]

செய்தி சுருக்கமாகக் காணப்படினும், சில கல்வெட்டுக்களில் இது விவரமாகக் கூறப்பட்டுள்ளது.[2] மஹா வமிசத்திலும் இது காணப்படுகின்றது. அவற்றினின்றும், இப் படையெடுப்பின் விவரங்களைப் பின்வருமாறு கொள்ளலாம்.

இராஜேந்திரன் தன் ஆட்சியின் முதலில் (கி.பி.1017-ஆம் ஆண்டில்) ஈழமண்டலம் முழுவதையும் கொண்டு மஹிந்தனைச் சோழ நாட்டில் சிறை வைத்திருந்தாலும், சிங்களவர்கள் தாங்கள் இழந்த நாட்டை மீண்டும் கைப்பற்றச் சமயம் பார்த்திருந்தனர். மஹிந்தன் இறந்த பிறகு அவன் மகன் காசிபன் சோழர்களுக்கு விரோதமாகக் கிளம்பி

---

[1] S. I. I., III., p. 29

[2] Ibid, p. 56

ஆறு மாதங்களுக்குமேல் சண்டை செய்தான். அதன் முடிவில் இலங்கையின் தென்கிழக்குப் பாக மான ரோஹண நாட்டை வென்று கி.பி. 1029-ஆம் ஆண்டளவில் விக்கமபாஹு[1] (விக்கிரமபாஹு) என்ற பெயருடன் முடிசூட்டிக்கொண்டான்.

அவன் பன்னிரண்டு ஆண்டுகளே அரசு செலுத்தினன். மஹாவமிசத்தில் அவன் சோழர் களுடன் பெரும்போர் நிகழ்த்துவதற்கு வேண்டிய சாதனங்களைச் செய்து வருங்கால் (கி. பி. 1041-ஆம் ஆண்டில்) இறந்தான் என்று சொல்லப்பட்டிருக் கிறது. சோழ சாஸனங்களில் அவன் சோழர்களு டன் செய்த போரில் உயிர் இழந்தான் என்று கூறப்பட்டுள்ளது. அவன் இறந்த பிறகு 'கித்தி' என்னும் ஒருவன் எட்டு நாட்களும், மஹாலானகித்தி என்பான் மூன்று வருஷங்களும் ஆண்டு வந்தார் கள். மஹாலானகித்தி சோழர்களுடன் செய்த போரில் தோல்வியுற்று, அந்த அவமானத்தைப் பொறுமல் தன் கையாலேயே கழுத்தை அரிந்து கொண்டு உயிர் துறந்தான். சோழர்கள் அவன் கிரீடம் முதலிய பல ஆபரணங்களைக் கைக்கொண்டு நாட்டைச் சீர் அழித்தார்கள். அவன் மகன் விக்கம பண்டு (விக்கிரமபாண்டியன்) இலங்கையில் வாழ்வது உயிருக்கு ஆபத்து ஆகும் என்று எண்ணித் துளுவ நாட்டில் வசித்து வந்தான். தன் தந்தையின் முடி வைக் கேட்டதும் அவன் ரோஹணத்தை அடைந்து

[1] 92 of 1892

சின்னஞ் ஆண்டு ஜகதீபாலன் என்பவனுடன் செய்த போரில் உயிரிழந்தான்.

சோழசாஸனங்களில் விக்கிரம பாண்டியன் தமிழ்நாட்டின் தென்பாகத்தை ஆண்டு வந்தவன் என்றும், அவன் தன் நாட்டை இழந்து பயந்து இலங்கைக்கு ஓடி அந்நாட்டை ஆண்டுவந்தான் என்றும் காணப்படுகின்றது. அக்காலத்தில், பாண்டிய கேரளர்களும் இலங்கை யரசர்களும் தங்களுக்குள் மணவினை செய்துகொண்டு உறவு பெற்றிருந்தனர். அவர்கள் தங்கள் மூவருக்கும் பொதுவான எதிரிகளான சோழர்களை வென்று தங்கள் தங்கள் நாடுகளை மீண்டும் கைப்பற்றுவதற்கு உதவியாக நேசங்கொண்டு வாழ்ந்து வந்தார்கள். மஹாவம்சத்து விக்கமபண்டுவும் சோழ சாஸனங்களின் விக்கிரம பாண்டியனும் ஒருவரே என்று கூறலாம்.

விக்கிரம பாண்டியனை வென்ற ஜகதீபாலன் அயோத்தியை ஆண்ட அரசனுடைய குமாரன் என்று மஹாவம்சத்தில் கூறப்படுகிறான். சோழர்கள் அவனையும் போரிலே கொன்று அவன் மகிஷியையும் பெண்ணையும் மற்றும் பல நிதிகளையும் தங்கள் நாட்டிற்கு அனுப்பிவிட்டார்கள். சோழ சாஸனங்களில் அவன் கன்னகுச்சி (கன்யாகுப்ஜம்) யினின்றும் இலங்கைக்கு ஓடியவன் என்பதும் அவன் பெயர் வீரசலாமேகன் என்பதும் காணப்படுகின்றன ; சோழர்கள், அவன் தமக்கை, தேவி ஆகியவர்களைச் சிறைகொண்டு தாயின் மூக்கை அரிந்து அவமானப்படுத்தினர்கள் என்று தெரி

கின்றது. சோழ சாஸனங்களிற் குறிக்கப்படும் வீரசலாமேகனும், மஹாவமிசத்தில் சொல்லப்படும் ஜகதீபாலனும் ஒருவரே போலும்.

சோழர்கள் நான்காவதாகக் 'கன்னரன் வழி வந்துறை கொள் ஈழத்தரைசன்' ஆகிய ஸ்ரீ வல்லவன் மதன ராஜன் முடியையும் கொண்டார்கள்.[1]

இவ்விதம் ஈழப்போர் பல வருஷங்கள் நடந்தது. மஹாவமிசத்துக் கணக்குப்படி இவ்வெற்றிகளுள் சில இராஜேந்திரன் காலத்துக்குப் பிறகு கிடைத்தன வென்று கொள்ளப்படுகின்றது.[2] எனினும், இராஜாதிராஜனுடைய ஆட்சியின் முற்பகுதியில் உள்ள மெய்க்கீர்த்திகளிலே அவன் காந்தளூர்ச்சாலையை வென்ற பிறகு இலங்கைமீது படையெடுத்துச் சென்று இலங்காகாதன், வல்லவன், கன்னகுச்சிகாவலன் ஆகியவர்களின் சிரங்களைக் கொய்தான் என்று காணப்படுவதால்[3] இவ்வெற்றிகள் இராஜேந்திரன் காலத்திலேயே நடைபெற்றிருத்தல் வேண்டும்.

பிறகு, இராஜாதிராஜன்,

"அந்தமில் பெரும்புகழ்ச் சுந்தர பாண்டியன்
கொற்றவெண் குடையும் கற்றைவெண் கவரியும்
சிங்கா தனமும் வெங்களத் திழந்துதன்

[1] மஹாவமிசத்தில், இவ்விடத்தில் கூறப்பட்டிருப்பவன் விக்கமபண்டுவின் மகன் எனப்படும் பராக்கமன் (பராக்கிரமன்) ஆவன்.

[2] J. R. A. S. 1913, pp. 519-21

[3] 172 of 1894; 92 of 1892

முடிவிழத் தலைவிரித் தடிதளர்ந் தோடத்
தொல்லை முல்லையூர்த் துரத்தி"னன்

என்று அவன் மெய்க்கீர்த்தி கூறுகின்றது.

இஃது எந்த வருஷம் நடந்தது என்பதை வரையறுக்க இயலவில்லை. அக்காலத்தில் இருந்த பாண்டியர்களுடைய கல்வெட்டுக்கள் அகப்படாமையால், இம் மெய்க்கீர்த்தியில் உள்ளவற்றையே நாம் கொள்ள வேண்டி யிருக்கிறது. சோழபாண்டியர்களாக ஆண்ட அரசிளங்குமரர்களுடைய சாஸனங்களாலும் ஒன்றும் அறியக்கூடவில்லை. சோழர்களுக்குக் கீழ்ப்படிந்து ஆண்ட சுந்தர பாண்டியன், அவர்களைப் பாண்டி மண்டலத்தினின்றும் துரத்த முயன்று தானே ஓட நேரிட்டது போலும்.

மலைநாட்டுப் போர்

இராஜாதிராஜன்,

"ஒல்கலில்
வேணுட் டாசைச் சேணுட் டொதுக்கி
மேவுபுகழ் இராமகுட மூவர்கெட முனிந்து
மிடல்கெழு வில்லவன் குடர்மடிக் கொண்டுதன்
நாடுவிட் டோடிக் காடுபுக் கொளிப்ப
வஞ்சியம் புதுமலர் மலிந்தாங் கெஞ்சலில்
வேலைகெழு காந்தளூர்ச் சாலைக் கலமறுத்து"

வெற்றி கொண்ட செய்தியும் அவனுடைய மெய்க்கீர்த்தியில் காணப்படுகின்றது.

அக்காலத்தில் மலைநாடு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியிலும் தனித் தனி

[1] S. I. I., [2] III, p. 56

யாக ஒவ்வோர் அரசன் ஆண்டுவந்தான் என்பது தெரியவருகின்றது.

பாண்டிய மண்டலத்தினின்றும், 'காந்தளூர்ச் சாலைக் கலம் அறுக்க'ச் சென்ற இராஜாதிராஜன் முதலில் வேணாட்டு அரசனைத் தாக்கி அவனை வானுலகம் போக்கிக் கூபக நாட்டு அரசனை விடுவித்தான்.[1]

இராஜாதிராஜன் வேணாட்டு அரசனை வென்ற பிறகு, இராமகுட மூவரைப் பழிக்கும்படியாகக் கடும்போர் புரிந்து வல்லவனை சேரன் வயிறுமடித்துக் கொண்டு ஓடும்படி செய்தான்.

இராமகுடம் என்பது எலி மலைக்குப் (Mt. D' Eli) பக்கத்திலேயிருந்த ஒரு சிறு இராஜ்யமாகும்.[2]

---

[1] 75 of 1895; M. E. R. 1913 ii. 26

'திங்களோர் தரு' என்று தொடங்கும் இராஜாதிராஜனுடைய மெய்க்கீர்த்தியில்,

"வேணாட் டரசைச் சேணாட் டொதுக்கிக்
கூவகத் தரசைச் சேவகந் தொலைத்து
வேலைகெழு காந்தளூர்ச் சாலைக்கல மறுத்ததற்பின்"

என்று வருவதைக் கவனிக்க.

[2] T. A. S. II pp, 87 ff; J.R.A.S. 1922, pp. 161, ff

சோமசுந்தர தேசிகர் அவர்கள், "இரா—மகுடம்" என்று பிரித்து, அத்தொடர் மகுடம் இழந்த இலங்கையரசன், வீரகேரளன், சுந்தரபாண்டியன் ஆகிய மூவரையும் குறிக்கும் என்று கொள்வார் (செந்தமிழ். XXII. ப. 65.) ஆயினும் ராமகுட மூவர் திருவடி என்பது மூஷிக நாட்டு அரசன் பெயர் என்பதை ஒரு கல்வெட்டுத் தெளிவாகக் குறிக்கின்றது; M. E. R. 1930. p. 86.

அவ்விடத்திலே ஆண்டு வந்த அரசர்கள் மூஷிக வமிசத்தைச் சேர்ந்தவர்கள். அந்தப் பிரதேசத்தில், இராமகுட மூவர் திருவடியாகிய கண்டன் காரிவர்மன் எனப்படும் மூஷிக அரசனுடைய ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று கிடைத்திருக்கின்றது.[1] அஃது இராஜேந்திர சோழ சமைய சேனாபதி என்பவனைப்பற்றிக் கூறுவதால், இராஜாதிராஜனால் வெற்றிகொள்ளப்பட்டவன், கண்டன் காரிவர்மனே போலும்.

மேலைச்சளுக்கியப் போர்

இராஜேந்திரன் ஆட்சியின் இறுதியில், சோழர்களுக்கும் மேலைச்சளுக்கியர்களுக்கும் மறுபடியும் போர் நிகழ்ந்தது.

கி. பி. 1012-ஆம் ஆண்டில் மேலைச்சளுக்கிய அரசனை ஜயஸிம்ஹன் இறக்கவே அவன் மகன் சோமேச்வரன், திரைலோக்யமல்லன், ஆகவமல்லன் என்ற விருதுகளுடன் மகுடாபிஷேகம் செய்யப்பட்டான். அவன் சோழ சாஸனங்களில் ஆகவமல்லன் என்றே கூறப்படுவான். ஜயஸிம்ஹன் காலத்திலேயே சளுக்கியர்கள் துங்கபத்திரையைக் கடந்து சிறிது சிறிதாகத் தெற்கே உள்ள நாட்டைக் கைக்கொள்ளத் தலைப்பட்டனர். ஆகவமல்லன் பட்டத்துக்கு வந்தவுடன், அவர்களுக்குள் உள்ள விரோதம் முற்றிப் போர் புரியவேண்டிய சந்தர்ப்பம் ஏதோ உண்டாயிற்று. சோழ

[1] 523 of 1930

சாஸனங்களில் இப் படையெழுச்சி சுருக்கியும் விரித்தும் கூறப்பட்டுள்ளது. இராஜாதிராஜன் சளுக்கிய சேனையைப் புறங்கண்டு அவர்கள் சேனபதிகளான கண்டப்பையன், கங்காதரன் ஆகியவர்களைக் கொன்றான். சோமேச்வரன் மக்களாகிய விக்கிரமாதித்தனும், விஜயாதித்தனும், சங்கமையன் என்னும் சேனபதியும் போர்க்களத்தினின்றும் ஓடிவிட்டார்கள். பின்பு சோழர்கள் யானையும், குதிரையும், கவரிதியும் கொண்டு சென்று கொள்ளிப் பாக்கையை எரியூட்டினர்கள்.[1] சில சாஸனங்களில், இராஜாதிராஜன், சிறுதுறை, பெருந்துறை, தைவபீமகளி ஆகிய முத்துறைகளிலும் யானைக்கூட்டத்தைக் குளிப்பாட்டிச் சளுக்கியர்களின் வராகலாஞ்சனை பொறிக்கப்பட்ட குன்றுகளில் புலிக்குறியைப் பொறித்துப் பல அரசர்களை வென்று கூர்ஜர மன்னனுடைய சிரம் களைந்தான் என்று கூறப்பட்டுள்ளது.

சில சாஸனங்களில், அவன் ஆகவமல்லனுடன் நிகழ்த்திய போர் விவரமாகக் கூறப்பட்டுள்ளது.[2] சோழர்களை வெல்லுவதற்கு முடியாது என்பதை யறிந்த ஆகவமல்லன், சமாதானத்துக்கு ஏற்பாடு செய்வதற்காகச் சில தூதர்களை அனுப்பினன். சோழர்கள் அவர்களுள் இருவரைப் பொறுக்கி எடுத்து ஒருவனுக்கு 'ஐங்குடுமி' வைத்தும் மற்றவ

[1] S. I. I., IV, 539; V, 465
[2] 172 of 1894

னுக்குப் பெண் உடை தரித்தும் அலங்கரித்தார்கள்; அவர்களுக்கு 'ஆகவமல்லன், ஆகவமல்லி' என்று பெயரிட்டுத் திருப்பி அனுப்பினர்கள். இதைக் கண்ட சளுக்கியன் மனம் பொருனுப்பப் போர் செய்தான். அப்போரில் அவன் தோல்வியுற்றான். இராஜாதிராஜன் கல்யாணபுரம் கொண்டு அவ்விடத்தில் வீராபிஷேகம் செய்து விஜய ராஜேந்திரன் என்ற பட்டத்தையும் சூட்டிக்கொண்டான்; அந்நகரத்தைச் சூறையாடிப் பல பொருள்களைத் தமிழ் நாட்டிற்குக் கொணர்ந்தான். அவற்றுள் ஒன்றான துவார பால விக்கிரகம் ஒன்று பீடத்தில், "ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் ஸ்ரீ விஜய ராஜேந்திர தேவர் கல்யாணபுரம் எறிந்து கொடுவந்த துவார பாலகர்" என்ற கல்வெட்டைக் கொண்டதாகத் தாராசுரம் ஐராவதேசுவரர் கோயிலில் சமீபகாலம் வரையில் இருந்தது. இப்பொழுது அது தஞ்சைப் பெரிய கோயிலுக்குக் கொண்டுபோகப்பட்டதாகத் தெரியவருகிறது.

இப் போர்நிகழ்ச்சிகள் இராஜாதிராஜனுடைய இருபத்தாறும் ஆண்டுச் சாஸனங்களில் காணப்படுவதாலும், ஆகவமல்லன் கி.பி.1042-ஆம் ஆண்டிலேதான் பட்டத்துக்கு வந்திருக்க வேண்டுமாதலாலும், இவை ஆகவமல்லன் பட்டத்துக்கு வந்தவுடனே ஒன்று அல்லது இரண்டு வருஷங்களுக்குள் நிகழ்ந்திருக்க வேண்டும். இப் படையெழுச்சியில், இராஜாதிராஜன் வெற்றி கொண்டான்.

இப்போர் நெடுங் காலமாக நீடித்து நடந்தது. அவனுடைய ஆட்சியின் மற்றப் பகுதியும், அவனுக்குப் பின் வந்த அவன் சகோதரர்களின் ஆட்சியும், சளுக்கியப் போரிலேயே கழிந்தன வென்று கூறலாம்.

இராஜேந்திரன் அந்தியகாலம்

இராஜேந்திரன் ஆட்சியின் கடைசியில் சோழ ஸாம்ராஜ்யம் மிகவும் புகழ்பெற்று விளங்கியது. இப்பொழுது மைசூர் ஸம்ஸ்தானம் உள்ளிட்டுச் சென்னை இராஜதானி என்று வழங்கப்படும் பிர தேசம் முழுவதும், ஒரிஸா மாகாணத்தின் தென் பகுதியும், ஹைதராபாத் ஸம்ஸ்தானத்தின் ஒரு பகுதியும், இலங்கையின் முழுப் பகுதியும், சுமத் திரா, மலேயா தீபகற்பத்தின் பகுதி ஆகிய நாடு களும் சோழ ஏகாதிபத்தியத்துள் அடங்கி யிருந் தன. மக்களின் துணைகொண்டு அரசன் மூப்பத்து மூன்று ஆண்டுகள் அரசு செலுத்திவந்தான். இவ் விதம் பேரும் புகழும் பெற்ற அரசன், தன் மகன் இராஜாதிராஜனுடைய ஆட்சியின் இருபத்தாரும் ஆண்டாகிய கி. பி. 1044-ஆம் ஆண்டில் உலக வாழ்வை நீத்தான்.[1] இவன் தேவிகளுள் 'வீரமா தேவி உடன்கட்டை ஏறினளென்று தெரிகிறது.[2] செய்யாறு தாலுகா பிரம்ம தேசத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று வீரமாதேவியின் ஆன்மா சாந்தி

[1] 79 of 1909

[2] 260 of 1915

அடைவதற்காக ஒரு தண்ணீர்ப்பந்தலில் அவள் உடன் பிறந்தானகிய சேனபதி மதுராந்தகன் பரகேசரி வேளான் நிறுவிய செய்தியைத் தெரிவிக்கின்றது. அதில், அத்தேவி உடையார் ஸ்ரீராஜேந்திர சோழதேவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்திலேயே பிரம்மனுடைய பாதங்களை அடைந்தாளென்று கூறப்படுவதால், மன்னன் அந்த ஊரிலேதான் இறந்தான் என்றும், அந்தத் தேவியும் உடன்கட்டை ஏறினாள் என்றும் கூறலாம்.[1]

பின்னோர்கள்

இராஜேந்திரனுக்குப் பிறகு அவனுடைய கீர்த்திபெற்ற மக்களான இராஜாதிராஜன் (கி. பி. 1018-1054,) இராஜேந்திரதேவன் (கி பி. 1052-1064), வீரராஜேந்திரன் (கி. பி. 1062-1070) ஆகிய மூவரும் முறையே சோழ சிங்காதனம் ஏறி ஆண்டு வந்தார்கள். அவர்கள் மேலைச்சளுக்கியர்களுடன் ஓயாப் போர் நிகழ்த்தி வந்தனர். கி. பி. 1053-54-ஆம் ஆண்டில் (கிருஷ்ணை நதி) பேராற்றங் கரையிலுள்ள கொப்பத்தில் நடந்த பெரும்போரில் சளுக்கிய அரசனை ஆகவமல்லன் ஒரு மதயானையின் மீதிருந்து அம்பெய்து இராஜாதிராஜன் தலையைக் கொய்தான். உடனே அவன் தம்பியான இராஜேந்திரதேவன் 'ஒரு களிற்றின் மேல் வருகளிற்றை யொத்து உலகுயக் கொளப்பொருது கொப்பையிற் பொருகளத்திலே முடிகவித்து'க் கொண்டான்.

---

[1] 260 of 1915; M. E. R. 1916. p. 118

இராஜேந்திர தேவனுடைய மகனை இராஜ மஹேந்திரன் தன் தந்தையின் காலத்திலேயே அரசுக்குரியவனாக நியமிக்கப்பட்டும் தந்தையின் காலத்திலேயே இறந்துவிட்டான்போலும்.

வீரராஜேந்திரனும் சளுக்கியர்களுடன் கடும் போர் நிகழ்த்திவந்தான். ஆகவமல்லன் இளைய குமாரனை விக்கிரமாதித்தனுக்குத் தன் பெண் ணைக் கொடுத்து அவனைத் தன் வசப்படுத்திக் கொண்டான்; எனினும் சண்டை ஓய்ந்தபாடில்லை. கி. பி. 1070-ஆம் ஆண்டில் அவன் இறந்துவிட் டான்.

வீரராஜேந்திரன் இறந்தவுடன் சோழதேசம் குழப்பமடைந்ததென்றும், அவனுடைய மகனை அதிராஜேந்திரன் சளுக்கிய விக்கிரமாதித்தனுடைய உதவியைப் பெற்றிருந்தும் அதிக நாள் வாழவில்லை யென்றும், நாட்டில் மறுபடியும் குழப்பம் உண் டாக அதில் அவன் கொல்லப்பட்டான் என்றும் தெரியவருகின்றது.

அதிராஜேந்திரனுடன் புகழ்பெற்ற சோழ வமிசம் ஒருவாறு முடிவுற்றது. நாட்டில் ஏற்பட்ட கலகத்துக்கு இராஜேந்திரனுடைய தெளஹித்தி ரன் (பெண் வயிற்றுப் பிள்ளை) ஆன வேங்கி நாட்டு இராஜேந்திரன் எனப்படும் குலோத்துங்கனே காரணன் என்று கூறலாம். அவன் தாய் வழி யால் முறைமை கொண்டாடி, கி. பி. 1070-ஆம் ஆண்டில் சோழ சிங்காதனம் ஏறி (உபய) குலோத்

துங்க சோழன் என்னும் பெயருடன் ஆளத் தொடங்கினன். அவனுடைய வழியில் வந்தவர்கள் சோழர்கள் என்றே குறிக்கப்பட்டாலும், அவர்கள் உண்மையில் சளுக்கியச் சோழர்களே யாவர்.

---

7. இராஜேந்திரன் காலத்தில் இருந்த நாட்டின் நிலைமை

அரசியல் முறை

இராஜேந்திரன் காலத்தில் அரசியல் எவ்விதம் கடைபெற்றது என்பதையும், நாட்டு மக்கள் எவ்வித நிலையில் வாழ்ந்துவந்தனர் என்பதையும் அறிவதற்குரிய சாதனங்கள் பல உள்ளன. அவ்வரலாறுகளை ஆராய்ந்து எழுதினால் அதுவே ஒரு தனி நூலாக விரியும். ஆதலின்மிகவும் சுருக்கமாக முக்கியமான விஷயங்களுள் சிலவற்றைமட்டும் கூறுவோம்.

அந்தக் காலத்தில் இராஜாங்கத்தில் பலவிதமான சம்பிரதாயங்கள் ஏற்பட்டுவிட்டன. யாழுடன் பாடிச் சென்ற பாணன் யாரும் தடுப்பாரின்றி அரண்மனைக்குள் சென்று அரசனையும் மற்றோரையும் புகழ்ந்து பாடிக் களிப்பித்துச் சிலநாள் தங்கிப் பரிசில் பெற்றுச் சென்றான் என்று சங்க நூல்களில் காணப்படுகின்றது. சோழ ஸாம்ராஜ்யம் மகோந்நத ஸ்திதியில் விளங்கிய காலத்தில் அதைப்போல நடைபெற்றிருக்க முடியாது.

சோழர்கள் ஆட்சி முறையை, 'தனியரசன் ஆட்சி' என்றே சொல்ல வேண்டும். அவர்கள் உண்மை நெறியினின்றும் தவறமாட்டார்கள்.

அரசர்களும் மற்றோரும் கோவில்களுக்கும் தர்ம ஸ்தாபனங்களுக்கும் அளித்த நிவந்தங்களைக் கவனித்தால் அக்காலத்தில் அரசனும், அவனைப் பின்பற்றி நாட்டு மக்களும் பழைய மரபுகளை அனுஷ்டித்து வந்தார்கள் என்பது தெரியவரும்.

இராஜ்யத்தின் பிரிவுகள்

சோழ ஸாம்ராஜ்யம் பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இராஜராஜன், இராஜேந்திரன் ஆகியவர்கள் ஆண்டுவந்த காலத்தில் மொத்தம் ஒன்பது மண்டலங்கள் இருந்தன. ஒவ்வொரு மண்டலத்துக்கும் ஜயங்கொண்ட சோழமண்டலம், இராஜராஜ சோழமண்டலம், மும்முடிச் சோழ மண்டலம், முடிகொண்ட சோழமண்டலம். நிகரிலி சோழ மண்டலம் என்பன போன்ற அரசனுடைய விருதுகளில் ஒன்றோடு சார்த்திய பெயர்கள் இடப்பட்டன. அவற்றோடு பழைய பெயரும் சேர்த்தே வழங்கப்பட்டன.

தொண்டைநாடு ஜயங்கொண்ட சோழமண்டலம் என்றும், பாண்டிநாடு இராஜராஜப் பாண்டி மண்டலம் என்றும், இலங்கை மும்முடிச் சோழமண்டலம் என்றும், கங்கபாடி முடிகொண்ட சோழமண்டலம் என்றும், நுளம்பப்பாடி நிகரிலி சோழமண்டலம் என்றும் பெயர் பெற்றன. சோழமண்டலம், வேங்கி மண்டலம், மலைமண்டலம், கொங்கு மண்டலம் என்பன பழைய பெயர்களோடே வழங்கி வந்தன. இவற்றுள், சோழ ராஜ்யத்தின் பல

மண்டலங்களும் பழைய பாகுபாடுகளுக் கேற்பவே பிரிக்கப்பட்டிருந்தன வென்பதும் தெரியவரும்.

ஒவ்வொரு மண்டலமும் பல வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வளநாடும் பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பொதுவாக நோக்குமிடத்து இப்பிரிவுகள் எல்லாம், ஆறு, கால் வாய் போன்று நிலையாக உள்ளவற்றையே எல்லை யாகக் கொண்டிருந்தன. உதாரணமாக: சோழ மண்டலத்தில் இருந்த உய்யக்கொண்டார் வளநாடு காவிரியாற்றுக்கும் அரிசிலாற்றுக்கும் இடையில் உள்ள நிலப்பரப்பைக் கொண்டிருந்ததைக் கூற லாம். தொண்டை மண்டலம் மட்டில், பழைய காலத்து முறைப்படி இருபத்து நான்கு கோட்டங் களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வளநாடுகளின் பகுதிகளான நாடுகளுட் சில, கூற்றங்கள் எனவும் வழங்கிவந்தன.

இவ்விடம் கூறிய உட்பிரிவுகளின் பெயர்களில் அநேகமாக எல்லாம் இராஜராஜனுடைய பட்டப் பெயர்களேயாகும். எனினும், இப்பெயர்களே பிற் காலத்தில் நிலைபெற்றிருக்கவில்லை. ஒவ்வோர் அர சனும், நாட்டின் பகுதிகளுக்குத் தன் பெயரைக் கொண்டு புதுப்பெயர் இட்டுவந்தான். சோழமண் டலத்திலுள்ள க்ஷத்திரிய சிகாமணி வளநாடு, முதற் குலோத்துங்கன் காலத்தில் குலோத்துங்க சோழ வளநாடு என்ற புதுப்பெயரை அடைந்தமை இதற்கு ஓர் உதாரணமாகும்.

அரசன் விருதுகள்

இவ்விதம் வகுக்கப்பட்டிருந்த நாட்டை ஆண்டு வந்த சோழ மன்னர்கள் தங்கள் சாஸனங்களில் பெரும்பாலும் உடையார் என்றே குறிக்கப்படுவார்கள். ஆயினும், சில சாஸனங்களில், அவர்கள் சக்கரவர்த்திகள்[1] என்றும், கோநேர் இன்மை கொண்டான் என்றும் குறிக்கப்படுவார்கள். அவர்கள் திருபுவனச் சக்கரவர்த்திகள்[2] என்று அழைக்கப்பட்டது இராஜேந்திரனுக்குப் பிற்காலத்திலேதான்.[3] பிற்காலத்தில், அரசனுடன் அவன் தேவியும் வீற்றிருந்தாள் என்று மெய்க் கீர்த்தியில் காணப்படும் செய்தி, இவன் மெய்க்கீர்த்தியில் இல்லை.

அரச குடும்பம்

அரச குடும்பத்தைப் பற்றியும் அவர்கள் வாழ்க்கையைப்பற்றியும் நமக்கு விரிவாகத் தெரியவில்லை. எனினும், அரச குடும்பத்தின் ஆதரவில் பலவகையான வேலைக்காரர்கள் இருந்துவந்தனர். அவர்கள் 'வேளம்' எனப்படும் பல பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தனர். அவர்களுள் பலர் பெண் மக்கள் ஆவர்.

---

[1] முதலாம் பராந்தக சோழனும் இங்ஙனம் அறிவிக்கப் பட்டுள்ளான். 1, 2 of 1898.

[2] இராஜராஜ சோழனும் இவ்விதம் குறிக்கப்பட்டுள்ளான்.

[3] 241 of 1927; 446 of 1918

அரச குடும்பத்தைச் சேர்ந்த தேவியர் தங்கள் கணவரோடு வேட்டைக்கும் போர்க்களத்துக்கும் செல்லுவது உண்டு. "பிடியின் மேல் வரு பிடிக்குல மநேக மெனவே பெய்வளைக் கைமட மாதர் பிடி மீதின் வரவே" என்று கலிங்கத்துப் பரணியில் கூறப்பட்டிருப்பதை நோக்கின் இது நன்கு விளங்கும். அவர்கள் ஆடல், பாடல், சித்திரம் வரைதல், செய்யுள் இயற்றல் முதலியவற்றில் நல்ல தேர்ச்சி அடைந்திருந்தனர்.

சோழர்கள் அரசாட்சி செய்தகாலத்தில் அவர்கள் நடத்திய 'அரசாங்கவிருந்து' (State Banquet) எவ்விதம் நடைபெற்றது என்பதைப்பற்றிப் பின் வரும் விவரம் சௌ ஜுகுவா (Chau Ju-kua) என்னும் சீனதேசத்துப் புத்தகத்தில் காணப்படுகின்றது.[1] "அரசாங்க விருந்தில் அரசனும் நான்கு மந்திரிகளும் சிங்காதனத்தின் அடியில் வணங்குவார்கள். உடனே அவ்விடத்தில் உள்ளவர்கள் எல்லோரும் பாடி ஆடிக் களிப்பார்கள். அரசன் மது உண்பதில்லை; ஆனல் மாமிசம் சாப்பிடுவான். அந்த நாட்டு வழக்கப்படி அவன் பருத்தியினின்றும் செய்யப்பட்ட ஆடையை அணிந்திருப்பான். அவன் மாவினல் செய்யப்பட்ட பணியாரங்களையே உண்பான். மாறி மாறி அவனுடைய ஏவல் செய்வாரும், உடனிருப்பாரும் ஆகத் தினமும்

[1] ஸ்ரீமான் க. அ. நீலகண்ட சாஸ்திரிகள், 'சோழர்கள்', இரண்டாம் புஸ்தகம், ப, 219.

மூவாயிரம் நாட்டியப் பெண்களை அமர்த்தியிருக்கிறான்." இதனை நாம் கவனித்தால் அக்காலத்தில் அரசர்கள் நடத்திய வாழ்க்கை ஓரளவு தெரியவரும்.

"கலையினெடுங் கவிவாணர் கவியினெடு மிசையினெடுங்
காதன் மாதர்
முலையினெடு மனுநீதி முறையினெடு
மறையினெடும்" [1]

அரசன் பொழுது போக்கினன் என்று கூறப்படுவதும் இதனையே வலியுறுத்தும். முற்காலத்து அரசர்களுக்குச் சங்கீதம், நாட்டியம் ஆகிய நுண்கலைகளின்மேல் அளவற்ற பிரேமை இருந்தது என்பது பழைய நூல்கள் பலவற்றிலும் அறியக் கிடக்கின்றது.

இளவரசன்

தந்தைக்குப்பின் மகன் இராஜ்யத்தை அடைவது முறைமையாக இருந்தது. சோழ மன்னர்களுக்குப் பல தேவியர்களும், அவர்கள் வயிற்றில் பிறந்த பல மக்களும் இருந்தார்கள். அதனால், மன்னர்கள் இராஜ்யத்தின் நலத்தையே முக்கியமாகக் கருதி அவர்களுள் வீரமும், திறமையும்பெற்றவனுக்கே அரசுரிமையை வழங்கிவந்தார்கள் என்று எண்ணவேண்டியிருக்கிறது. இராஜேந்திரனும், தனக்குப்பின் நாட்டை ஆளுவதற்காகத் தன் காலத்திலேயே மூத்தவனல்லாத இராஜாதிராஜ

[1] கலிங்கத்துப் பரணி, X, 46

னுக்கு முடி சூட்டியதை நாம் கவனித்தால் இது நன்கு விளங்கும். ஆனல், புத்திரரில்லாவிடின், சகோதரரேனும் நெருங்கிய உறவினரேனும் இராஜ்யத்தை அடைவது உண்டு.

முடிசூட்டு விழா

சக்கரவர்த்தியும் இளவரசனும் முடி சூட்டப் பெறும் காலத்தில், முறைப்படி அபிஷேகம் செய்யப்படுவார்கள். அவ்விழாக் கொண்டாடும் முறையை நாம் நன்கு அறியக் கூடவில்லை. முடிசூட்டுவதற்குக் குறித்த நன்னாளில், முடிசூட்டப் பெறவேண்டிய அரசனை யானை மீதேற்றி, மந்திரிகளும் சிற்றரசர்களும் புடைசூழ நகரை வலஞ்செய்வித்து அபிஷேக மண்டபத்துக்கு அழைத்துச் செல்வார்கள் என்றும், அவ்விடத்தில் மங்கல வாத்தியம் முழங்க அவனைச் சிங்காதனத்தில் அமர்த்தி முடிசூட்டி ஹோமம் வளர்த்திப் பொற்குடங்களினின்றும் புண்ணிய தீர்த்தத்தால் அபிஷேகம் செய்விப்பார்களென்றும் பழைய நூல்களினின்று தெரிய வருகின்றது.

அரசியல் நிர்வாகம்

அரசன் ஈசுவராம்சமாகவே கருதப்பட்டான். அவன் தெய்வத்திற்கு அஞ்சிக் குடிகளின் க்ஷேமத்தைக் கருதியே நடந்துவந்தான். எல்லா அதிகாரங்களையும் அரசனே தலைமை பூண்டு செலுத்தி வந்தான். அவன் எதையும் தான் விரும்பியவாறு செய்துமுடிக்கும் உரிமை பூண்டவன். ஆயினும்,

அவன் மந்திரிகளைக் கலந்து அவர்களுடைய உதவியைப்பெற்றே இராஜ்ய நிர்வாகம் செய்துவந்தான். அவ்விதம் அரசனுக்குத் தக்கது கூறி இராஜ்ய பாரத்தை உடனிருந்து தாங்கியவர்கள், 'உடன் கூட்டம்' எனவும், கூட்டப் பெருமக்கள் எனவும் படுவர். அவர்கள் எப்பொழுதும் அரசனுடன் சேர்ந்தே இருப்பார்கள் என்று தெரியவருகின்றது. அவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வோர் அரசியற் பிரிவின் தலைவரா என்பதை நாம் நிச்சயமாகக் கூறமுடியாது. ஆயினும், அவர்கள் அரசனுக்கு வேண்டிய வற்றை எடுத்துரைத்தும், அவன் ஆணைகளை வெளியில் உள்ளோருக்கு விடுத்தும் வந்தனர்.

அரசியலை நடத்துவதற்குப் பல அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் கருமிகள் என்றும், பணிமக்கள் என்றும் இரு பெரும் பிரிவுகளாக வகுக்கப் பட்டிருந்தனர். கருமிகள் எனப்படும் அதிகாரிகள், பெருந்தரம், சிறுதரம் என இருவகைப் படுவர். சாஸனங்களினின்றும் ஒவ்வொரு வகையிலும் பல அதிகாரிகளின் பெயர்கள் நமக்குத் தெரியவருகின்றன.

அவ்வதிகாரிகளுக்கு இப்பொழுது உள்ளதைப் போலச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. ஒவ்வொருவரும் அவரவர் அந்தஸ்துக்குத் தக்கபடி அரசனிடமிருந்து நிலத்தையோ, அதன் வரும்படியையோ பெறுவர். அதை அவர்கள் ஜீவிதமாக அனுபவிப்பார்கள்.

அரசன் பல சமயங்களில் நாட்டைச் சுற்றிப் பார்வையிட்டு வருவான். அதற்காக அவனும் பரிவாரங்களும் தங்குவதற்கு ஒவ்வொரு முக்கியமான இடத்திலும் அரண்மனை இருந்து வந்தது. அவை இல்லாத இடங்களில் அரசன் கோயில்களிலும் மண்டபங்களிலும் தங்குவான்.

இவ்விதம் அரசன் நாட்டின் பல பாகங்களுக்கும் செல்லும் காலங்களில், குடிகள் தங்கள் குறைகளை அரசனிடம் முறையிட்டுக் கொள்வதற்கு வேண்டிய உதவிகள் இருந்தன.

அரசனிடம் உத்தரவு பெறவேண்டிய விஷயத்தைப் பற்றி உடன் கூட்டத்து அதிகாரிகளுள் ஒருவன் விண்ணப்பம் செய்வான். அதைக் கேட்ட அரசன், உடனேயோ, பின்பு மந்திரிகளைக் கலந்தோ முடிவுசெய்து வாய்மொழியால் உத்தரவை அளித்து அதை நிறைவேற்றிவைக்க 'ஆணத்தி'யையும் குறிப்பிடுவான். அதைக்கேட்டிருந்த 'திருவாய்க் கேள்வி' என்னும் அதிகாரி சொல்ல ஓலை எழுதும் மந்திரியான 'திருமந்திர ஓலை' அதை எழுதி, 'ஓலை நாயகம்' என்னும் அதிகாரியைக் கொண்டு ஒப்பிட்ட பிறகே மற்ற அதிகாரிகளுக்கு அனுப்பு வார்கள். அந்த ஓலை, தானம் கொடுக்கப்பட்டதைத் தெரிவிப்பதாக இருந்தால், அதைத் 'தீட்டு'ப்படிப் 'புரவு வரி' என்போர் 'வரிப் பொத்தகம்,' 'வரிப் பொத்தகக் கணக்கு' ஆகியவற்றில் எழுதி, 'வரியிலீடு', 'முக வெட்டி', கண்காணி' ஆகிய அதி

காரிகளுக்குக் காட்டிப் 'பட்டோலை' அதிகாரியைக் கொண்டு நாட்டார்க்குத் திருமுகம் அனுப்புவார்கள்.

இவற்றுல் நிலவரி சம்பந்தமாகப் பல அதிகாரிகள் இருந்துவந்தனர் என்பது தெரியவரும். அவர்கள் அதைத்தவிர வேறு பல அதிகாரங்களையும் வகித்து வந்தார்கள். சிலர் கோயில்களின் வருமானத்தையும் செலவையும் ஒழுங்கு செய்ததையும், வேறு சிலர் கிராமச் சபைகளையும் அவற்றின் நடவடிக்கைகளையும் சரிவர நடத்துவதில் உதவி புரிந்ததையும், மற்றும் சிலர் கிராமச் சபையினர் அமைக்கும் 'அறவோலை' முதலியவற்றைத் தணிக்கை செய்து ஒப்பம் இட்டதையும் சாஸனங்களின் மூலமாக அறிகிறோம். அவ்வதிகாரிகள் குற்ற விசாரணை செய்து நீதி செலுத்தியும் வந்தனர் என்று தெரிகின்றது.

நியாயம் வழங்கும் முறை

நியாய விசாரணை செய்து நீதி செலுத்துவதற்குத் தனி அதிகாரிகள் இருந்தனர். 'நியாயத்தார்' எனப்படும் அவர்கள் கூடி விசாரணை செய்யும் இடம் 'தர்மாசனம்' என்று வழங்கப் பெறும். அக்காலத்தில் விசாரணை எப்படி நடத்தப் பட்டது என்பதை அறிய முடியவில்லை. என்ருலும், சிறிய குற்றங்களும், உரிமைகளும், ஊர்ச்சபையோராலேயே விசாரிக்கப்பட்டு நியாயம் வழங்கப்பட்டு வந்தது. இப்பொழுது உள்ளதைப் போல அக்காலத்தில் வழக்கு அறியும் முறை சிக்கல்

கொண்டதாக இல்லை. நியாயத்தார் முன்னிலையில் 'முறைப்பாடு' செய்தவுடன், அவர்கள் அம்முறை யீடு நியாயமானதா என்பதை முதலில் ஆராய்ந்து, பிறகு முறையீடு செய்தவனைத் தன் கட்சியை ஆட்சி (வழக்கம்), ஆவணம் (பத்திரங்கள்) 'அயலார் தங்கள் காட்சி' (சாட்சி) ஆகிய மூன்றனுள் ஒன்றாலோ பலவற்றாலுமோ நிரூபிக்கும்படி சொல்லுவார்கள். அவன் அங்ஙனம் நிரூபித்து விட்டால், அதற்குப் பிறகே மற்றவன் தானும் அவ்விதமே மறுத்துக் கூறுவான். அவற்றை ஆய்ந்து உண்மை தெளிந்து நியாயத்தார் முடிவு கூறுவார்கள்.

இவை யாவும், இக்காலத்தைப் போல அதிக காலம் ஆகாமல் விரைவில் முடிந்துவிடும். ஒரு கிராமத்தாருக்கும் மற்றொரு கிராமத்தாருக்கும் இடையில் ஏற்பட்ட எல்லைச்சண்டை போல்வன பலகாலம் இழுத்துச் செல்வதும் உண்டு. அப்படிப் பட்டவை காலத்தாலேயே முடிவு செய்யப்படுவன போலும்.

பிறர் பொருளை அபகரித்தல், பிறன்மனை சேரல், கூடலேகை செய்தல் (கள்ளக் கையெழுத்திடல்) ஆகியவை பெரிய குற்றங்களாகக் கருதப் பட்டு வந்தன.

அக்காலத்தில் கொலைக்குக் கொலை வாங்கும் வழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. ஒருவன் தெரியாமல் செய்த குற்றம் பொதுவாக மன்னிக்கப்

பட்டோ, சிறிய பிராயச்சித்தத்துடனே விடப்படும். வேட்டைக்குச்சென்ற ஒருவன், எய்த அம்பு குறி தவறி ஓர் உழவன் மேற்பட்டு அவன் இறந்ததற் காக வேட்டையாடியவன் திருக்கோயிலில் விளக்கு எரிக்க ஏற்பாடு செய்யுமாறு உத்தரவிடப்பட்டான். ஒருபடைவீரன் மற்றொரு வீரனைக் கொன்றுவிட்ட தால் அவன் இறந்தவனுடைய உறவினர்களுடன் கலந்து அவர்கள் சம்மதத்தின் பேரில் கோயிலில் விளக்கு எரிக்க நிவந்தம் அமைத்தான் என்று ஒரு கல்வெட்டுக் கூறுவதால்,[1] அவ்விதமான குற்றங்க ளுக்கு நியாயஸ்தலத்துக்குச் செல்லாமலேயே பிரா யச்சித்தம் செய்துவிடும் உரிமை இருந்து வந்தது என்றும் தெரியவருகின்றது. குற்றவாளிக்கு அப ராதம் விதித்தும் கோயில்களுக்கு நிவந்தம் வைக்க வும் நஷ்டத்தை ஈடுகட்டவும் உத்தரவிட்டும் தண் டனை வழங்கி வந்தனர். சில பெரிய குற்றங்களுக் குக் குற்றவாளிகளைக் கழுதைமேல் ஏற்றி ஊரைச் சுற்றி வரவும் பணித்தனர்.

இராஜத்துரோகக் குற்றங்களை அரசனே நேரில் விசாரித்து முடிவு செய்வது வழக்கம் என்று தெரிகிறது. குற்றவாளிகளைத் தண்டிப்பதுடன், அவர்களுடைய சொத்துக்களை பறிமுதல் செய்து ஆஜ்ஞ்யாக்கிரயம் (அரசன் ஆணையால் விற்பனை) செய்யப்படும்.[2]

---

[1] 48 of 1897

[2] 377 of 20; 379 of 22; 277 of 17

கோயிற் சொத்துக்களை அபகரித்துச் சிவத் துரோகம் செய்தவர்களுடைய நிலங்களைப் பறி முதல் செய்து அந்த நிலங்களையோ அல்லது அவற்றை விற்றுக் கிடைத்த விலையையோ நஷ்டம் அடைந்த கோயிலுக்கு உரிமையாக்கி விடுவார்கள்.[1]

உத்தியோகஸ்தர்களுக்குப் பட்டம் அளித்தல்

அரசாங்க உத்தியோகம் வகித்த பலருக்கு அரசன் விருதுகளையும் பட்டங்களையும் வழங்கி வந்தான். மாராயன், பேரரையன் என்பன அப்பட்டங்களுள் சிலவாகும். வாச்சிய (வாத்ய) மாராயன், நித்த (நிருத்த)ப் பேரரையன் என்று காணப்படுவதால், ஒவ்வொரு துறையிலும் மேம்பட்டவர்களுக்கு இவை வழங்கப்பட்டு வந்தன என்பது பெறப்படும். மாராயன் மனைவிகளை மாராசி என்று வழங்கி வந்தனர்.

மந்திரிகளாகவும் படைத் தலைவர்களாகவும் விளங்கிய அதிகாரிகளுக்கு அரசன் வேறு விதமான பட்டங்களை அளித்து வந்தான். அவர்களுக்குத் தன்னுடைய விருது, பட்டம் ஆகியவற்றுள் ஒன்றை அல்லது 'மூவேந்த வேளாளன்' என்னும் பட்டத்தை அரசன் அளிப்பான். அவர்கள் 'ராஜேந்திர சோழ மூவேந்த வேளான்', 'அதிகாரிகள் மூவேந்த வேளான்' என்பனபோன்ற பெயர்களால் வழங்கப்பெறுவார்கள். அவர்களுடைய மனைவியர் 'அதிகாரிச்சி' என்று குறிக்கப்படுவர்.

[1] Ins. of T.; M. E. J. 1929 ii. 37

படைகளும் அவற்றின் வகைகளும்

ஆயிரக்கணக்கான போர்வீரர்கள் எப்போதும் ஸித்தமாக அரசனது கட்டளையை எதிர் நோக்கி நாட்டைக் காத்துவந்தனர். போர்க்காலங்களில் சிற்றரசர்களும் துணைப்படை உதவிவந்தனர்.

கல்வெட்டுக்களில் காணப்படும் குஞ்சரமல்லர், ஆனையாட்கள் என்னும் பெயர்களால் யானைப் படையும், குதிரைச் சேவகன் என்பதனால் குதிரைப்படையும், கைக்கோளப்பெரும்படை என்னும் பெயரால் காலாட் படையுமாகிய மூவகைப் படைகள்[1] இருந்தனவென்று தெரியவரும். ஒவ்வொரு படையும் பல பிரிவுகளாக அமைந்திருந்தது. வில்லிகள் என்றும், வாள்பெற்ற கைக்கோளர்

---

1 அக்காலத்தில் தேர்ப்படையும் இருந்தது என்றும், ஆசிரியர் தொல்காப்பியனார். "தானை யானை குதிரை யென்ற, மோரு முட்டிய மூவகை நிலையும்" (புறத் 17) என்ற சூத்திரத்தில், "தானை யுள்ளிட்ட மூன்றுறுப்பு மெடுத்துக் கூறிக் குறுங்கையானன்றித் தேர் தானே செலலாமையின், தேர்க்கு மறுத இன்றென்று அதை கூருராயினார்" எனறும், அதைத் தமிழ் நில வழக்குப்பற்றியே, "சாஸனகாரரும் 'தேர்ப்படை'யென வேறே எடுத்தனராதலி போறும் என்று கொண்டு கொள்க" என்றும் ஒருவர் கூறுவர். ஆயினும், சோழ சாஸனங்களிலே ஒன்றிலாவது தேர்ப்படையைப் பற்றியோ தேரைப்பற்றியோ ஒரு குறிப்பும் காணப்படவில்லை. போர்க்களத்தில் அரசன் யானைமீது அமர்ந்து யுத்தம் செய்தான் என்ற குறிப்புகளே காணப்படுகின்றன. அதனால் தேர்ப்படையில்லை யென்பதை நிச்சயமாகக் கூறலாம்.

என்றும், விட்டேறு என்றும் காணப்படுவதால், அவர்கள் முக்கியமாக அம்பு, வில், வாள், வேல் முதலிய ஆயுதங்களாலேயே போர் நிகழ்த்தி வந்தனர் என்பது தெரியவரும். துப்பாக்கி, பீரங்கி முதலியன அக்காலத்தில் வழக்கில் இல்லை.

'மும்முடிச் சோழத் தெரிந்த ஆனையாட்கள்' என்பதுபோல் ஒவ்வொரு படைப்பகுதியும் வெவ் வேறு பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. அவ் விதமான பெயர்கள் ஒவ்வொரு படையும் எக்காலத் தில் எதற்காக உண்டாக்கப்பட்டது என்பதையா வது, எந்தப் போரில் பெரு வெற்றிபெற்றது என் பதையாவது, எந்தக் காரியத்தை முடிப்பதற்காக அமைக்கப்பட்டது என்பதையாவது தெரிவிக்கின் றன. இப்படைகள் நாட்டின் பல பாகங்களிலும், கடகங் (படை வீடு)களில் நிறுவப்படடு, அமைதி யைப் பாதுகாத்து வந்தன. சாஸனங்களிற் காணப் படும் இப்படையைச் சேர்ந்தவர்கள், இவற்றின் சேனபதிகள் ஆகியோருடைய பெயர்களைக் கவ னித்துப் பார்த்தால், பிராமணர்களும் அக்காலத் தில் போர்த்தொழிலைக் கைக்கொண்டு பல வெற்றி களைப் பெற்றிருந்தார்கள் என்பது தெரியவரும்.

அக்காலத்தில் கடற்படை ஒன்றும் இருந்தது. ஈழ நாடு, கடாரம் ஆகியவற்றைக்கொண்ட படை யெழுச்சிகளால், தமிழ் நாட்டினர் அலைகடலில் கப்பலைச் செலுத்திச் செல்வதில் பின்வாங்கவில்லை என்பது தெரியவரும். ஆயினும், அக்காலத்தி

விருந்த கப்பற்றொழிலைப்பற்றிய நூலோ விவ ரமோ ஒன்றும் கிடைக்கவில்லை. சுமார் கி. பி. ஒன்பது முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையில் தமிழ் நாட்டினருடனும் பிறருடனும் வாணிகம் செய்துவந்த அரபியர்களுட் சிலர் எழுதி வைத்திருந்த குறிப்புகளினின்றும், அவ்வகை நூல் கள் இருந்தனவென்பது வெளியாகின்றது. அக் காலத்துக் கப்பல்களைப்பற்றி நாம் அறிந்துகொள் ளும் முக்கியமான செய்தி, ரோம் முதலிய நாடுகளில் பலகைகளை ஆணியடித்து ஒன்று சேர்த்துக் கப்பல் செய்யப்பட்டதைப்போல் அல்லாமல், தமிழ் நாட்டினர் பலகைகளை ஒன்றோடொன்று தைத்துப் பிணைத்துக் கப்பல் செய்து வந்தனர் என்பதே யாகும்.

போர் நிகழ்த்திய முறை

அக்காலங்களில் சோழர்கள் நிகழ்த்திய போர்ச் செயல்கள் இராஜநீதியில் உள்ள விதிகளுக்கேற்ப நடந்தனவென்று கூறமுடியாது. கைப்பற்றிய நாட் டைச் சூறையாடி, நகரை எரியூட்டிப் பாழ்படுத்திப் பல கொலைகளும் துஷ்கிருத்தியங்களும் புரிந்து திறைகொள்வது வழக்கம் என்றே சொல்லலாம். வெற்றியை அடைந்த அரசனுடைய படை தோற் றவனுடைய நாட்டுள் 'தீயையும் வாளையும்' ஏந்திச் சென்றன. ஆயினும் போர்வீரர்கள் யுத்த காலத் தில் முதுகிட்டு ஓடமாட்டார்கள். 'பழியொடு வாழ் வதிற் சாவது சாலநன்று' என்ற கொள்கையைக்

கொண்டவர்களாக உயிருள்ளவரையில் போர் புரிந்தே வீரசுவர்க்கம் அடைவார்கள். போர்க் களத்தில் முதுகிட்டு ஓடினவரைத் துரத்துவது கூடாது என்று இராஜநீதி கூறினாலும், எப் போதும் அக்கொள்கை அனுஷ்டிக்கப்படுவதில்லை.

கிராம சபைகள் முதலியன

அக்காலத்திலே நாடுகாவலே அரசன் கடத்தி வந்தாலும் பொதுக்காரியங்களிற் பல, கிராமங்களி லும் நகரங்களிலும் வசிக்கும் மக்களே கவனித்து வருமாறு விடப்பட்டிருந்தன. அதேகமாக ஒவ் வொரு கிராமத்துக்கும் ஒரு சபை இருந்துவந்தது. கிராமத்தில் உள்ள ஆண்மக்கள் யாவரும் ஊர்ச் சபையின் உறுப்பினராயினும், தேர்ந்தெடுத்த ஆளுங் கணத்தாரே நிர்வாகத்தை நடத்திவந்தனர். கிராம ஆட்சி முழுவதையும் அவர்களே நடத்தி வந்தனர் எனலாம்.

பிராமணர்கள் குடியேறிய சதுர்வேதிமங்கலத் தில் இவ்விதம் இருந்த கூட்டத்துக்குச் 'சபை' என்ற பெயர். அவர்கள் முக்கியமான காரியங் களைச் சில பெரியோர்களைக்கொண்டு அமைக்கப் பட்ட வாரியங்களின் உதவியால் நடத்திவந்தனர்.

பெரிய நகரங்களிலும், மங்கல (அக்ரகார)ங்க ளாக மாற்றப்பட்ட பழைய கிராமங்களிலும் மேலே கூறிய இருவகைச் சபைகளும் இருந்துவந்தன. அவற்றைப்போலவே வைதிக மதத்தை அனுஷ்டிப் பவர்களும் ஜைனர்கள் முதலானோரும் வசித்துவந்த

இடங்களில் தேவதானத்தைச் சேர்ந்தவர்களுக்கும், பள்ளிச் சந்தத்தைச் சார்ந்தவர்களுக்கும் தனித் தனிச் சபைகள் இருந்தன.

வியாபாரிகள் முதலானோருக்கும் 'வளஞ்சியத் தார்', 'மணிக்கிராமத்தார்' என்பன போன்ற தனிச் சபைகள் இருந்தன. இவற்றைத் தவிர, கோயில் நிர்வாகம், நீர்ப்பாசனங்கள் ஆகியவற் றைக் கவனிப்பது போன்றவற்றுக்கும் தனியே சபைகள் இருந்தன. இவ்விதமான சபைகளுள் பெரும்பாலன ஒன்றற்கொன்று தொடர்புடையன வாகவே இருந்தன.

சிற்றூர்களுக்கும் நகரங்களுக்கும் உள்ளவற் றைப் போலவே ஒவ்வொரு நாட்டுக்கும் 'நாட் டார்' என்ற சங்கம் இருந்துவந்தது. இவ்விதமாக இருந்த பல சபைகளும் எந்தெந்தக் காரியங்களைத் தனித்தனியாக நடத்திவந்தன வென்பதை அறி யக்கூடவில்லை.

இச்சபைகளின் உறுப்பினரைப் பொது மக் கள் ஆண்டுதோறும் 'குடவோலை' மூலமாகத் தேர்ந்து எடுப்பார்கள். உறுப்பினர் வித்துவான்க ளாகவும், பக்ஷபாதமில்லாதவர்களாகவும், நாற் பது வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும். வினைக்கேடு செய்தவர்களும், கடமை யைச் செலுத்தாதவர்களும், கைக்கூலி பெறுபவர் களும், அவர்களுடைய நெருங்கிய உறவினர்களும், சில குறிப்பிட்ட காலத்திற்கு உறுப்பினராக இருந்தவர்களும் தேர்ந்தெடுக்கப் படமாட்டார்கள்.

இந்தச் சங்கங்கள், வரி வசூலிப்பது, தங்கள் கடமையைக் கிராமப் பொதுமக்களுக்குப் பங்கிடுவது, நியாயம் வழங்குவது, மக்களின் தினசரி வாழ்க்கை சரிவர நடைபெறுவதற்கு அவசியமான 'வியவஸ்தை'களை விதிப்பது ஆகிய காரியங்களைக் கவனித்து வந்தன என்பது கல்வெட்டுக்களால் விளங்குகின்றது.

வரிகள்

அரசனது முக்கியமான வருமானம் நில வரியாகும். அதை வசூலிப்பது அரசாங்கத்தின் முக்கிய வேலையாகும். நன்செய், புன்செய், தோட்டக்கால் என்பனபோல நிலம் பல வகைப்பட்டிருந்தது. நீர்வளம் நிலவளத்திற்குத் தக்கவாறு தீர்வை விதிக்கப்பட்டு வந்தது. விளைவின் ஒரு பகுதியே தானியமாகவோ, காசாகவோ தீர்வையாகப் பெறப்பட்டது. அரசனுற் பல சமயங்களில் தானம் செய்யப்பட்ட இறையிலி நிலங்களும் இருந்துவந்தன.

இந் நிலவரியைத் தவிர குடிகள் வேறு பல 'சில்லிறை'களையும் கொடுத்துவந்தனர். அவற்றின் பெயர்களாகச் சாஸனங்களிற் காணப்படுவன பல. அவை பொதுவாக 'ஊரிடு வரிப்பாடு' என்று கூறப்படும் கண்ணுலக்காணம், குசக்காணம், நீர்க் கூடை, மீன்பாட்டம், தறியிறை, தாகு, தட்டாரப் பாட்டம், ஓடக்கூலி, செக்கிறை, வண்ணுரப் பாறை, காடுகாவல், உல்கு, ஈழம்பூட்சி என்பன அவற்றுட் சில. கடன், கூலி, இறை, பாட்டம்,

பூட்சி என்பன வரிகளை உணர்த்தும் சொற்களாம். கண்ணுலக்காணம் என்பது கல்யாண தினத்தன்று மணமகனும் மணமகளும் அரசாங்கத்துக்குச் செலுத்தவேண்டிய அரைக்கால் பணமாகும் என்பது முதற்பராந்தகன் காலத்துக் கல்வெட்டு ஒன்றால் தெரியவருகின்றது. உல்கு என்பது சுங்க வரியாகும். ஈழம் பூட்சி என்பது கள் இறக்குவதற்குச் செலுத்த வேண்டிய வரி. தறியிறை, தட்டாரப் பாட்டம், செக்கிறை, வண்ணரப் பாறை என்பன போன்றவை அந்த அந்தத் தொழிலைச் செய்பவர்கள் செலுத்தவேண்டிய தொழில் வரியே யாகும். இங்ஙனமாக அக்காலத்தில் குடிகள் செலுத்த வேண்டியனவாகச் சாஸனங்களில் பலவித வரிகள் காணப்பட்டாலும் அவை யாவும் எல்லாக் குடிமக்களாலும் ஒவ்வொரு வருஷத்திலும் செலுத்தப்பட வேண்டுவன என்று கொள்ளக்கூடாது.

குடிகள் தாங்கள் செலுத்த வேண்டிய வரிப் பணத்தை மூட்டு இன்றிச் செலுத்தி வந்தார்கள். சில சமயங்களில் அவர்கள் வறுமையாலோ வேறெக் காரணத்தாலோ வரி செலுத்த இயலாமல் கிராமத்தைத் துறந்து வெளியூர்களுக்குச் செல்வதும் உண்டு. ஊரைத் துறந்து வெளியில் செல்லாதவர் களைச் சில காலங்களில் படையிலார் தண்ணீரில் போட்டும், வெயிலில் நிறுத்தியும் பலவேதனை செய்து வசூல் செய்திருக்கிறார்கள்.[1]

[1] No. 159 of 1895

குடிமக்கள்

கங்கை கொண்ட சோழன் காலத்தில் நாடு சுபிக்ஷமாகவே வளங்கியது. மக்களிற் பல ஜாதியினரும் தங்கள் தங்கள நிலைமைக்கேற்பச் சுதந்தரத்துடன் ஒற்றுமை கொண்டு வாழ்ந்துவந்தார்கள். என்ரூலும, ஏழைகள் வறுமைக் காலத்தில் தங்களையும் தங்கள் சந்ததியார்களையும் அடிமைகளாக விற்றுக்கொள்ளும் வழக்கம் இருந்தது. பெண் மக்களும் சம உரிமை கொண்டிருந்தனர்.

குடிகள் பயிரிட்டு அனுபவித்துவந்த நிலங்கள் மூன்று வகைப்படும். அவை (1) குடிகளுக்கே உரிமையுள்ள வெள்ளான் வகை; (2) சில குறிப்பிட்ட காரியங்களைச் செய்வதற்காகவோ, மூன் செய்ததற்காகவோ அவரவர்கள் வாழுநாள் வரையில் பெற்று அனுபவிக்கும் ஜீவிதம், போகம் என்பவை; (3) தானமாக அளிக்கப்பட்ட பிரம்மதேயம், தேவதானம், பள்ளிச்சந்தம், சாலாபோகம் முதலியன ஆகியவையாம். அந்த நிலங்கள் எல்லாம் அவ்வப்பொழுது அளந்து தரமிட்டு வகை செய்யப்பட்டு வந்தன.

நிலங்களுக்குக் காராண்மை (பயிரிடும் உரிமை), மீயாட்சி (சொந்தக்காரன் என்னும் உரிமை) என இரண்டு உரிமைகள் உண்டு. அவற்றைத் தற்காலம் குடிவாரம், மேல்வாரம் என்று கூறப்படும் உரிமைகளோடு ஒப்பிடலாம்.

பிரம்மதேயம், தேவதானம் முதலிய நிலங்கள் பெரும்பாலும் இறையிலியாகச் செய்யப்படும். அதனால் அவற்றைப் பெற்றவர்கள் அரசாங்கம், ஊர்ச் சபை, கோயில் ஆகியவற்றில் ஒன்றுக்கேனும் பல வற்றுக்கேனும் கொடுக்க வேண்டிய வரிகளைக் கொடுக்காமல் அனுபவிக்கலாம்.

வாணிகம்

அக்காலத்தில் தமிழ் நாட்டினர் அலைகடல் கடந்து பிற நாடுகளுடன் வாணிகம் செய்து வந்தனர். மேற்கே அராபியர்களுடனும் கிழக்கே ஸ்ரீவிஜயம், சீன முதலிய தேசத்தவர்களுடனுமே முக்கியமாக வியாபாரம் செய்தார்கள். வணிகர்களுக்குள், வளஞ்சியத்தார், மணிக்கிராமத்தார், நானாதேசிகன், நகரத்தார் என்ற பல சங்கங்கள் இருந்தன. இச்சங்கங்களைச் சேர்ந்தவர்களைப்பற்றிய குறிப்புக்கள் சில, சுமத்ராவில் கிடைக்கும் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. ஹிந்து புராணக் கதைகளை விளக்குவனவாகவுள்ள சிற்பங்களைப் போல்வனவுமாகவுள்ள சிற்பங்கள் சீனதேசத்துக் கோயில்களில் காணப்படுகின்றன. இங்ஙனம் மக்கள் வெளிநாட்டாருடன் வாணிகம் செய்துவந்ததால், இத்தேசத்தில் வெளிநாட்டார் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் பொருள்களுக்குச் சுங்கம் விதிக்கப்பட்டது. அதனாலும் அரசாங்கத்துக்கு வருமானம் உண்டாயிற்று. பணமும் 'கையெழுத்து ஓலை'யின்மேல் கொடுக்கப்பட்டு

வந்ததால், நாணயச் செலாவணியும் விருத்தியாயிற்று. அக்காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து சீனா முதலிய தேசங்களுக்கு முத்து, தந்தம், பவழம், கண்ணாடிக்கல், பாக்கு, சந்தனக்கட்டை, ஏலம், பளிங்குக்கல், துணி, சாயம் தோய்த்த பட்டு நூல் கலந்த துணி ஆகியவைகளும், பலவிதமான வாசனைத் திரவியங்களும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன.

நாணயங்கள்

சோழ சாஸனங்களில் பலவிதமான நாணயங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அக்காலத்தில் தங்கக் காசுகள் வழக்கில் இருந்தன. கழஞ்சு என்னும் பெயரையுடைய தங்கக்காசுதான் பெரும்பாலும் காணப்படுகின்றது. அது சுமார் எழுபத்திரண்டு குன்றிமணி எடையுடையது. அதற்குப் பொன் என்றும் மாடை என்றும் வேறு பெயர்களும் உண்டு. கழஞ்சுக்குச் சரிபாதியான 'காசு' என்னும் நாணயம் ஒன்று இருந்தது. அக்காலத்துப் பொன் நாணயங்கள் ஒன்பதரை மாற்று உடையனவாக இருந்தன. கழஞ்சு என்பது இருபது மஞ்சாடிகளும், ஒரு மஞ்சாடி இரு குன்றிமணிகளும் கொண்டவை.

பொன் நாணயங்களைத் தவிர வெள்ளி, செம்பு ஆகியவற்றாற் செய்யப்பட்ட நாணயங்களும் வழங்கி வந்தன. கருங்காசு, ஈழக்கருங்காசு என்பன வெள்ளிக்காசுகள் எனத் தெரிகின்றது. சாஸனங்

களில், கச்சாணம் (கத்யாணம்), அக்கம், திரமம் என்பனபோல வேறு நாணயங்களின் பெயர்கள் பல காணப்படுகின்றன.

பொன் வெள்ளி நாணயங்கள் மட்ட உலோகங்கள் கலக்கப்படாமலே செய்யப்பட்டு வந்தன. எனினும், நாட்டில் குழப்பம் முதலியன ஏற்பட்டகாலத்தில் அவை கலப்பை அடைந்தன. அக்காலங்களில் அவற்றை உரைத்துப் பார்த்து அவற்றுள் உள்ள தங்கம் வெள்ளிக்கே மதிப்பிடுவார்கள்.

அளவைகள்

எடுத்தல் முகத்தல் நீட்டல் ஆகிய அளவைகளிலும் பலவகைகள் இருந்தன. அரசாங்கத்தாரால் முத்திரையிடப்பட்ட அளவைகள் நாட்டின் ஒவ்வொரு பாகத்திலும் வழங்கி வந்தன. எடுத்தல் அளவைகளுள் மிகுதியாகக் காணப்படுவது பலமே. இரண்டாயிரம் பலம், மூவாயிரம் பலம் என்று நிறுக்கப்பட்ட செய்தி கல்வெட்டுக்களால் தெரியவருவதால், சேர், மணங்கு ஆகியவை வழக்கில் இருந்தனவா என்பது ஆராய்தற் குரியது. முகத்தல் நீட்டல் அளவைகளுள் பெரும்பாலும் வழக்கத்திலிருந்தவை பின்வருவனவாகும் :—

முகத்தல் அளவை

2	செவிடு	=	1	படி
5	செவிடு	=	1	ஆழாக்கு
2	ஆழாக்கு	=	1	உழக்கு

2	உழக்கு	=	1	உரி
2	உரி	=	1	நாழி
8	நாழி	=	1	குறுணி
2	குறுணி	=	1	பதக்கு
2	பதக்கு	=	1	தூணி அல்லது காடி
3	தூணி	=	1	கலம்

நீட்டல் அளவை

8	தோரை (நெல்)	=	1	விரல்
12	விரல்	=	1	சாண்
2	சாண்	=	1	முழம்

மதங்களும் வழிபாடும்

சோழ அரசர்கள் பெரும்பாலும் சிவபக்தர்களாகவே இருந்து வந்தார்கள். அக்காலத்தில், சைவாகம பண்டிதர்களான பல அந்தணர்கள் கௌட மத்திய தேசங்களினின்றும் தமிழ் நாட்டிற்குவந்து குடியேறினர்கள். சைவமதம் தழைத்து விளங்கியது. அரசர்கள் விஷ்ணு ஆலயங்களுக்கும் பல நிலங்கள் விட்டிருக்கிறார்கள். இராஜேந்திரன் விஷ்ணு கோயில்களுக்கும் வைகானஸர்களுக்கும் பல தர்மங்கள் செய்திருக்கிறான். இவன் காலத்தில் நாகப்பட்டினத்தில் ஸ்ரீவிஜய தேசத்து அரசனால் கட்டி முடிக்கப்பட்ட பௌத்த விஹாரத்தைப் பற்றியும், அதற்கு அரசன் நிலதானம் செய்ததைப் பற்றியும் முன்னரே குறிப்பிட்டுள்ளோம்.

சோழ மன்னர்கள் வைதிக தர்மத்தையே கொண்டிருந்தாலும், அவர்கள் வடநாட்டு மன்னர் களைப்போல யாகங்கள் செய்யவில்லை. இதுகாறும் கிடைத்துள்ள சாஸனங்களிலும் யாகத்தைப்பற் றிய குறிப்பு ஒன்றும் காணப்படவில்லை. அவர்கள் தானம் செய்வதே புகழுடன் புண்ணியத்தையும் அளிக்கும் என்று கருதினர்கள்.

அவர்களும், அவர்களைப் பின்பற்றி உயர்ந்த பதவியில் வாழ்ந்த பலரும் அளித்த தானங் களும், எடுப்பித்த கோயில்களும், தோண்டிய குளங் களும் குடிகள் பலருக்கு வேலையைக் கொடுத்து வறுமையை ஒழிப்பதற்குக் காரணங்களாக இருந் தன.

வைத்திய சாலைகள்

ஏழைமக்களுக்கு உதவிசெய்ய நாட்டின் பல பாகங்களிலும் மருத்துவசாலைகள் இருந்துவந் தன. அக்காலத்தில் தஞ்சையில் 'சுந்தர சோழவிண் ணகர் ஆதுல சாலை' என்று ஒரு மருத்துவசாலை இருந்தது. அதன் பெயரினின்றும் அது சுந்தர சோழனுடைய ஞாபகார்த்தமாக நிறுவப்பட்ட தென்பது தெரியவரும். அது சரிவர நடைபெறு வதை அச் சுந்தரசோழன் மகளும், இராஜராஜன் திருத்தமக்கையுமான குந்தவை மிகவும் பரிவுடன் கவனித்து வந்தாள். அதற்குக் கொடுக்கப்பட்ட நிலம் போதாமலிருப்பதை அறிந்து அவள் இரா ஜேந்திரனுடைய ஆட்சியில் இரண்டு முறை

அதற்கு மேற்கொண்டும் நிலங்கள் அளித்திருக்கிறாள்.[1] இதைப்போன்ற மருத்துவசாலைகள் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வந்தன என்பதைக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. இத்தகைய ஆதுலசாலைகள் 'ஸவர்ணர்கள்' எனப்படுபவர்களால் மேற்பார்வை யிடப்பட்டுவந்தன. அவர்கள் வைத்திய சிரேஷ்டர்களாக விளங்கினர்கள்.[2]

திருமுக்கூடலில் இருந்த கல்லூரியில் அன்னசாலையுடன் ஓர் ஆதுல சாலையும் இருந்தது. ஆதுல சாலையை நடத்துவதற்கு ஒரு 'வைத்தியம் சொல்லுவானும்', ஒரு 'சல்லியக் கிரியை பண்ணுவானும்' மருந்துப் பொருள்களைக் கொணர்ந்து வேலை செய்வதற்கென இரண்டு ஆட்களும் நோயாளிகளுக்கு உதவி செய்ய இரு பெண்மக்களும் இருந்தார்கள்.[3] அஃது ஒரு வைத்தியக் கல்லூரியாகவும் விளங்கியது என்பது தெரியவரும். அக்காலத்தில் வைத்திய சாஸ்திரத்தைப் பயில்பவர்கள் சரகஸம்ஹிதையையும், வாக்படர் எழுதிய அஷ்டாங்கஹ்ருதயத்தையும் படித்துவந்தார்கள்.[4]

---

[1] 248 and 249 of 1923; 112, 113 of 1925

[2] 'ஸவர்ணன்' என்பான் சூத்திரியப் பெண்ணிடம் பிராமணனுக்குப பிறந்த புலோமசாதியான் எனப்படுவான் (சாஸனத் தமிழ்க்கவி சரிதம் ப. 47)

[3] 182 of 1915; E I., XXI, pp. 220 ff.

[4] 159 of 1925.

இலக்கிய வளர்ச்சியும் கல்விச்சாலைகளும்

இராஜேந்திரன் காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. இவன் இவனுடைய மக்கள் ஆகியோருடைய மெய்க்கீர்த்திகள் அழகிய நடையில் இயற்றப்பட்டுள்ளமையால் இவனுடைய அவையில் சில புலவர்கள் இருந்தனர் என்பது பெறப்படும். அக்காலத்தில் அரும்புலவர்கள் பலர் வாழ்ந்தனர் என்பதை நாம் நிச்சயமாகக் கூறலாம். யாப்பருங்கலம், காரிகை முதலியவற்றை இயற்றிய அமிதசாகரரும், அவர் மாணவர் குணசாகரரும் சற்றேறக்குறைய இவ்வரசன் காலத்தில் இருந்தவர்கள் என்று கொள்ளலாம் சிவனடியாரான கருவூர்த்தேவர் இவன் காலத்தில் வாழ்ந்தவர். இவனுடைய விருதுகளில் ஒன்றான பண்டித சோழன் என்பது இவனும் ஒரு பெரும் புலவன் என்பதை விளக்குகிறது.

"மேவிய வெண்குடைச் செம்பியன் வீரரா ஜேந்திரன்றன்
நாவியல் செந்தமிழ் சொல்லின மொழி"[1]

என்று கூறப்படுவதால் இவன் மகனை வீரராஜேந்திரன் தமிழ்ப் புலமை வாய்ந்தவன் என்பதைக் காணலாம். அவன் பெயரைச் சார்ந்தி வீரசோழியம் என்ற இலக்கணம் எழுதிய புத்தமித்திரர் இக்காலத்தவரே. திருமுறை வகுத்த நம்பியாண்டார் நம்பி இவன் இளவரசனாக இருந்த காலத்திலே வாழ்ந்தவர்.

---

[1] வீரசோழியம், சந்தி. செ. 7.

தமிழ் மொழியைப்போலவே, வட மொழியும் நன்கு போற்றப்பட்டு வந்தது என்பதும் விளங்கு கின்றது. அக்காலத்தில் வடமொழியில் எழுதப்பட்ட நூல் ஒன்றும் இப்போது கிடைக்கவில்லை. எனினும், இம் மன்னனுடைய திருவாலங்காட்டுச் செப்பேடு களின் வடமொழிப் பகுதியைக் கவனித்தால் அதை இயற்றிய நாராயணகவி மிகுந்த பாண்டித்தியம் பெற்றவர் என்பது தெரியவரும். இவனது வடமொ ழிப் பிரசஸ்தி பிறநாட்டு அரசர்களுடைய பிரசஸ்தி களிற் காணப்படுவதைப் போல வெறும் புகழ்ச்சி யுரையாக இல்லாமல் மெய்க்கீர்த்தியினைல் விளங் காத போர்ச்செயல்களை நிச்சயிப்பதற்குப் பெரி தும் உபயோகமாக உள்ளது. அது காவிய நடை யில் மிகவும் அழகாக எழுதப்பட்டுள்ளது.

இம் மன்னன் காலத்தில் நிறுவப்பெற்ற கல் லூரிகளைக் கவனித்தாலும் இது நன்குவிளங்கும். தென்னர்க்காடு ஜில்லாவில் எண்ணயிரம் (இராஜ ராஜச் சதுர்வேதி மங்கலம்) என்னும் இடத்தில் இவன் காலத்தில் ஒரு பெரிய கல்லூரி இருந்தது. அது பதினன்கு ஆசிரியர்களையும், இருநூற்று எழு பது பிரமசாரிகளாகிய சிறு மாணவர்களையும், எழு பது சாத்திரர்களாகிய பெரிய மாணவர்களையும் கொண்டிருந்தது. ஆசிரியர்களில், கோவிலில் திரு வாய்மொழியை ஓதுவதற்கு நால்வரும், ரிக்வேதம், (கிருஷ்ண) யஜுர்வேதம் ஆகிய ஒவ்வொன்றுக் கும் மூவரும், சாந்தோக (சாமவேத)த்துக்கு ஒரு

வரும், தலவகார (சாமவேத)த்துக்கு ஒருவரும், வாஜஸநேய (சுக்ல யஜுர்வேத)த்துக்கு ஒருவரும், பௌதாயநீய க்ருஹ்யஸூத்ரம், கல்பஸூத்ரம், காடகம் ஆகியவற்றுக்கு ஒவ்வொருவருமாகத் தனித் தனியே நியமிக்கப்பட்டிருந்தார்கள். மாணவர்களுக் குத் தினந்தோறும் கங்கை கொண்ட சோழன் மண்டபத்தில் சாப்பாடு போடுவதற்கும், ஆசிரியர் களுக்கு நெல்லும் பொன்னும் கொடுப்பதற்கும் இரண்டு கிராமங்களில் நாற்பத்தைந்து வேலி நிலம் தானம் செய்யப்பட்டது.

இச்செய்தியைத் தெரிவிக்கும் கல்வெட்டு வேறு பல அரிய விஷயங்களையும் கூறுவதால் மிகவும் முக்கியமானது.[1] அக்காலத்தில், அதர்வவேதத்தை அத்தியயனம் செய்பவர்கள் இருந்தார்கள் என்றும், வியாகரணத்தில் தர்மகீர்த்தி என்பார் எழுதிய ரூபா வதாரம் என்னும் நூலும் பிரபாகர மீமாம்ஸையுமே பெரிதும் பயிலப்பட்டு வந்தன என்றும் தெரிய வருகின்றது. வைஷ்ணவ ஆசார்யரான இராமா நுஜர் பிரும்மசூத்திரத்துக்குப் பாஷ்யம் எழுதுவ தற்கு முன்னமேயே, விசிஷ்டாத்வைத பரமான வேதாந்தம் இருந்துவந்தது என்பதும் அறியப்படு கின்றது.

மேற்கூறிய எண்ணைபிரம் கோயிலில் உள்ள மற்றொரு கல்வெட்டில் 'ஜாதக தக்ஷிணை' கொடுக்

[1] 333 of 1917; M. E. R 1918, p, 147

[2] 343 of 1917

கும் வழக்கமும் காணப்படுகின்றது. இது படிப்பு முடிந்தவர்களுக்குப் பட்டமளிப்பதைப் போலக் கிருஷ்ணன் (வெண்ணெய்க்கூத்தன்) பிறந்த தின மான ஜயந்தி அஷ்டமியில், பொற்பூவும் பொன் மோதிரமும் கொடுப்பதைக் குறிப்பதாகும்.

அவ்வூரிலேயே ஒரு தர்மப் பள்ளி நிறுவுவதற் கும் வேண்டிய நிவந்தங்கள் கொடுக்கப்பட்ட செய் தியை மற்றொரு கல்வெட்டு தெரிவிக்கின்றது.

இதைப் போன்ற கல்லூரிகள் நாட்டின் பிற பாகங்களிலும் இருந்துவந்தன. திருபுவனி என்னு மிடத்தில் ஒரு கல்லூரி நிறுவப்பட்டு, அதில் அதி கப்படியாக இராமாயணம், பாரதம், மநுதர்ம சாஸ் திரம் வைகானஸ சாஸ்திரம், சத்யாஷாட சூத்திரம் முதலியனவும் பாடம் சொல்லப்பட்டு வந்தன.[1]

இவற்றால், அக்காலத்தில் கல்வி சிறந்துபரந்து உன்னத நிலையிலிருந்ததென்பது நன்கு விளங்கும்.

இராஜேந்திரன் பெருமை

இதுகாறும் கூறியவற்றால் கி. பி. பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியில் சோழ மண்டலத்திலே சக்கரவர்த்தியாக வீற்றிருந்து தமிழகத்தையும் அதற்கப்பாலுள்ள பிறநாடுகளையும் ஆட்சிபுரிந்த முடியுடை வேந்தனை கங்கை கொண்ட சோழன் எனப்படும் முதலாம் இராஜேந்திர சோழதேவ னுடைய வரலாற்றையும் இவன் காலத்தில் நாட்டு

---

176 of 1919

மக்கள் நடத்திய வாழ்க்கையையும் ஒருவாறு உணரலாம். சோழ ராஜ்யத்தை மகோன்னத ஸ்திதிக்குக் கொணர்ந்துவைத்துத் தமிழர்களுடைய புகழ், கடல் கடந்து சீன தேசம் வரையில் எட்டும்படிச் செய்த இவனைத் தமிழர்கள் மறக்க முடியுமா ?

தஞ்சைப் பிருஹதீச்வரர் கோயிலில் " தஞ்சை பெரிய கோயில் ராசராசேந்திர சோழ மகாராசா " என்று பீடத்தில் பொறிக்கப்பட்டுள்ள செப்பு விக்கிரகம் ஒன்று இருக்கிறது.[1] இது பிற்காலத்து வேலைப்பாடு உள்ளதாகக் காணப்படுவதால் இம் மன்னன் காலத்தில் வார்க்கப்பட்ட பிரதிமமாக இருத்தற்கில்லை. எனினும், இதை இராஜேந்திரனுடைய பிரதிமமாகக் கருதுவோமானால், நாட்டு மக்கள் இவனை மறக்கவில்லை என்பதைக் காணலாம்.

இவனுடைய கீர்த்தி நீடுழி காலம் சிறந்தோங்கி வளர்க !

---

[1] M. E. R, 1925, p. 81

அநுபந்தம், 1

இராஜேந்திரன் மெய்க்கீர்த்தி

திருமன்னி வளர இருநில மடந்தையும்
போர்ச்சயப் பாவையும் சீர்த்தனிச் செல்வியும்
தன்பெருந் தேவிய ராகி இன்புற
நெடிய வூழியுள் இடைதுறை நாடும்
தொடர்வன வேலிப் படர்வன வாசியும்
சுள்ளிச் சூழ்மதிற் கொள்ளிப் பாக்கையும்
நண்ணரு முரண மண்ணைக் கடக்கமும்
பொருகட லீழத் தரசர்த முடியும்
ஆங்கவர் தேவியர் ஒங்கெழில் முடியும்
முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த
சுந்தர முடியும் இந்திரன் ஆரமும்
தெண்டிரை ஈழ மண்டல முழுவதும்
எறிபடைக் கேரளர் முறைமையிற் சூடும்
குலதன மாகிய பலர்புகழ் முடியும்
செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத்
தொல்பெருங் காவற் பல்பழந் தீவும்
செருவிற் சினவி இருபத் தொருகால்
அரசுகளை கட்ட பரசு ராமன்
மேவருஞ் சாங்கிமத் தீவரண் கருதி
இருத்திய செம்பொற் றிருத்தகு முடியும்
பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்
டொளித்தசய சிங்கன் அளப்பரும் புகழொடும்
பீடியல் இரட்ட பாடி ஏழரை
இலக்கமும் நவநிதிக் குலப்பெரு மலைகளும்
விக்கிரம வீரர் சக்கரக் கோட்டமும்

முகிர்பட வல்லி மதுர மண்டலமும்
காமிடை வலிநகர் நாமணிக் கோண மும்
வெஞ்சில வீரர் பஞ்சப் பள்ளியும்
பாசடைப் பழன மாசுணி தேசமும்

அயர்வில்வண் கீர்த்தி ஆதி நகர்வயிற்
சந்திரன் தொல்குலத் திந்திர பதீன
விளை அமர்க் களத்துக் கிளை யோடும் பிடித்துப்
பலதனத் தொடுநிறை குலதனக் குவையும்
இட்டருஞ் செறிமிளை ஒட்ட விஷய மும்

பூசுரர் சேர்ந்நற் கோசலை நாடும்
தண்ம பாலனை யெம்முனை யழித்து
வண்டுறை சோலைக் கண்ட புத்தியும்
இரண சூரனை முரணுகத் தாக்கித்
திக்கணை கீர்த்தித் தக்கண லாடமும்

கோவிந்த சந்தன் மாவிழிந் தோடத்
தங்காத சாரல் வங்காள தேசமும்
தோடுகடற் சங்குகா டடன்மஹி பாலனை
வெஞ்சமர் வளாகத் தஞ்சுவித் தருளி
ஓண்டிறல் யானையுந் பெண்டிர்பண் டாரமும்

நித்தில நெடுங்கட லுத்தர லாடமும்
வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனற் கங்கையும்
அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்திச்
சங்கிராம விசயோத் துங்க வர்ம்மன்
ஆகிய கடாரத் தரசனை வாசையம்

பொருகடல் குட்டக் கரியொடு மகப்படுத்
தரிமையில் பிறக்கிய பெருந்திப் பிறக்கமும்
ஆர்த்தவ னைகனகர்ப் போர்த்தொழில் வாசலில்
விச்சா தரத்தோ ரணமும் மொய்தொளிர்

புனைமணிப் புதவமும் கனமணிக் கதவமும்
நிறைசீர் விஷயமும் துறைநீர்ப் பண்ணையும்
வன்மலை யூரெயிற் றெண்மலை யூரும்
ஆழ்கட லகழ்சூழ் மாயிரு டிங்கமும்
கலங்கா வல்வினை இலங்கா சோகமும்
காப்புறு நிறைபுனல் மாப்பப் பாளமும்
காவலம் புரிசை மேவிலிம் பங்கமும்
விளைப்பங் தூறுறை வளைப்பங் தூறும்
கலைத்தக் கோர்புகழ் தலைத்தக் கோலமும்
நீதமர் வல்வினை மாதமர் லிங்கமும்
கலாமுதிர் கடுங்கிறல் இலாமுரி கேசமும்
தேனக்க வார்பொழில் மாகக்க வாரமும்
தொடுகடற் காவற் கடுமுரட் கடாரமும்
மாப்பொரு கண்டாற் கொண்ட கோப்பரகேசரி
வன்மரான உடையார் ஸ்ரீராஜேந்திர சோழ தேவர்க்கு
யாண்டு :

அநுபந்தம், 2

கருவூர்த் தேவர் பாடிய திருவிசைப்பா

கங்கைகொண்ட சோளேச்சரம்

அன்னமாய் விசும்பு பறந்தயன் றேட
அங்கனே பெரியீ சிறிய
என்னையாள் விருப்பி யென்மனம் புகுந்த
எளிமையை யென்றுகான் மறக்கேன்
முன்னமா லறியா வொருவனு மிருவா
முக்கணு நாற்பெருந் தடந்தோட்
கன்னலே தேனே யமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (1)

உண்ணெகிழ்ந் துடலநெக்குமுக் கண்ணு
ஓலமென் றேலமிட் டொருநாள்
மண்ணினின் றலறேன் வழிமொழி மாலை
மழலையஞ் சிலம்படி முடிமேற்
பண்ணினின் முருகேன் பணிசெய னெனினும்
பாவியே னுயிருள் புகுந்தென்
கண்ணினின் றகலா னென்கொலோ கங்கை
கொண்டசோ ளேச்சரத தானே. (2)

அற்புதத் தெய்வ மிதனின்மற் றுண்டே
அன்பொடு தன்னையஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளமள் ளூறும்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்

பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பீண முலையும்
கற்பகப் பொழிலு முழுதுமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (3)

ஐயபொட் டிட்ட வழகுவா ணுதலும்
அழகிய விழியும்வெண் ணீறும்
சைவம்விட் டிட்ட சடைகளுஞ் சடைமேல்
தாங்கமுஞ் சதங்கையுஞ் சிலம்பும்
மொய்கொளெண் டிக்குங் கண்டநின் றெரண்டர்
முகமலர்ந் திருகணீ ரரும்பக்
கைகண்மொட் டிக்கு மென்கொலோ கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (4)

சுருதிவா னவனுந் திருநெடு மாலாம்
சுந்தர விசும்பினிற் றிரண்ட
பருதிவா னவனும் படர்சடை முக்கட்
பகவனு மகவுயிர்க் கமுதாம்
எருதுவா கனனு மெரிசிலகண்மூன் றெரித்த
ஏறுசே வகனுமாம் பின்னும்
கருதுவார் கருது முருவமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (5)

அண்டமோ ரணுவாம் பெருமைகொண் டணுவோர்
அண்டமாஞ் சிறுமைகொண் டடியேன்
உண்டஆ ணவனக்காம் வகையென துள்ளம்
உள்கலந் தெழுபரஞ் சோதி
கொண்டநாண் பாம்பாம் பெருவரை வில்லிற்
குறுகலர் புரங்கண்மூன் றெரித்த

கண்டனே நீல கண்டனே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (6)

மோதலைப் பட்ட கடல்வயி றுதித்த
முழுமணித் திரளமு தாங்கே
தாய்தலைப் பட்டங் குருகியோன் முய
தன்மையி லெண்ணமுன் னின்ற
நீதலைப் பட்டா லியானுமவ் வகையே
நிசிசர னிருவரோ டொருவர்
காதலிற் பட்ட கருணையாய் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (7)

தத்தையங் கணையார் தங்கண்மேல் வைத்த
தயாவைநூ றுயிரங் கூறிட்
டத்திலங் கொருகூ றுண்கண்வைத் தவருக்
கமருல களிக்குநின் பெருமை
பித்தனென் றுருகாற் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தல மடியேன் சென்னிவை கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (8)

பண்ணிய தழல்காய் பாலளா நீர்போற்
பாவமுன் பறைந்துபா லணைய
புண்ணியம் பின்சென் றறிவினுக் கறியப்
புகுந்தமே தார் யோகினிற் பொலிந்து
நுண்ணியை யெனினு நம்பநின் பெருமை
நுன்னிடை யொடுங்கவே வந்தென்
கண்ணினுண் மணியிற் கலந்தனை கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (9)

அங்கைகொண் டமரர் மலர்மழை பொழிய
அடிச்சிலம் பலம்பவந் தொருநாள்
உங்கைகொண் டடியேன் சென்னிவைத் தென்னை
உய்யக்கொண் டருளினை மருங்கிற்
கொங்கைகொண் டணங்குங் கொடியிடை காணிற்
கொடியளென் றஞ்சடை முடிமேற்
கங்கைகொண் டிருந்த கடவுளே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (10)

மங்கையோ டிருந்தே யோகுசெய் வானை
வளரிளந் திங்களை முடிமேற்
கங்கையோ டணியுங் கடவுளைக் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானை
அங்கையோ டேந்திப் பலிதிரி கருவூர்
அறைந்தசொன் மாலையா லாழிச்
செங்கையோ டுலகி லரசுவீற் றிருந்து
நினைப்பதுஞ் சிவனருட் கடலே. (11)




இலங்கை
சோழ
மண்டலம்

சோழ வமிசாவளி



குறிப்பு :— பெயர்களுக்கு முன்னுள்ள எண்கள், அவர்கள் சோழ சிங்காதனத்துக்கு அரசர்களாகவோ, இளவரசர்களாகவோ உரிமையாற் கொண்ட முறைமையைக் குறிக்கின்றன.

சோழ சளுக்கியர் சம்பந்தம்



கன்றுங் கனியுதவும்

ஆராய்ச்சி உரை எழுதுவதிற் கைதேர்ந்த

பண்டிதர். L. உலகநாத பிள்ளை அவர்கள்

இயற்றியது

சில முக்கிய அபிப்பிராயங்கள்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் திருவாளர் ராவ் சாகேப் த. வே. உமாமகேசுரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்., எழுதுவது:—

* * சங்க நூற்றொகையினைப் பயிலும் விருப்புடையோர்க்குச் சிறந்ததோர் கிறவுகோலாகும். இத்தகைய அருமைகள் வாய்ந்த நூல், இற்றை நாளில் காண்டலருமை யாதலால், தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இதனைக் கற்கும் கடப்பாடுடையார்.

* * *

நவசக்தி :— * இந்நூலின் உள்ளுரையும், உரைநடையும் பிறவும் பல்கலைக் கழகத்தார் கருத்தை ஈர்க்கும் என்றே நம்பு கிறோம். இப் பதிப்பு நல்ல காகிதத்தில் அழகிய எழுத்தில் பலகிற வனப்புகளுடன் வெளிவந்திருத்தல் மகிழ்ச்சியை ஊட்டுகின்றது.

* * *

மகிபாலன்பட்டி, பண்டிதமணி திரு மு. கதிரேச செட்டியார் அவர்கள் :—* விழுமிய பொருள்களைத் தெளிவுற விளக்கிச் செல்லும் இனிமை மிக்க தூய செந்தமிழ் நடையான் அமைந் துளது. * கருத்துக்கள், பண்டைத் தமிழ் நூல்களின் பயிற்சிக்கு வழிகாட்டும் இயல்பின.

மானேஜர், விவேக போதினி காரியாலயம், மயிலாப்பூர், சென்னை

முதலாம் கரிகாலன்

என்ற

சோழன் கரிகாற் பெருவளத்தான்

(ஓர் ஆராய்ச்சி)

இதுவும்

பண்டிதர் L. உலகநாதப் பிள்ளை அவர்கள்

இயற்றியது

பொருளடக்கம்

---

(1) சோழர்கள் தமிழர்

(2) கரிகாலன் காலம்

(3) கரிகாலன் வரலாறு

(4) கரிகால்வளவன் வென்றி மேம்பாடு

(5) கரிகாலன் இறைமாட்சி

(6) பெருவளத்தான் வாணிகத் துறையை வளம்படுத்தது

(7) திருமாவளவன் காலத்திற் சேந்தமிழ் நிலைமை

(8) திருமாவளவன் சமயக் கொள்கையும் பிறவும்

விலை அணா 12

மானேஜர், விவேக போதினி காரியாலயம், மயிலாப்பூர், சென்னை

ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் வங்காளியில் எழுதிய

குமுதினி

ஆசிரியர் அனுமதியுடன் ஸ்ரீமதி ரங்கநாயகி

மொழி பெயர்த்தது.

ரூ. 1—8—0

சுமார் 400 பக்கங்கள் — நல்ல கிளேஸ் காகிதம்

சில முக்கிய அபிப்பிராயங்கள்

தாநந்தல் இஸ்லாம்:—* முதல் பக்கம் முதல், கடைசிப்பக்கம் வரையில், 'அடுத்தது என்ன' என்று வாசகர்கள் கேட்கக் கூடிய உணர்ச்சியையும் உற்சாகத்தையும் பெருக்கிக்கொண்டே போகும் முறையிலேயே, இக்கதையின் போக்கு அமைக்கப்பட்டிருக்கிறது.

தினகரன் :—* மானிட வாழ்க்கையில் ஏற்படும் பல துன்பங்களை, உணர்ச்சி ததும்பும் முறையில் நாவலாசிரியர் சித்திரித்துக் காட்டியிருப்பது போற்றத்தக்கது.

தனவணிகன் :—* எளிய தமிழில், இனிய நடையில் டாகூர் அவர்களின் கதையை விளங்கவைத்த பெருமை அம்மை யாரைச் சார்ந்தது.

சேட்டிநாடு:—* பல தத்துவங்களைக்கொண்ட இக்கதையை அம்மையார் மொழிபெயர்க்கத் தணிந்தது அவர்களது மனோதைரி யத்தைக் காட்டுகிறது.

(தபால், வி. பி. செலவு தனி.)

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

விஜயா

டாக்டர் சரத் சந்த்ர சட்டர்ஜி எழுதிய நாவல்களுள் முதன்மையானது. "இந்திரா" "ராஜனி" என்னும் பங்கிம் சந்த்ரர் நாவல்களை மொழிபெயர்த்த ஸ்ரீ S. குருஸ்வாமி பி. ஏ., தமிழில் மொழிபெயர்த்தது.

——— ரூ. 1—8—0 ———

சிறப்புரைகளிற் சில

ஜோதி :— * வாசிப்பதற்குச் சுவையா யிருக்கிறது. ஸ்ரீ குருஸ்வாமி, இதைச் சுவை குன்றுமல் மொழிபெயர்த்திருக்கிறார்.

கலைமகள் :— * இந்நவீனம் படிப்பதற்கு மிக்க ஸ்வாரஸ்யமா யிருக்கிறது. ஒவ்வொரு புத்தகாலயத்திலும் வைப்பதற்கேற்ற நூல்.

The Mail:— The style of the translation is good & expressive and the story is free flowing.

ஜயபாரதி :— * மொழிபெயர்ப்பு நடை சிறப்பா யிருப்பதைக் குறிப்பிடவேண்டும். சரளமான பாஷையில், சொந்தத் தமிழ்க் கதைபோல், 'அந்நிய' சொற்றொடர் இல்லாமல் மொழிபெயர்த்திருப்பதை, தமிழ் இலக்கியத்திற்கு ஒரு தொண்டெனக் கூற வேண்டும். புஸ்தகம் அச்சுப்பிழையில்லாமல் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. நல்ல பைண்ட் கட்டடத்திலிருக்கும் இப்புஸ்தகம் பிரசுராலயத்திற்குப் பெருமை யளிப்பதாகும்.

குமரன் :— * ஆடவரும் பெண்டிரும் படித்து இன்புறலாம். இதுமாதிரி வங்காள மொழியிலுள்ள பல இனிய கதைகளையும், நாவல்களையும் மொழிபெயர்த்துத் தமிழுலகுக்குத் தந்துவரும் அல்லயன்ஸ் கம்பெனியாரின் தொண்டு பெரிதும் போற்றத்தக்கது.

பாரத மணி :— * ஸ்ரீ குருஸ்வாமியின் மொழிபெயர்ப்பு வாசிப்பதற்கு எளிதாகவும் நல்ல ஓட்டம் கொண்டதாகவும் இருக்கிறது. கலிக்கோ பைண்டில், இவ்வளவு அழகாக, ரூ. 1—8—0 விலைக்கு 300-பக்கங்கள் கொடுத்திருப்பது அல்லயன்ஸ் கம்பெனியாரின் சிறப்பாகும்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.